T. O. R. C. 1129
R. R. NO. 4-14-1904
Vol II

ஏவணிகில வர்த்தகம்

J111,2J5H,M
31 N04
120617 1904

The Dravidian Research Institute Series No. 1.

4/2 4-1904

SHAKESPEARE'S
MERCHANT OF VENICE
IN TAMIL

BY

S. V. Kallapiran Pillai, B.A.

Madras:
THOMPSON AND CO.

1904.
[*All Rights Reserved.*]

Price Re. 1.

வெனிஸ் வர்த்தகன்

வெனிஸ் வர்த்தகன்

இது,

எஸ். வி. கள்ளப்பிரான் பிள்ளை, பி. ஏ,

இயற்றியது.

சென்னை:

மினெர்வா அச்சுக்கூடத்திற்

பதிப்பித்தது.

1904.

120617

PRINTED BY THOMPSON AND CO.,
AT THE "MINERVA" PRESS, 33, POPHAM'S BROADWAY.

PREFACE.

IN these days of varied activity in different departments of knowledge, the Tamil Literature has had its share in no inconsiderable measure. In every language, the Grammar follows the Literature as a rule. Though the Tamil Grammar classifies the Literature into three divisions, namely, *Poetry proper, Music* and *Drama*, not a single work of the last class is extant in the whole range of Tamil Literature. There are, however, clear indications that such works originally existed in it, inasmuch as the commentators like Nachinárkkiniyar, Adiyárkkunallár and others quote from such works as *Kûtta Nûl, Malhivânar Nâtaka Tamil*, but these subsequently disappeared. At any rate, for a very long time Drama was wanting and its want was felt only by a small minority of Tamilians who were well acquainted with Tamil and Sanskrit, as in the latter they found the brilliant works of Kalidas, the Shakespeare of India. But as English education spread and the Tamil students came in contact with Shakespeare's dramas and saw the works of Shakespeare and Kalidas prescribed by the University for the degree examinations and read side by side in the College Classes, the want of similar works in the Tamil Literature was felt all the more keenly. It is always true that

never does time fail to supply an article when there is a demand for it. In 1891, the late lamented Professor P. Sundram Pillai, M.A., an accomplished Tamil Scholar and Philosopher, published his "Manonmaniam" an original drama in Tamil. This was the first work of its kind. Though this work was meant for the study and not for the stage, it was purely after the model of Shakespeare. After him, some took to writing dramas in original, some to translating the interesting and instructive dramas of Shakespeare and Kalidas, and some others to making adaptations from them. I have translated "The Merchant of Venice" one of the popular comedies of Shakespeare and my sole object in so doing is to place before the Tamil-knowing public and especially before the Tamil Pandits, a drama by Shakespeare as it is, and thereby to induce the Pandit class to enrich the Tamil Literature with new writings on this line. As the Pandits have generally more attraction for poetry than for prose, the poetical portion of the English Drama has been translated into poetry in *Agaval* metre which more or less approaches the English blank verse, and the prose portion into prose. Written, as it has been, in haste amidst diverse distractions, the work may, no doubt, be found to be capable of much improvement. But it is nevertheless published in the hope that it will not only invite more scholarly attempt in the same direction, but will give the Tamil public an

idea of what an English Drama is, how plots are developed, how different characters are represented and made to give general truths and morals in an attractive manner and how nature and natural scenes are truly depicted as they are. If this my object is gained even in the least, I shall feel more than compensated for my labour in this field. While translating this work, it was my aim throughout to make the rendering easy and intelligible and to bring out as accurately as possible the precise meaning of the original without at the same time falling into classical obscurity. I trust that even an average Tamil student will find no difficulty in following this work with ease and interest, not to speak of the Pandit class who will have nothing to complain of the style though the ideas here and there may be foreign to them.

My thanks are due to Mr. K. Kuppuswami Mudaliyar, B. A. of the Educational Department of the Secretariat, and to Mr. V. M. Satakoparamanuja Chariyar, Tamil Pandit of the C. S. M. College, Madras, for the help rendered to me in seeing this work pass through the Press and for many valuable suggestions they have made during the progress of this work.

CONJEEVERAM,
20th February, 1904.

S. V. K.

முகவுரை.

பற்பல கலைகளும் விருத்தியாகின்ற இக்காலத்தில் தமிழும் விருத்தியடையாதிருக்கவில்லை. ஒவ்வொரு பாஷையிலும் இலக்கியம் தோன்றியபின்பே இலக்கணமுண்டாகுதலுண்மை. தமிழ்நூலுடையார் இலக்கியத்தை இயல், இசை, நாடகம் எனப்பிரித்துளார். ஆகவே முற்காலத்தில் இம் முத்தமிழ் நூல்களுமிருந்தனவென்பதில் சிறிதும் ஐயமில்லை. நச்சினார்க்கினியர், அடியார்க்குநல்லார் முதலிய ஆசிரியர்களின் உரையாலும் இது வெளியாகும். ஆயினும் தற்காலத்தில் பழயனவாகிய நாடகத் தமிழ் நூல்கள் ஒன்றுமில்லை. அவை ஒழிந்ததற்குக் காரணமும் புலப்படவில்லை. இவ்வாறு நாடக நூல்களில்லாதிருந்தமை தமிழுக்கு ஒரு பெருங்குறைவாக நெடுங்காலமிருந்தது. இக்குறை தமிழோடு சமஸ்கிருதத்திலும் வல்லோருக்கே பெரும்பான்மை தெரிந்திருந்தது. பின்னர் ஆங்கிலபாஷை இத்தேசத்திற் பரவத்தொடங்க அப்பாஷையில் பயின்று அதிலுள்ள ஷேக்ஸ்பியரின் நாடகங்களைக் கற்றுணர்ந்தோருக்கும் இக்குறை புலனாயிற்று. குறைவு நிறையும் என்பது எக்காலத்தும் நிச்சயம். திருவனந்தபுரத்து மகாராஜா கல்லூரியில் தத்துவசாஸ்திர போதகாசிரியராயிருந்தவரும் ஆங்கிலத்தோடு தமிழிலும் வல்லவருமாகிய ம-ள-ள-ஸ்ரீ சுந்தரம் பிள்ளையவர்கள், 1891-ம் வருஷம் "மனோன்மணீயம்" என்னும் நாடகத்தையியற்றினர். அது ஷேக்ஸ்பியர், காளிதாசன் முதலியவர்களின் நாடகத்தைப்போன்றது. ஆயினும் அது அரங்கங்களில் நடிக்கத்தக்கதன்று. அதன்பின் அம்மாதிரியாக நவீன நாடகங்களியற்றவும், சமஸ்கிருத ஆங்கில நாடகங்களை மொழிபெயர்க்கவும், அவைகளை அநுசரித்துப் பிறவற்றையெழுதவும் சிலர் தொடங்கினர். வடமொழியிற்

முகவுரை.

காளிதாசனுக்குச் சமமான ஆங்கிலநாடகக் கவியாகிய ஷேக்ஸ்பியர் செய்த நாடகங்களில் யாவரும் மெச்சும்நாடகமாகிய 'வெனிஸ்வர்த்தகன்'' என்பதை யானும் தமிழில் மொழிபெயர்த்தனன். ஆங்கில பாஷையிற் பழகாத தமிழ் வித்வான்கள் அப்பாஷையிலுள்ள நாடக மித்தன்மைய தென்றறிந்து தற்காலத்திற்குத் தக்கபடி நவீன நாடகங்களியற்றித் தமிழ்ப்பாஷையை விருத்திசெய்து தமிழருக்கு இன்பம் விளைத்து நல்லறிவூட்டல் மிக்க நலம் எனும் ஆசை தூண்ட இதனைச் செய்துளேன். தமிழ் வித்வான்கள் பொதுவாக வசன நூல்களைப் பெரிதும் கருதாராதலின் ஆங்கிலக்கவி பாட்டாக இயற்றியிருப்பதைப் பெரும்பான்மையும் அப்பாவினை ஒத்துவிளங்கும் அகவற்பாவிலும், அவர் வசனமாக வெழுதியிருப்பதை வசனத்திலும் எழுதியுள்ளேன். இந்நாடகத்தில் சிற்சில விடங்களில் காணப்படும் கருத்துக்கள் தமிழருக்கு நூதனமாயிருக்கும்.

எனது உத்தியோகத்திற்கிடையில் அவ்வக்காலங்களிற் கிடைத்த அவகாசத்தில் இதனை எழுதினேனாதலின், இதிலுள்ள பிழைகளையும் குறைகளையும் கற்றோரு மற்றோரும் பொறுத்துக்கொள்ளுவாராக.

இந்நூலினை அச்சிடும்போது உடனின்றுதவிய ம-ா-ா-ஸ்ரீ கல்குளம் - குப்புசாமி முதலியாரவர்கட்கும், ம-ா-ா-ஸ்ரீ வை. மு. சடகோபராமானுஜா சாரியாரவர்கட்கும் வந்தனமளிக்கின்றேன்.

காஞ்சீபுரம்,
20—2—1904 } ஸ்ரீ. வை. க.

பொருளடக்கம்.

பக்கம்.

I. நூன்முகம் ...
 1. ஷேக்ஸ்பியரின் சரித்திரச்சுருக்கம். ... xiii
 2. கதையின் சுருக்கம். ... xv
 3. களங்களிற் கூறியுள்ள விஷயச்சுருக்கம். ... xix
 4. நாடகப் பாத்திரங்கள். ... xxvi
II. நூல் ... ... 1—169
III. அனுபந்தம் ... ... 1—14

ஷேக்ஸ்பியரின் சரித்திரச் சுருக்கம்.

"வெனிஸ் வர்த்தகன்" என்னும் நாடகமியற்றியவர் வில்லியம் ஷேக்ஸ்பியர் என்பவர். இவர் கி. பி. 1564-ம் வருடத்தில் இங்கிலாந்து தேசத்திலுள்ள வார்விக்ஷயர் என்னும் நாட்டில் ஏவன் நதிக்கரையிலிருக்கும் ஸ்ட்ராட்போர்ட் என்னு மூரில் பிறந்தவர். மேரி ஆடேன், ஜான் ஷேக்ஸ்பியர் என்போர் முறையே இவர்தம் தாய்தந்தையர். அவர்கள் சாதாரண ஜீவனமுடையவர்கள். இவர் ஏழுவயதில் வித்தை கற்க ஆரம்பித்துப் பதினான்கு வயதில் பள்ளிவிட்டகன்றனர். அது முதல் இவர் ஒரு நியாயவாதியின் இலேககராக விருந்ததாகத் தோன்றுகிறது. 1582-ம் ஆண்டில் தன்னிலும் எழு வயது அதிகஞ் சென்ற ஆன்ஹாத்வே என்பவளை விவாகஞ் செய்து கொண்டார். 1587-ம் வருஷத்தில் "குவீன்ஸ் கம்பெனி" என்ற நாடகச் சபையார் ஸ்ட்ராட்போர்டில் நடித்தனர். அச்சபையாருடன் இவரும் சேர்ந்து லண்டன் நகரஞ்சென்றார். பிறகு நடித்தற்கு வேண்டும் நாடகங்கள் எழுதத்தொடங்கி, 37 நவீனநாடகங்களியற்றினர். அவைகளில் சில சந்தோஷமாய் முடிபவை. சில துக்கமாய் முடிபவை. சில சரித்திரக்கதைகளையுட்கொண்டவை. அவர் 1616-ம் வருஷம் தேகவியோகமானார். அவர் சமஸ்கிருதத்தில் நாடகங்களியற்றியிருக்கிற காளிதாசனைப்போல் மிகச் சிறந்த நாடகக்கவி. அவருடைய நாடகங்களில் அருமை பெருமையுள்ள அநேக விஷயங்களடங்கி யிருக்கின்றன. இயற்கைப் பொருள்களின் வருணனைகளும், அக்காலத்து நடை உடை பாவனைகளும், மானிட சுபாவங்களும், நன்னீதிகளும், அந்நாடகங்களில்

நிறைந்துள்ளன. எந்த நாடகத்தை எவ்விடத்தில் வாசிக்கினும் ஆங்காங்கே ஆனந்தம் சனிப்பதுடன் நுட்பமான விஷயங்களும் தோன்றும். இவர் ஒரு வரகவியென்றே மதிக்கத்தக்கவர். ஆங்கிலேயபாஷையிலும் மற்றைய மேனாட்டுப் பாஷைகளிலும் இவருக்கு முன்னும் பின்னும் இருந்தவர்களிலும், இப்பொழுதிருப்பவரிலும் இவரே தலைமையான நாடகக்கவி. எனவே இவருக்கு ஒப்பாருமிக்காருமில்லை யென்பது தேற்றம். இவர் பண்கனிந்த சில பாடல்களும் இயற்றியுள்ளார்.

கதையின் சுருக்கம்.

வெனிஸ் நகரத்தில் அந்தோனியோ, பசானியோ என்னுமிரண்டு நண்பர்களிருந்தனர். அவர்களில் அந்தோனியோ அதிகச் செல்வமுடையவராயும், அநேக கப்பல்கள் வைத்து வியாபாரஞ் செய்கிறவராயுமிருந்தனர். பசானியோ தமக்குள்ள திரவியமெல்லாம் போய் வறியராயிருந்தார். ஆயினும் பெல்மண்டு நகரத்தில் மிக்க ஐசுவரியமுடைய ஒரு பெண்ணைக் கலியாணஞ்செய்ய விச்சையுடையவராயிருந்ததால், அந்தோனியோ விடத்தில் 3000 பொன் கடன் கேட்டார். அவரிடத்தில் அக்காலத்தில் அவ்வளவு பொன் கையிலில்லை யாயினும், ஷைலாக் என்னும் ஒரு யூதனிடத்திலிருந்து கடன் வாங்கிக் கொடுக்கத் துணிந்தனர். அந்த யூதன் அதமாதமனானதால் அவனிடம்கடன்பெறப் பசானியோவுக்குப் பிரியமில்லை. ஆயினும் சில நாட்களில் கப்பல்கள் வந்து சேருமென்கிற நம்பிக்கையிருந்ததால், அந்தோனியோ அந்தயூதனிடத்திற் கடன் வாங்க விசைந்தனர். அவனைக் கடன் கேட்க. அவனும் வட்டியில்லாமல் ஜனங்களுக்குக் கடன் கொடுத்துத் தனக்கு வரும் இலாபத்தைக் கெடுத்துக்கொண்டிருந்த அந்தோனியோ தன் கைவசப்படுவதை யுன்னிக், கடன் கொடுக்கச் சம்மதித்தான். அகப்பட்டால் விடக்கூடாதென்கிற துர்ப்புத்தியால், குறித்த நாளில்தொகையைச் செலுத்தாவிட்டால் அந்தோனியோவின் ஹிருதயத்தில் ஓரிராத்தற்றசை யறுத்துக் கொள்வதே யந்தப் பணத்திற்கு ஈடென்று சாசனமெழுதி முடித்துக் கொண்டான்.

இப்பணத்தைப் பெற்றுக்கொண்டு பசானியோ பெல்மண்டு நகரத்திற்குச் சென்றார். அவ்விடத்தில் போர்ஷியா என்னும் ஒரு பெண்மணி யிருந்தாள். அவளுடைய தகப்பனார்

தெய்வ பக்தியிற்சிறந்தவராக விருந்ததால், பொன், வெள்ளி, ஈயம் இவைகளால் மூன்று பேழைகளை யமைத்து, ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பதுமையையும், அந்தப் பிரதிமைக்குத் தகுந்த வசனத்தையு மமைத்து, பொன், வெள்ளிப் பேழைகளில் கோரரூபப் பதுமைகளை வைத்தும், ஈயப் பேழையில் **போர்ஷியா**வின் பதுமையை வைத்தும் பேழைகளைப் பூட்டித் திறவுகோல்களை யவளிடத்தி லொப்புவித்து, அவளுடைய படமிருக்கிற பேழையைத் தெரிந்தெடுப்பவனை மணம் புரியும்படி, அவளுடைய அந்தியதசையில் அவளுக்கு ஆஞ்ஞாபித்துக் காலஞ்சென்றனர். அக்கட்டளையைச்சிரசாவகித்து, அவளும் தன்னை மணஞ் செய்யக்கருதி வருபவர்களைப் பேழையைத் தெரிந்தெடுக்கும்படி செய்துகொண்டு வந்தாள். அநேகர் வந்து தவறி விட்டனர். அவர்களி லொருவனாகிய **மோராக்கோ** தேசத்தரசன் பொற்பேழையைத் திறக்க அதில் தசையற்ற தலையிருந்தது. **ஆரகன்** தேசத்தரசன் வெள்ளிப் பேழையைத் திறந்தனன். அதில் வெருட்டி விழிக்கும் ஒரு மடத்தலை யிருந்தது. கடைசியில் **பசானியோ** ஈயப் பேழையைத் தெரிந்தெடுத்தனர். அதில் **போர்ஷியா**வின் பதுமை யிருந்தது. அவர் சரியான பேழையைத் தெரிந்தெடுத்துத் தன்னை மணந்துகொள்ள வேண்டு மென்ற அவாவுடையவளாக அவளிருந்தாள். கடவுளும் அவள் கருதியவாறு நடத்து வித்தனர்.

சரியான பேழையைத் தெரிந்தெடுத்ததாலுண்டான ஆனந்தத்தைப் பற்றி யிருவரும் மகிழ்ந்து பேசிக்கொண்டிருக்கையில் **வெனிஸ்** நகரத்திலிருந்து **சோலானியோ** என்பவன் ஒரு கடிதம் கொண்டு வந்து **பசானியோ**விடத்திற் கொடுத்தான். அதிலடங்கிய சங்கதி யவருக் கடங்காத்துயர்தர, **போர்ஷியா** அதற்குக் காரணம் வினவத் தமது நண்பராகிய **அந்தோனியோ** தமக்காக யூதனிடத்தில் 3000 பொன் கடன் வாங்கியதும், அக்கடனை மூன்றுமாதங்களில் தீர்க்காவிட்டால், தமதிருதயத்தி லோரிராத்தற்றசை யறுத்துக் கொடுக்க அவரைக்

கட்டுப்படுத்திக் கொண்டதும், அவருடைய கப்பல்கள் அதுவரை வந்து சேராததால் அக்கடனிறுக்க அவர் சக்தியற்றவராகவே **ஷைலாக்** அவர்மேல் வழக்குத்தொடர, அவர் கடன் செலுத்த மார்க்கமின்றித் தம் தசையைக் கொடுப்பதில் தாம் உயிரோடிருத்தல் சாத்தியமில்லாமலிருப்பதால் அவரிறந்துபடுங்காலத்திற் **பசானியோ**வைக்கண்டுவிட்டுச் சாவதே தங்களிருவருக்கு முள்ள கடன் தீருவதாக விருக்குமென்று அவர் எழுதியிருப்பதும் ஆகிய விஷயங்களைச் சொல்லித் துக்கமடைந்தனர். அம்மாது அவரைத் தேற்றி, 3000 பொன்னுக்குப் பன்மடங்கதிக மாகப் பொன்னளித்துக் கடனைத் தீர்த்துவிடச்சொல்லி யவரை முன்ன ரனுப்பி, தான் தன் பந்துவும் நியாய விவாத நிபுணருமான **பெல்லாரியோ** என்பவருடைய உடைகளைப் பெற்று, அவரிடத்திலிருந்து **வெனிஸ்** நகராதிபதிக்குக் கடிதமுங் கொண்டு ஒரு நியாயவாதியாகத் தான் அந்நியாய சபைக்குச் சென்றனள். அவ்விடத்தில் அவ்வதிபதியின் உத்தரவு பெற்று, இருதிறத்தினர் விவாதங்களையுங் கேட்டு **ஷைலாக்**கின் பத்திரப்படி யவன் பெறவேண்டுமென்று தீர்ப்புச்செய்தாள். அது அந்த யூதனுக்குப் பெருமகிழ்ச்சி தந்தது. ஆயினும்இச்சந்தோஷம்சிறிதுகாலத்திற்குள்மாறிவிட்டது. பத்திரத்தில் ஓரிராத்தற்றசைமாத்திரம் கொடுத்திருப்பதால் அதற்குஇம்மி குறைவாகவாவது அதிகமாகவாவதுஅறுக்கக் கூடாதென்றும், இரத்தஞ்சிந்தக்கூடாதென்றும் தீர்ப்புச்செய்தாள். இவ்விதம்செய்வது முடியாதகாரியமென்றறிந்து முன்பு **பசானியோ**கொடுப்பதாகச்சொன்னஅதிகப்பொன்னைத்தான்பெற்றுக்கொள்ளுவதாகவும்தசையையறுக்காமலிருப்பதாகவும்**ஷைலாக்** சொன்னபோது அதுஒப்புக்கொள்ளப்படவில்லை. பிறகு 3000 பொன்னையாவது தரவேண்டுமென்று கேட்டான். அதனையும் கொடுக்கவில்லை. தன்னைச் சும்மா விட்டுவிடும்படி கேட்டான்; அவ்விதமும் செய்யப்படவில்லை; ஏனெனில் வேற்றூராரொருவன் உள்ளூராரொருவனுடைய பிராணனுக் கழிவு தேடினால்

அவன் பொருளில் பாதி அந்நகராதிபதியைச் சேரவேண்டுமென்றும், மிகுந்த பாதி அவன் எவனுடையவுயிருக்கழிவுதேடினானோ அவனுடையதென்றும், அவனுயிரோடிருத்தல் அந்நகராதிபதியின் கருணையைப் பொறுத்ததென்றும் அந்நகரின் சட்டம். அத்தண்டனைக்கு ஷைலாக் குட்பட்டவனாயினான். அந்நகராதிபதி அவனுக்கு உயிர்ப் பிச்சையளித்தார். அவன் தாழ்மையுடன் நடந்தால் இராஜாங்கத்திற்குச் சேரவேண்டிய அவன் பொருளில் பாதியிற் சிறிது பாகத்தை யபராதமாகப் பாவித்து மிகுதியை யவனுக்குக் கொடுப்பதாகவுமுரைத்தனர். ஷைலாக் உடனே கிறிஸ்தவனாகி, யவனுக்குப் பின் அவனுடைய எல்லாச் சொத்துக்களையும் அவன் மகளும் மருமகனும் பெறுகிறதென்றொரு சாசனமெழுதி அவன் வைப்பனேல், தமக்குச் சேரவேண்டிய பாகத்தைத் தாம் அவன் புத்திரிக்காக வைத்திருந்து கொடுத்துவிடுவதாக அந்தோனியோ சொன்னார். இவைகளுக்கிசைந்து தன்னுயிர் தப்பிக்கொண்டு யூதன் வீடுபோய்ச் சேர்ந்தான். அந்தோனியோவின் தப்பிப்போயிருந்த கப்பல்களெல்லாங்கரை சேர்ந்தன. அவர் சுகமடைந்தனர். பசானியோவும் பெல்மண்டுக்குச் சென்று போர்ஷியாவுடன் சுகமாக வாழ்ந்தனர். போர்ஷியாவின் தோழியாகிய நேரிசா என்பவள் பசானியோவின் நண்பனாகிய கிராஷியானோவை மணந்துசுகித்தாள். ஷைலாக்கின் பெண் ஜெஸிகா என்பவள் லாரென்சோ என்னும் ஒரு கிறிஸ்தவனுடன் ஓடிப்போய் அவனை மணந்து வாழ்ந்தனள்.

அவ்வக் களங்களிற் கூறியுள்ள
விஷயச் சுருக்கம்.

அங்கம்.—I. களம்.—1. இடம். வெனிஸ் நகரம்.

அந்தோனியோ மனம் சஞ்சலப்படுகிறது. அதற்குக் காரணந்தெரியவில்லை. அவருடைய சிநேகிதர்களாகிய சாலரினோவும் சோலானியோவும் அவர் கப்பல்கள் பற்பல தேசங்களுக்குப் போயிருப்பதால் அவற்றைப் பற்றிய எண்ணமே பெரும்பான்மை அவரது மனக்கலக்கத்துக்குக் காரணமென்று சொல்லுகிறார்கள். அவை யில்லையென்று அவர் மறுத்துரைக்கின்றார். அப்பொழுது பசானியோ, லாரென்சோ, கிராஷியானோ இவர்கள் வருகிறார்கள். சிறிது சம்பாஷணைக்குப்பின் மற்றவர்கள் போய்விட அந்தோனியோவும், பசானியோவும் தனித்து நின்றனர். அப்பொழுது பசானியோ பெல்மண்டிலுள்ள போர்ஷியாவைத் தான் மணம்புரிதற்குரியன செய்வதற்காகத் தனக்கு 3,000 பொன் கடன் கேட்கிறார். அந்தோனியோவிடத்தில் அவ்வளவு தொகையில்லாததால் அந்நகரத்தில் எங்கேயாவது பணம் அகப்படுமா என்று பார்க்கச் சொல்லுகிறார்.

அங்கம்.—I. களம்—2. இடம். பெல்மண்டு நகரம்.

போர்ஷியா தனக்குத் தளர்ச்சியுண்டாவதாகச் சொல்லுகிறாள். பேழைகளின் விஷயம் கூறப்படுகிறது. அவள் வேலைக்காரி போர்ஷியாவின் வதுவைவேட்டு வந்திருக்கும் ஆறுவரையும் பற்றி அவளுடைய அபிப்பிராயத்தைக் கேட்க அவள் சொல்லுகிறாள். பசானி

யோ சரியான பேழையைத் தெரிந்தெடுக்க வேண்டுமென்ற அபிப்பிராயத்தைப் போர்ஷியா ஒரு விதமாகக் காட்டுகிறாள். மோராக்கோ தேசத்தரசன் வருகிறான்.

அங்கம்.—I. களம்.—3. இடம். வெனிஸ் நகரம்.

பசானியோ ஷைலாக்கைக் கடன் கேட்கிறார். அந்தோனியோ பிணையாக இருந்தால் கொடுப்பதாக அவன் ஒப்புக்கொள்ளுகிறான். அப்பொழுது அந்தோனியோ வருகிறார். தனக்கு அவர் பேரிலுள்ள வெறுப்பை ஷைலாக் தனக்குள்ளே பேசிக்கொள்ளுகிறான். தவணை கடந்தால் அவரிதயத்திலிருந்து ஓரிராத்தற்றசை யறுத்துக் கொடுப்பதாகச் சாசனம் எழுதி வாங்கிக் கொண்டு ஷைலாக் கடன் கொடுக்கிறான்.

அங்கம்.—II. களம்.—1. இடம். பெல்மண்டு நகரம்.

மோராக்கோ தேசத்தரசன் தன்னைப் புகழ்ந்து பேசுகிறான். விருந்திற்குப் பின் அவன் பேழைகளைத் தெரிந்தெடுக்கக்காலங் குறிக்கப்பட்டது.

அங்கம்.—II. களம்.—2. இடம். வெனிஸ் நகரம்.

விகடக் கூத்தனாகிய லான்சிலட்காபோ இதுவரை ஷைலாக்கிடத்தில் வேலைக்காரனாக விருந்து அவனை விட்டுப் பசானியோவிடத்தில் வேலை செய்ய நிச்சயிக்கிறான். அவன் போகும்பொழுது வழியில் தன் தகப்பன் காபோவைப்பார்த்துப் பரிகாசமாகச் சிலது பேசுகிறான். இருவரும் பிறகு பசானியோவைக்கண்டு அவரிடத்தில் லான்சிலட்காபோ வேலைசெய்யக் கேட்டுக்கொள்ளுகிறார்கள். அவர் சம்மதிக்கிறார். பின்பு கிராஷியானோ பசானியோ விடத்தில் தானும் பெல்மண்டுக்குவர உத்தரவு கேட்கிறார். அன்றிராத்திரி நண்பர்களுக்கெல்லாம் விருந்து செய்துவிட்டு உடனே பெல்மண்டுக்குப் புறப்படுவதாகப் பேசிக்கொள்ளுகிறார்கள்.

அங்கம்.—II. களம்.—3. இடம். வெனிஸ் நகரமே.

லான்சிலட் வேலையை விட்டுப் போய் விடுவதைக் குறித்து ஷைலாக்கின்குமாரத்தி ஜெசிக்கா என்பவள் விசனப்படுகிறாள். தான்ஆசைகொண்ட லாரென்சோவுக்கு ஒரு கடிதம் அவனிடத்தில் கொடுத்தனுப்புகிறாள்.

அங்கம்.—II. களம்.—4. இடம். வெனிஸ் நகரமே.

கிராஷியானோவும் அவன் தோழரும், அன்றிரவு வேஷக்கூத்தாடத் தீர்மானிக்கிறார்கள். லான்சிலெட் கடிதத்தை லாரென்சோ விடத்தில் கொடுக்கிறான். அக்கடிதத்தில் கண்டபடி தாம் செய்வதாக அவர் அவளுக்குச் சொல்லியனுப்புகிறார். ஜெசிக்கா தம்முடன் ஓடிப்போவதாக எழுதி யிருப்பதை அவர் தமது தோழருடன் சொல்லுகிறார்.

அங்கம்.—II. களம்.—5. இடம். வெனிஸ் நகரமே.

லான்சிலெட் ஷைலாக்கை விருந்திற்கு பசானியோ அழைத்ததாக அழைக்கிறான். ஷைலாக் தன் குமாரத்தியைத் தன் வீட்டைப் பத்திரமாகப் பார்க்கச் சொல்லிவிட்டு விருந்திற்குப் போகிறான்.

அங்கம்.—II. களம்.—6. இடம். வெனிஸ் நகரமே.

ஜெசிக்கா லாரென்சோ வோடு ஓடிப்போகிறாள். காற்றுத் திரும்பி விட்டதால் பசானியோ உடனே புறப்பட்டுப் போகிறார். வேஷக் கூத்து நடக்கவில்லை.

அங்கம்.—II. களம்.—7. இடம். பெல்மண்டு நகரம்.

மோராக்கோ தேசத்தரசன் பொற்பேழையைத் தெரிந்தெடுக்கிறான். மூன்று பேழைகளின்மேல்

என்ன எழுதி யிருக்கிறது என்பதும், தெரிந்தெடுக்கப் போகிறவர்களுக்குள்ள நிபந்தனைகளும், வெற்றி தோல்வி எவ்விதம் தெரிவதென்பதும் வெளியாகின்றன. அவன் தவறிப்போகிறான்.

அங்கம்.—II. களம்.—8. இடம். வெனிஸ் நகரம்.

பஸானியோவும் கிராஷியானோவும் கப்பல் ஏறிச் சென்று விட்டதாகவும், ஜெசிக்காவும் லாரென்ஸோவும் ஓடிப்போய் விட்டதாகவும், அந்தோனியோவின் கப்பல்கள் நஷ்டமாகப்போய்விட்டன வாகவும், ஷைலாக் தன் மகளும் பணமும் தொலைந்து போனதைப் பற்றிப் பயித்தியம் பிடித்தவன்போல் பேசுகிறதையும் குறித்து சாலரினோவும் ஸோலானியோவும் பேசிக்கொள்ளுகிறார்கள்.

அங்கம்.—II. களம்.—9. இடம். பெல்மண்டு நகரம்.

ஆரகன் பிரபு வெள்ளிப்பேழையைத் தெரிந்தெடுக்கிறான். தவறிப்போகிறான்.

அங்கம்.—III. களம்.—1. இடம். வெனிஸ் நகரம்.

சாலரினோவும் ஸோலானியோவும் பேசிக்கொண்டிருக்கும்பொழுது ஷைலாக் வந்து தன் மகள் ஓடிப்போய் விட்ட சங்கதி அவர்களுக்குத் தெரியுமென்று சொல்லுகிறான். அவர்களிருவரும் அந்தோனியோ வீட்டிற்குச் செல்லுகிறார்கள். அப்பொழுது டியூபல் வந்து தான் தேடியும் ஜெசிக்காவைப் பார்க்கவில்லை யென்றும் அவள் பணத்தை வீண் செலவு செய்ததாகத் தெரிகிறதென்றும் அந்தோனியோவுக்கு நஷ்டம் வந்து விட்டதென்றும் ஷைலாக்கிடத்தில் சொல்லுகிறான்.

அங்கம்.—III களம்.—2. இடம். பெல்மண்டு நககரம்.

பஸானியோ சரியான பேழையாகிய ஈயப் பேழையைத் தெரிந்தெடுத்து போர்ஷியாவைத் தன் மனைவியாக்கிக் கொள்ளுகிறார். அவள் அவருக்கு ஒரு மோதிரம்

கொடுக்கிறாள். அவர் அதை ஒரு காலத்திலும் பிரியாமலிருப்பதாகச் சொல்லுகிறார். அக்காலத்தில் கிராஷியானோ நெரிஸாவைத் தன் மனைவியாகச் சம்மதம் பெற்றுக் கொள்ளுகிறார். அப்பொழுது ஸோலானியோ அவ்விடம் வந்து பஸானியோ விடத்தில் அவருக்கு அந்தோனியோ அனுப்பின கடிதத்தைக் கொடுக்கிறார். அதில் ஷைலாக் அந்தோனியோவின் பேரில் வழக்குத் தொடர்ந்திருப்பதைச் சொல்லி பஸானியோவைப் புறப்பட்டு வரும்படி கூறியிருக்கிறது. போர்ஷியா கலியாணத்தை விரைவில் முடித்துக்கொண்டு வேண்டிய பணத்துடன் வெனிஸ் நகர் போகும்படி பஸானியோவைப் பிரார்த்திக்கிறாள். பஸானியோவுடன் வந்த ஜெசிக்காவையும், லாரென்ஸோவையும் உபசரிக்கிறாள்.

அங்கம்.—III. களம்.—3. இடம். வெனிஸ் நகரம்.

அந்தோனியோ சிறைச்சாலையி லிருக்கிறார்.

அங்கம்.—III. களம்.—4. இடம். பெல்மண்டு நகரம்.

தங்கள் கணவர்கள் திரும்பிவரும் வரை தானும் நெரிஸாவும் கன்னியா மடங்களில் காலங் கழிக்க நினைத்திருப்பதாயும் அதுவரை தன் வீட்டு நிர்வாகத்தைப் பார்த்துக் கொள்ளும்படி லாரென்ஸோ ஜெசிக்கா இருவருக்குஞ் சொல்லி போர்ஷியா தன் தோழியுடன் வெனிஸ் நகரத்திற்குப் புறப்படுகிறாள், பதுவா நகரத்திலுள்ள தன் பந்துவும் நியாயவாத நிபுணருமாகிய பெல்லாரியோ விடத்திலிருந்து உடைகளையும் ஒரு கடிதத்தையும் பெற்றுக்கொண்டு நியாய ஸ்தலத்திற்குப் போகத் தீர்மானிக்கிறாள்.

அங்கம்.—III. களம்.—5. இடம். பெல்மண்டு நகரமே.

அவர்கள் சென்றபின்பு, லான்சிலட் ஜெசிக்கா விடத்திலும் அவள்புருஷனிடத்திலும் பரிகசித்து விகடமாகப் பேசுகிறான். ஜெசிக்கா போர்ஷியாவைப்புகழ்ந்து கூறுகிறாள்.

அங்கம்.—IV. களம்.—1. இடம். வெனிஸ்நகரம்.

போர்ஷியா நியாயவாதியாகவும் நேரிசா இலேககனாகவும் சபைக்குச் செல்லுகிறார்கள். போர்ஷியா விவாதங்களைக் கேட்டுத் தீர்ப்புச் சொல்லுகிறாள். அங்கராதிபதி அவளை விருந்திற் கழைக்கிறார். தனக்குள்ள அவகாசக் குறைவைச் சொல்லுகிறாள். அவளுக்கு வெகுமதி கொடுக்கும்படி அந்தப் பிரபு சொல்லுகிறார். அந்தோனியோவிடத்தில் கையுறை பெற்றுக்கொண்டு பசானியோவின் மோதிரத்தைப் போர்ஷியா கேட்கிறாள். அவர் அதைக் கொடுக்க இணங்கவில்லை. போர்ஷியாவும் நேரிசாவும் போய்விடுகிறார்கள்.

அங்கம்.—IV. களம்—2. இடம். வெனிஸ் நகரமே.

அந்தோனியோ கொடுக்கும்படி கேட்டுக்கொள்ள பசானியோ மோதிரத்தை யவனுக்குக் கொடுக்கும்படி கிராஷியானோவிடத்தில் அனுப்புகிறார். அவன் மோதிரத்தைப் பெற்றுக்கொண்டு நேரிசாவுக்கு ஷைலாக்கின் வீட்டைக் காட்டும்படி கிராஷியானோவைக் கேட்டுக்கொள்ளுகிறாள்.

[நேரிசா முன்னால் கிராஷியானோவுக்குக் கொடுத்திருந்த மோதிரத்தையிப்பொழுது பெற்றுக் கொண்டாள் என்று நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.]

அங்கம்.—V. களம்.—1. இடம். பெல்மண்டு நகரம்.

லாரென்சோவும் ஜெசிக்காவும் சந்திரிகையைப் புகழ்ந்து பேசி வாத்தியம் முழக்கிக் கொண்டிருக்கும்பொழுது போர்ஷியாவும் நேரிசாவும் வந்து சேருகிறார்கள். உடனே பசானியோ கிராஷியானோ அந்தோனியோ இவர்கள் வந்து சேருகிறார்கள். சங்கதிகளைச் சுருக்கமாகப் பேசிக் கொள்ளுகிறார்கள். மோதிரங்களைக் குறித்து வேடிக்கையாகச் சண்டைபோட்டு, உண்மையைப் பிறகு அறிந்துகொள்ளுகிறார்கள். எல்லோரும் சுகம் பெறுகிறார்கள்.

நாடகப்பாத்திரங்கள்.

வெனிஸ் நகராதிபதி.

மொராக்கோ தேசத்தரசன் } போர்ஷியாவின் வதுவை
ஆரகன் பிரபு } நாடிச் சென்றோர்.

அந்தோனியோ—வெனிஸ் நகரவர்த்தகன்.

பசானியோ—அவன் சிநேகன். போர்ஷியாவதுவை நாடினோரில் ஒருவன்.

சோலானியோ. }
சாலரினோ. } அந்தோனியோ, பசானியோ இவர்களின்
கிராஷியானோ. } நண்பர்.
சலீரியோ. }

லாரென்சோ—ஜெசிக்காவை விரும்பினவன்.

ஷைலாக்—ஒரு செல்வமுள்ள யூதன்.

தியூபல்—ஒரு யூதன். ஷைலாக்கின் சிநேகன்.

லான்சிலட் காபோ—ஷைலாக்கின் வேலைக்காரனாகிய ஒரு விகடக் கூத்தன்.

கிழட்டுக்காபோ—அவன் தகப்பன்.

லியானார்டோ—பசானியோவின் வேலைக்காரன்.

பால்தசார். } போர்ஷியாவின் வேலைக்காரர்கள்.
ஸ்டீபானோ. }

போர்ஷியா—ஐசுவரியமுள்ள ஒரு பெண்மணி. பெல்மண்டு தேசத்தவள்.

நெரிசா—அவள் வேலைக்காரி.

ஜெசிக்கா—ஷைலாக்கின் குமாரத்தி.

நகரவாசிகள், பிரபுக்கள், நியாயஸ்தல உத்தியோகஸ்தர், சிறைகாப்பாளன், வேலைக்காரர் முதலாயினோர்.

இடம்:—வெனிஸ், பெல்மண்டு நகரங்கள்.

வெனிஸ் வர்த்தகன்.

அங்கம்—க.

முதற்களம்.

இடம்:—வெனிஸ் நகரத்தின் ஒரு வீதி.

[அந்தோனியோ, சாலரினோ, சோலானியோ வருதல்.]

அந்தோனியோ.—எனக்குள தாகிய இந்தச் சஞ்சலம்
உண்மை யாக உற்றவா றறிகிலேன்
தமியேற் [illegible] திடுமால்
உமக்கிது சோர்வினை உறுத்துத லுரைத்திர்.
என்னினு மெவ்வண மிஃதெனைத் தொடர்ந்தது,
எங்ஙனங் கண்டேன், எங்ஙன மடைந்தேன்,
எதனா லாயது, எதனிடம் பிறந்தது
என்பத றிந்திலே னின்னு மியானே.
என்னை யறிதலே எனக்கரி தாம்வணம்
அறிவிலி யாக அமைத்ததிச் சஞ்சலம்.

சாலரினோ.—உம்மன முததியில் உழலா நின்றது.
விரிநீர்ப் பரப்பின் வியன்பெருங் காட்சியாய்

வாரிச் செல்வரா முமதுநா வாய்கள்
அற்ப வாணிக அம்பிக ளனைத்தும்
தம்மை வணங்கத் தாந்தருக் குற்றுந்
ததிசயம் பயக்கும் அழகிய பாயுடன்
மற்றவை யிகழ்வுறீஇ வல்லையிற் பறக்கும்.

சொலானியோ.—ஐயா, என்றன் அரும்பொரு ளனைத்தும்
வங்கந் தன்னி லுற்று வாரியில்
உளவே லென்மனம் உறையு மாங்கே
என்பது மெய்யே. எக்கா லத்து நான்
மாருதம் வீசும் மாதிரங் காண்பான்
புற்பறித் துயர்த்திப் பொருந்த நோக்குவன்.
துறைமுகப் பட்டினம் துறைப்பா லங்கள்
வங்கத் துறையிவை காணுறும் வண்ணம்
படத்தைப் பல்காற் பரிவுட னோக்குவன்.
உததியி லுய்த்தவென் னுடைப்பொரு டமக்கோர்
இடையூ றெய்துவித் திடவல தென்ன
அச்சம் பயக்கத் தக்க தன்மையுள்
இன்னலெற் கையம் இன்றி விளைக்கும்.

சாலரீனோ.—கொதிகுழம் பாறிக் குளிரவென் வாயால்
ஊது காற்றுப்பே ரூதை வாரியிற்
செயவல தீங்கைச் சிந்தையி லுறுத்தித்
தேகம் விதிர்ப்புறச் செய்வது திண்ணம்.
ஆடி தன்னில் அயிருறக் கொண்டு
கடிகையைக் காட்டுங் கவின்பெறு கன்னலைக்
காண்டொறுங் காண்டொறுங் கடலினில் நீரும்
புளினமு மெனதகட் புலனுறத் தோன்றித்

தனதிறை நாவாய்த் தாழ்வுறீஇ மணலிற்
படிந்து பாய்மரம் படுவா னுகமெனும்
இடுகாட் டழுந்தி விடுவதைக் காண்பல்.
ஆலயஞ் சென்றுங் கனிதரு கருங்கற்
கூடகோ புரத்தைக் குறித்துநோக் குங்கால்
மெல்லிய கப்பலை மெல்லத் தொட்டிட்
டதிலுள சுகந்த மனைத்தையும் வான்றி
முந்நீ ரதனுண் முடுகுற வீசியும்
பட்டா டையினுற் பரவையைப் போர்த்தும்
சுருங்கச் சொல்லி லொருகணத் திருந்த
கணிப்பரும் பொருண்மறு கணத்திலை யாக அப்
பரவையிற் பயந்தரு பாறையை யுணர்த்தல்
[illegible]
இச்செய னேரிடில் இன்னல் புரிதரும்
என்று மென்னை மெற்குறு திருக்குமோ?
அந்தோ னியோவுக் கவர்வா ணிபத்தில்
நினைவெலா மிருத்தலி னேர்ந்ததிச் சஞ்சலம்.
அப்படி யன்றெனச் செப்புத லொழிதிர்.

அந்தோனியோ.—அல்ல வென்று நானறை வதை நம்புதிர்
அதிட்ட வசத்தா லெனதரும் பொருளெலாம்
ஒருகலத் தாதல் ஓரிடத் தாதல்
இலை. அதுவல்லா லென்றன முழுவதும்
இவ்வரு டத்தி னிலாபமட் டினிலிலை.
அதனால்,
சஞ்சலந் தருவது வாணிப மன்றால்.

சாலரீனோ.—ஆயிற் காமமோ?

அந்தோனியோ.— சிச்சி யன்று.

சாலரினோ.—காமமு மன்றேல் நீ களிப்பிலி ரதனைத்
தவிர்க்கின் றிலைக் கழறுதும். அதுபோல்
துக்க மெனக்குச் சற்றுமின் றுதலால்
நகைத்துக் குதித்து நற்பே ருவகை
உள்ளே னெனலும் உமக்கெளி தாமே.
இருமுக ஜானஸ் சாட்சியா, இயற்கை
அதிசயம் பயக்கும் அபூர்வ புருடரைத்
தனது படைப்பினிற் றந்திரா நின்றது.
ஒத்தாது வோர்க்கல் ஊதுற்றிடிற் றத்தைபோற்
சிரித்து நேத்திரஞ் சிறுகநோக் குவர்சிலர்.
விகட மிகுநகை விளைக்கத் தக்கதே
[illegible]
சிறிதாம் புன்னகை செய்வதே யில்லாக்
கடுத்த முகமுடைக் காளையர் சிலரே.

சொலானியோ.—தவரல முடையான் தனவான் இனத்
தனு
தவல் பசானியோவும் கிராஷியா னோவும்
லாரேன் சோவு மிங்குப் போந்தனர்.
உமக்கு மங்கள முண்டா குக. யாம்
எம்மினு மினிய இவ்விட ருடனுமை
விடுத்தகல் கின்றும்.

சாலரினோ.— எம்மினு மேலீர்
சார்ந்திடா விடினிச் சஞ்சல மதனைத்
தீர்த்துநீர் மகிழ்வுறச் செய்புந் துணையும்
உம்மைவிட் டகலா துடனிருந் திருப்பேன்.

அந்தோனியோ.—உன்னினை னருமையா உமதுமேன்
மையையே.
உமது காரிய முந்த நீயிரிவ்
வமயங் கைக்கொண் டகல்கிறீர் போலும்.

[பசானியோ, லாரேன்சோ, கிராஷியானோ வருதல்.]

சாலரினோ.—தனமிகு செல்வரே, காலை வந்தனம்.

பசானியோ.—செல்வரே, வந்தனம். சேர்ந்தா மெங்
நாட்
கோலா கலமாக் காலங் கழிப்பேம்?
எப்போ தியம்புமின்? எதில ராகநீர்
அப்பாறு கின்றீர். போய்வர வேண்டுமோ?

சாலரினோ.—உமக்கவ காசம் உளநாள் யாமும்
ஒழிவு காலமுண் டாக்குபு வருவேம்.

[சாலரினோ, சொலானியோ போதல்.]

லாரேன்சோ.—அந்தோனி யோவாம் அன்பரும் நீரும்
இருப்பதால் நாங்க ளிருவருஞ் செல்கிறோம்.
பசானியோப் பிரபுவே பகற்போ சனமாஞ்
சமயந் தன்னிற் சார்வுறு மிடத்தை
மனத்தினிற் பரிவா மறவா திருத்திரால்.

பசானியோ.—தவறிடை யுறாதுற் றயரேன் சிறிதும்.

கிராஷியானோ.—அரிய அந்தோனியோ, சந்தோட
மாயிலீர்,
சனங்கள் மதிப்பைச் சாலவு மதித்தனிர்.
அத்தனை கவற்சி அதன்மேற் செலுத்தி
அதனை யடைபவர் அதனை யிழப்பர்.
வியப்புண் டாக்கும் மிக்க மாறுதல்

உம்மிடத் துளதா யிருந்த துண்மையே.
அந்தோனியோ.—பாரினை யஃதுள படியே மதித்தேன்.
அம்புவி யென்னும் ஆடரங் கதனில்
நரரெனு மெவரும் நடம்புரி பவரே.
என்றன் கூத்ததில் இடருழந் திடுதலே.
கிராஷியானோ.—விளம்பிய கூத்தினுன் விகடக்கூத்தனே.
நரைதிரை மூப்பாம் நாள்வந் தணுகினுங்
களித்தா டுதலிலென் காலங் கழிக.
ஒன்றிய விசனத் தொவ்வோ ருயிர்ப்பினும்
இதயஞ் சிதைந்துசெந் நீரிழத் தலினும்
இன்மது மடுத்தென் னீரல்வெந் திடுக.
உதிர முட்டனை மாயுள வொருவன்
சலவைக் கல்லாற் சமைத்தமூ தாதைபோல்
இருத்தலேன் ? விழிப்பா யிருந்துந் துயிறலேன் ?
கடுகடுப் புடையனுய்க் காமா லைப்பிணி
படிப்படி யாகப் பற்றுவ தெவனோ ?
அந்தோ னியோநா னுறைவது கேட்டிரால்.
உண்மையான் விரும்பி யுள்ளே னாகலின்
உம்பா லன்பா லுரைக்கின் றேனிதை.
“ ஆகாச வாணி யானே யாதலால்
நான்வாய் திறப்புழி நாய்குரை யற்க”
என்பவர் போல வெவருந் தம்மை
மதியும் மௌனமும் மலிதரு சிந்தையும்
உளரென மதித்தலை யுட்கொண் டவராய்ப்
பாலினிற் படரும் ஏடது போலவும்
நீர்நிலை மூடிய பாசியை நேரவும்

முகத்திற் றெளிவை முகிழ்த்த விலராய்
இருப்பரோர் சாரார். இவருட் சில்லோர்,
அந்தோனி யோவே அங்ஙாந் திடுவரேல்
மூட ரிவரெனக் கேட்டோர் மொழிவர்.
அதனால் நரகவர் அடைவது நிச்சயம்.
அதலி னவர்நர கடையா வண்ணம்
மௌன மாக வதிகிறார். அதனால்
ஞானிய ரென்று ஞாலத் தோரால்
எண்ணப் படுவார். இஃதியா னறிவேன்.
மற்றொரு காலிதை வகுத்துக் கூறுவன்.
அக்கயிறால் கொண்டையைத் தூண்டிலிட் டுலக
மதிப்பெனும் வராலைப் பிடித்திட மதியீர்.
வருதிர் லா ரென்ஸோ, வாழ்க ! வாழ்க !
விருந்தாய பின்னர் விளம்புவல் விஞ்சிய
வயமொழி யெல்லாம்.
லாரென்ஸோ.— நல்லது, நாங்கள்
போசன காலம் வரைபோய் வருதும்.
கிராஷியா னோவெனைச் சிந்தித் தேனும்
பேச விடாராய்ப் பெற்றிமை யாலே
முன்னர் வகுத்த மொழிந்திடு மூக
விவேகரு ளொருவன்பா லுகுதல் வேண்டும்.
கிராஷியானோ.—இன்னு மென்னுட னிரண்டாண் டுனி [ரேல்
உந்தா வினிதுறு மொலியே கேளீர்.
அந்தோனியோ.—போய்வா, இதனால் வாயாடுதலில்
வல்லே னாவேன்.
கிராஷியானோ.— வந்தன மையா,

மௌனமும் பிட்டலர் மாட்டுநா வுக்கே
சரத மாகத் தகுதியா மன்றே.

[கிராஷியானோ, லாரென்சோ போதல்.]

அந்தோனியோ.—அவர் பேசியதில் ஏதேனும் அருத்த முளதா ?

பசானியோ.—வேனிஸ்நகரத்தி லுள்ளோர் யாவரினும் கிராஷியானோ அருத்தமில்லாமல் அதிகமாகப் பேசுவார். அவருடைய சாதுரிய வசனங்களெல்லாம் இரண்டுமூட்டைப் பதரில் மறைத்து வைக்கப்பட்ட இரண்டு மணிகளை யொக்கும். அவைகளைக் காணநாளெல்லாந் தேடவேண்டும். தேடிக்கண்டினும், பட்டபாட்டிற்குத்தக்க பயனிராது.

அந்தோனியோ.—புண்ணிய யாத்திரை யினிநீர் பூணக்
காரண மாகிய கன்னி யாருடைப்பேர் [னிர்.
இற்றைக் குரைப்பலென் றெற்குவாக் களித்த

பசானியோ.—அந்தோ னியோ, என் னளவுக் கதிகமாம்
ஆடம் பரத்தா லங்கைப் பொருளனைத்
தொழிந்ததென் பதுநீர் தெரிந்த விடயமே.
அத்துணை யிடம்பவாழ் விப்பொழு தகற்றற்
கெத்துணை யெனினுமியா னிடரடைகின் றிலேன்.
இளமையில் வீண்செல வாலெனக் கெய்திய
கடனைநா ணயமாக் கழிப்பதென் கருத்தே.
அந்தோனியோ, உமக் கன்பிலும் பொருளினும்
தனிகடன் பட்டவ னாகநா னுள்ளேன்.
உமக்கிங் கென்பா லுளதா மன்பால்

எனக்குள விருண மொழிக்கதா னெண்ணிய
சூழ்ச்சியு முபாயமுஞ் சொல்லுவன் றுணிந்தே.

அந்தோனியோ.—இவையெவை என்றனக் கியம்புதிர் பசானியோ.
என்றுநான் றுக்கீ ரிருப்பது போலவே
இவையுந் தகுதியு முளவா யிருப்பின்
என்கரு வூலம் யாக்கையென் னிதியெலாம்
உமதா பத்திற் குதவுத லெண்ணம்.

பசானியோ.—பாலனாப் பள்ளியிற் பயின்றிடு நாளில்
எய்தவோ ரம்பினை யிழப்பினவ் வெய்த
அதனினை யம்பொன் றவ்வழி யதனுடை
விசையொடு குறிப்பா விடுவன் பன்முறை. [னேன்.
இரண்டையுந் துணிந்தெறிந் திரண்டும் பெற்று
பானினி மொழிவதி லில்லவஞ் சகம். என்
இளமைப் பழக்கம் எடுத்துரைக் கின்றேன்.
உம்பாற் பட்ட கடனனி யுளதே.
கடன்கொண் டனவெலாங் கருத்திலா இளமை
இடம்பத் தன்று விழுந்தவன் யானரோ. [யில்
முன்னர்நீர் முடுகி யெய்த கணைவழி
இன்னுமோர் கணையன் பெய்தி யெய்திரேல்
இலக்கைக் குறித்தாங் கிருப்பே னதனின்
இரண்டையும் பெறுவேன். இலையேற் பின்னைய
இருண மேனு மிறுத்துமுற் கடனைச்
செலுத்துங் காறுஞ் செய்நன்றி மறவா
திருப்பே னென்பதி லையமொன் றின்றே.

அந்தோனியோ.—சாலவு நீரெனைச் சரியா அறிதிரால்.

ஆதலி னிங்ஙனென் னன்பினைப் பற்றிக்
கழிமொழி கழறிவீண் காலங் கழிக்கிறீர்.
என்பொரு ளனைத்தையும் விரையிறைத் தாங்
கிழக்கும் பிழையினு மென்னை யையுறும்
உதவிக் குலோப முறுமென் றயிர்த்தலில்
ஐயமில் பெரும்பிழை செய்கிறீர் மற்றன்றே.
யான்செயக் கடவதென் றெனைநீ ரென்னுகிர்
செப்புவீர்; அதுசெயச் சித்தனா யுள்ளேன்.
ஆதலி னியம்புகிர்.

பசானியோ.— இசைவரியமுள
பெண்மணி பொருந்திய பெல்மண் டினிலுளாள்,
சுந்தர முடையாள், சுந்தர மதனினும்
வியத்தகு நற்குண மேம்பா டுள்ளாள்
சின்றாள் முன்னவள் திருக்கணா லென்னைச்
சொல்லா துணர்த்துந் தூதைப் பெற்றேன்.
நாரியி னாமம் போர்ஷியா. கேற்றோ
புத்திரி, புருட்டசின் மனைவியாம் போர்ஷியா
தனக்கெட் டுணையுந் தாழ்ந்தவ ளல்லள்.
மாநிலந் தனிலவள் மாண்பறி யாரிலர்.
நாற்றிசை யினின்றெழூஉம் நற்காற் றியாவும்
கடிமணம் வேட்டுறுங் கண்ணிய வானகளை
அவள்வயி னுய்க்கின் றன. அவ ளாதுகருள்
பொன்னிறக் கூந்தல் பொன்மயிர்க் கற்றைபோற்
கன்னப் பொருத்திடைக் கவிழ்ந்தசை கின்றது.
அஃதவ ளகரமாம் பெல்மண் டதனைக்
கால்க்கோக் கரையாக் கருதிமற் றங்கே

அளவில் லாவர சாயரே சன்களைத்
தேடி வரச்செய் கிடும். அந்தோனியோ,
அவர்களி லொருவனா தற்கு வேண்டுவ
அடையப் பெற்றிடி லையமி லதிட்டம்
எனக்குள தாம்வணம் மெய்த்துவன் சித்தி
எனுகன் முற்குறி யென்றனைத் தெழுமால்.

அந்தோனியோ.— என்செல் வம்மெலா மிருங்கட
லிடத்த,
அன்றியு மென்றன் அங்கையிற் பொருளிலை;
ஈடா வைத்திட் டெய்துதற் கியைந்த
சரக்கு மிலை. வேனிஸ் நகர்தனைச் சார்ந்தென்
னாணயந் தொலைந்தது மளவுசீர் நாடுகிர்.
பெல்மண் டினிலே பெண்ணெழிற் போர்ஷியா
இடமே குலவுற் றிசையும் பொருளெலாம்
நன்றுதற் பொருட்டென் னாணயந் தாவல
தெல்லா மெல்லா வினையும் பெறுகிர்.
வல்லையி னேகி யான்பொருளுள விடம்
நாடுகிர். நானுமந் நாடுவ லஃதே.
என்பெய ருக்குமென் னாணயத் தினுக்கும்
பெறலாம் பொருள்நீர் பெறத்தடை யிலையே.

[எல்லாரும் போதல்.]

இரண்டாங்களம்.

இடம் :—பெல்மவுண்டு, போர்ஷியாவினுடைய மாளிகையின் ஓர் அறை.

[போர்ஷியாவும் நெரிசாவும் வருதல்.]

போர்ஷியா.—நெரிசா! என்னுடைய சிற்றுடம்பானது இந்தப் பெரிய உலகவாழ்விலே உண்மையாக அலுத்துளது.

நெரிசா.—அன்புள்ள பெருமாட்டி! உம் அதிட்டத்தின் அளவு அல்லலும் உளதேல் நீர் அலுப்படைய வேண்டியதுதான். ஆயினும் யான் கண்ணுற்றவரையில் உணவின்றிப் பட்டினியாக இருப்பவர்கள் போலவே மிக மிஞ்சிப் புசிக்கின்றவர்களும் பிணிக்கு ஆளாகின்றார்கள். ஆதலால் நடுத்தரமான நிலையிலிருப்பது அற்பசுகந் தருவதன்று! அபரிமித போசனம் வெகு சீக்கிரத்தில் நரையை உண்டாக்கும். மிதமான போசனம் ஆயுளை விருத்தி செய்யும்.

போர்ஷியா.—நல்ல நீதிகள்! நன்கு உரைத்தனை.

நெரிசா.—இந்த நீதிகளைக் கைக்கொண் டொழுகின் மிக நன்றாயிருக்கும்.

போர்ஷியா.—நல்லவைகள் எவை எனத் தெரிந்துகொள்வது எவ்வளவு எளிதோ, அவ்வளவு அவைகளைச் செய்தலும் எளிதாயின் சிறு

கோயில்கள் பெருங்கோயில்களாயும் வறியர் குடில்கள் அரசருடைய அரண்மனைகளாயும் ஆகியிருக்கும். பிறருக்குப் போதிக்கிறபடி நடக்கிறவன் நல்ல குரு. என் போதனையின்படி நடக்கும் இருபது பேர்களில் நான் ஒருத்தியா யிருப்பதைப் பார்க்கிலும் அவ்விருபது பேருக்கும் போதனை செய்வது எனக்கு மிக எளிது. மனோவிகாரங்களை அறிவானது மாற்றும்பொருட்டு விதிகளை ஏற்படுத்தலாம். ஆனால் மனோ விகாரங்கள் அவ்வரையறைகளைக் கடந்து ஓடாநின்றன. வெறிகொண்ட இளமைப் பருவம் என்னும் முயலானது நல்லறிவென்னும் முடவன் வீசிய வலையின் கண்களிலிருந்து குதித்து ஓடிவிடுகின்றது. ஆனால், இந்த நியாயங்கள் எனக்கு மணமகனை நானே தெரிந்து கொள்ளத்தகுந்த நியாயங்க ளல்ல. சுயம்வரம்? ஐயோ! எனக்கு இஷ்டமானவனை ஏற்றுக் கொள்ளவாவது இஷ்டமில்லாதவனை மறுக்கவாவது எனக்குச் சுதந்தரமில்லையே! இவ்விதமாக, மாண்டுபோன பிதாவின் மரண சாசனத்தால் உயிரோடிருக்கிற பெண்ணின் ஆசை அடக்கப்பட்டிருக்கின்றதே! நெரிசா! நான் ஒருவனைத் தெரிந்து (கலியாணஞ் செய்து) கொள்ளவாவது வேறு ஒருவனை மறுக்கவாவது கூடாதவ

ளாக இருப்பது மிகுந்த கஷ்டமல்லவா?

நேரிசா.—உம்பிதா எப்பொழுதும் புண்ணியவானாக இருந்தார். புண்ணியவான்களுக்கு, மரண காலத்தில் திருவருள் (வசத்தால் வெளிப்படும்) ஞானம் உண்டாகிறதுண்டு. அவர்களுக்கைத் தழுவுகிறவனே உம்மைப் பெறும்பொருட்டாக அவர் ஆலோசனை பண்ணிப் பொன் வெள்ளி ஈயத்திலான இந்த மூன்று பெட்டிகளைச் செய்து வைத்திருக்கிறாரன்றோ? உன்னைப்படி உம்மை விரும்புவோரன்றி ஏனையோர் அப்பெட்டிகளில் சரியானதைத் தெரிந்து எடுக்கமாட்டார்கள் என்பதில் சந்தேகமில்லை. முன் வந்து உம்மைக் கேட்டு வந்திருக்கின்ற இளவரசர்களிடத்தில் உமக்கு இருக்கும் பிரீதியின் தன்மையை யானறியச் சொல்வாய்.

போர்ஷியா.—தயைசெய்து அவர்கள் பெயர்களைத் தனித்தனியாகச் சொல்லுவாய். நீ சொல்லும்பொழுது அவர்களை நான் விவரித்துச் சொல்லுவேன். என்னுடைய விவரணத்திற்கேற்க என் அன்பை மதி.

நேரிசா.—முதலாவது நேபில்ஸ் தேசத்து இளவரசன்.

போர்ஷியா.—ஆ! அவன் உண்மையாக ஒரு குதிரைக் குட்டியே. தன் குதிரையைப்பற்றிப் பேசுதலன்றி அவன் வேறொன்றுஞ் செய்கி

றதில்லை. தன் குதிரைக்குத் தானே இலாடம் அடிக்கக்கூடும் என்பதைத் தன்னுடைய நற்பயிற்சிகளில் ஒன்றாக மதித்துள்ளான்.

நேரிசா.—பின்பு, பாலட்டைன் பிரபு.

போர்ஷியா.—"என்னை ஏற்றுக்கொள்ளாயேல் வேறே எவனையாவது தெரிந்தெடு" (பார்ப்போம்) என்று மொழிபவனைப்போல் முகம் கடுத்திருத்தலைத் தவிர வேறொன்றுஞ் செய்கின்றிலன். விநோதமான கதைகளைக் கேட்குங்கால் அவன் புன்னகை செய்கிறதில்லை. இளமையிலேயே நற்பழக்கமின்றி இவ்வாறு துக்காக்கிராந்தனாயிருக்கிறவன் வயது செல்லச்செல்ல அழுமூஞ்சித்தத்துவ சாஸ்திரியாவான் என்று அஞ்சுகிறேன். இவர்களில் ஒருவரை நான் கலியாணஞ் செய்து கொள்வதினும் வாயில் எலும்பையுடைய மண்டையோட்டை மணமகனாகக் கொள்ளுவேன். இவ்விருவருள் எவர் கையிலும் அகப்படாமல் சுவாமி என்னைத் தப்புவிப்பாராக.

நேரிசா.—பிரெஞ்சு பிரபுவாகிய மான்ஷியர் லேபான் என்பவனைப்பற்றி என்ன சொல்லுகின்றீர்?

போர்ஷியா.—கடவுள் அவனை (மனிதனாக)ச் சிருஷ்டித்துவிட்டார். ஆதலால் அவன் மனிதனாகவே இருக்கட்டும். பிறரை இகழ்தல் உண்மையாகப் பாவம் என்று எனக்குத் தெரியும்.

ஆனால் ஆ! ஏன்? நேபில்ஸ் தேசத்தானைப் பார்க்கிலும் நல்ல குதிரையை உடையவனும் பால்டைன் பிரபுவைப்பார்க்கிலும் அதிகமாகக் கடுகடுக்கும் கெட்ட பழக்கமுள்ளவனும் இருக்கின்றான். அவன் ஒருமனிதனென்று அழைக்கிறதற்குரிய யோக்கியதை இல்லாதவனுயிருந்தாலும் எல்லா மனிதரிடத்துமுள்ள நற்குணங்களும் நிறையப்பெற்றவனாக இருக்கிறான். ஒரு சிறு குருவி பாடினால் உடனே குதித்துத் துள்ளுகின்றான். தன் னிழலோடு போரிடுவான். நான் அவனை மணந்தால் இருபது கணவரைக் கலியாணஞ் செய்ததுபோலாம். அவன் என்னை அசட்டை செய்தால் நான் அவனை மன்னிப்பேன். ஏனெனில் அவன் பித்தேறினாற்போல் என்னை நேசித்தால் அத்துணையாக நான் நேசமுறேன்.

நேரிசா.—இங்கிலாந்து தேசத்து வாலிப கனவானாகிய வால்க்கன் பிரிட்ஜைப் பற்றி யாது கூறுகின்றீர்?

போர்ஷியா.—அவன் பேசுகிறது எனக்குத் தெரிகிறதில்லை. நான் பேசுவதை அவன் அறிந்து கொள்ளுகிறதில்லை. ஆகலால் அவனோடு நான் பேசுகிறதில்லை என்று உனக்குத் தெரியும். அவனுக்கு லத்தீனாவது பிரேஞ்சாவது

இத்தலியனாவது தெரியாது. எனக்கு இங்கிலிஷில் தெரிந்தது மிகக் கொஞ்சமென்று நியாய ஸ்தலத்தில் வந்து நீ பிரமாணஞ்செய்வாய். அவன் ஒரு ரூப லாவண்ணிய முடையவனது (சித்திர) படமாக இருக்கின்றான். ஆனால் ஐயோ, பேச்சில்லாமல் கைக்காணங்காட்டுகின்ற பதுமையுடன் யார் சம்பாஷிக்கக்கூடும்? அவன் எவ்வளவு தாறுமாறாக உடை உடுத்துக்கொண்டிருக்கின்றான்? தன் உட் சட்டையை இத்தலியிலும் வட்டநிஜாரைப் பிரேஞ்சுதேசத்திலும் தொப்பியை ஜெர்மனியிலும் ஒழுக்கத்தை எல்லாவிடங்களிலும் அவன் வாங்கினான் என்று நான் நினைக்கின்றேன்.

நேரிசா.—அவனுக்கு அடுத்தவனான ஸ்காட்டிஷ் பிரபுவைப்பற்றி உம் அபிப்பிராயம் என்ன?

போர்ஷியா.—அண்டை அயலாருக்குள் அன்புள்ளவனாகவே இருக்கின்றான். இங்கிலிஷ் காரனிடத்திலிருந்து கன்னத்தில் ஓர் அறை வாங்கிக்கொண்டு தனக்குப் பலம் வரும்பொழுது திரும்பக் கொடுப்பதாக உறுதியாகச் சொன்னான். அவனுக்குப் பிரேஞ்சுக்காரன் பிணையாளியாகி அதன் மேலே இன்னும் ஓர் அறை கொடுக்கப் பெறுமாறு உறுதிசெய்திட்டான் என்று நினைக்கிறேன்.

நேரிசா.—சாக்சனிப் பிரபுவின் மருமானாகிய ஜெர்மன் இளைஞனை எவ்வாறு விரும்புகின்றனிர்?

போர்ஷியா.—அவன் காலையில் வெறியற்றவனாக இருக்கும்பொழுது மிகவும் கேவலமாயும், மாலையில் குடித்திருக்கும்பொழுது மிகக் கேவலமாயும், அதிக நன்றாய் (க்குடியாமல்) இருக்கும்பொழுது மனிதனைப் பார்க்கிலும் கொஞ்சங் குறைந்த கேவலமாயும், அதி கேவலமாயிருக்கும்பொழுது மிருகத்தைப் பார்க்கிலும் சற்று மேலானவனாயும் இருக்கின்றான். எனக்கு உறற்பாலதாகிய பெருங் கேடு உறினும் அவனைவிட்டு நீங்குவதற்குரிய உபாயந் தேடுவேன்.

நேரிசா.—அவனுந் தெரிந்தெடுப்பதாக வந்து சரியான பெட்டியைக் காட்டிவிடுவானேல் நீர் அவனைக் கலியாணஞ் செய்ய மறுக்கும்பட்சத்தில் உம் தந்தையின் எண்ணத்தை நிறைவேற்றுதவராகவேண்டுமல்லவா ?

போர்ஷியா.—ஆகையால், கேடு நேரிடாமல் அகற்றுவதற்கு, தப்பான பெட்டியின் மேல் ஒரு பெரிய கண்ணாடிப் புட்டி நிறைய ரேனிஸ் தேசத்துக் கொடிமுந்திரி இரசத்தைத் தயை செய்து வைத்துவிடு. உள்ளே பூதமும் வெளியே இந்த இரசமும் இருந்தால் இதைத்தான் தெரிந்தெடுப்பான் என்று எனக்குத்தெரியும். ஒரு குடியனுக்கு வாழ்க்கைப்படுவதைப் பார்க்கிலும், நேரிசா, நான் வேறே ஏதாவது செய்வேன்.

நேரிசா.—அம்மா ! இந்தப் பிரபுக்களில் எவரையாவது நீர் மணஞ்செய்ய நேரிடுமென்று பயப்படவேண்டாம். அவர்கள், தம் தீர்மானத்தை எனக்கு முன்னிட்டே தெரிவித்திருக்கிறார்கள். அதாவது, பெட்டிகளைத் தெரிந்தெடுப்பதற்காக உமது பிதாவினால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற நிபந்தனையின்றி வேறெவ்விதமாகவாவது உம்மை விவாகஞ்செய்ய ஏது இருந்தாலொழிய உம்மை இன்னும் வருத்தப்படுத்தாமல் அவர்கள் வீடுகளுக்குத் திரும்புவதே.

போர்ஷியா.—சிபில்லா வயதாக நான் இருப்பினும் என் தந்தையின் இஷ்டப் பிரகாரம் நான் அடையப் பெற்றொழிய டயானாவைப் போல் பரிசுத்த கன்னிகையாகவே நான் இறந்துபோவேன். இந்த ஒருமுட்டை நேசர்களும் இவ்வளவு புத்திசாலிகளாயிருப்பதைப் பற்றி நான் சந்தோஷப்படுகிறேன். இவர்களில் யார் பிரியினும் நான் விசனப்படத்தக்கவர் ஒருவருமில்லை. அவர்கள் சுகமாய்ப் புறப்பட்டுப் போகும்படி சுவாமி கிருபை செய்யவேண்டுமென்று நான் பிரார்த்திக்கின்றேன்.

நேரிசா.—உமது பிதாவின் காலத்தில் மான்ட்பிரேட் பிரபுவுடன் இங்கே வந்த பண்டிதரும் யுத்தவீரருமாகிய ஒரு வேனிஸ் நகரத்தானது ஞாபகம் உமக்கில்லையோ ?

போர்ஷியா.—ஆம், ஆம். அப்படிவந்தவர், பசானியோ. அவரை அப்படித் தான் சொன்னார்கள் என்று நினைக்கின்றேன்.

நெரிசா.—அம்மா! மெய்தான். என் அஞ்ஞானக் கண்ணாற் காணப்பட்டவர்களி லெல்லாம் அவரே ஓரழகிய பெண்ணுக்கு மிகத்தகுந்தவர்.

போர்ஷியா.—அவர் ஞாபகம் எனக்கு நன்றாயிருக்கின்றது. உன்னுடைய புகழ்மொழிக்கு அருகர் என்றும் ஞாபகம் இருக்கின்றது.

[ஒரு வேலைக்காரன் வருதல்.]

என்ன? என்ன செய்தி?

வேலைக்காரன்.—தாயே! உம்மிடத்தில் விடை பெற்றேக ஏதிலர் நால்வரும் உம்மைத் தேடுகிறார்கள். ஐந்தாமவனாகிய மொராக்கோ இளவரசனிடத்திலிருந்து அவன் இன்றிரவு இங்கிருப்பதாகச் சொன்ன செய்தியுடனே ஒரு தூதன் வந்திருக்கிறான்.

போர்ஷியா.—மற்றைய நால்வருக்கும் விடை சொல்லிக்க விருப்ப மிருப்பது போலவே இந்த ஐந்தாமவனை உபசரிக்க முடியுமேல் அவன் வருவதைப்பற்றி நான் சந்தோஷமா யிருக்கவேண்டும். அவன் ஒரு மகாத்துமாவின் குணமும் பிசாசின் நிறமும் உடையவனா யிருப்பின் அவன் என்னைக் கலியாணஞ் செய்து கொள்வதைப் பார்க்கிலும் என் பாவது

விப்பக்கேட்டு என் பாவத்தைப் பரிகரிப்பவனாக இருக்கட்டும் என்று விரும்புகின்றேன். வருதி நெரிசா. அடா, முன்போ.

கடிவேட் டோர்செலக் கதவடைக் கும்மிடை
எனைநயந் தொருவன் வந் திடிக்கின் றன்கடை.

[எல்லோரும் போதல்.]

மூன்றாங்களம்.

இடம்:—வெனிஸ்நகரம், ஒரு பொதுவிடம்.

[பசானியோவும் ஷைலாக்கும் வருதல்.]

ஷைலாக்.—சரி. மூவாயிரம் 'டக்கற்று'.

பசானியோ.—ஆம். ஐயா! மூன்றுமாதம் தவணை.

ஷைலாக்.—மூன்று மாதமோ? சரி.

பசானியோ.—நான் உமக்குச் சொல்லியபடி அந்தோனியோ அதற்குப் பிணையாயிருப்பார்.

ஷைலாக்.—அந்தோனியோ பிணையாயிருப்பார், சரி.

பசானியோ.—நீர் எனக்கு உதவி செய்யக்கூடுமா? எனக்குச் சந்தோஷம் உண்டாக்குவீரா? உமது உத்தரம் நான் அறியலாமா?

ஷைலாக்.—மூவாயிரம்! டக்கற்று! மூன்றுமாதம் அந்தோனியோ பிணை!

பசானியோ.—அதற்கு உம்முடைய உத்தரம் என்ன?

ஷைலாக்.—அந்தோனியோ சரியானவர்.

பசானியோ.—அப்படி யல்லவென்று ஏதாவது கேள்விப்பட்டிருக்கிறீரோ?

ஷைலாக்.—ஆ. இல்லை, இல்லை, இல்லை, இல்லை. அவர் சரியானவரென்று நான் சொன்னதன் கருத்து அவர் பெறுமானவர் என்று நீர் அறிந்து கொள்ளவேண்டிய தென்பதே. ஆனாலும் அவருடைய பொருள்வருவாயெல்லாம் சந்தேகமாக இருக்கின்றன. அவ-

ருடைய கப்பல்களில் ஒன்று புறப்பட்டு டிரிப்பொலிக்குப் போயிருக்கின்றது. இன்னும் ஒன்று இண்டீசுக்குப் போயிருக்கின்றது. பரிவர்த்தனை சாலையில் விசாரித்ததில், மூன்றாவது கப்பல் மெக்சிகோவிலும், நாலாவது கப்பல் இங்கிலாந்திலும், அவருடைய மற்றைப் பொருள்கள் மற்றும் அநேக இடங்களிலும் சிதறுண்டிருக்கின்றனவாகவும் எனக்குத் தெரிகின்றது. ஆனால் கப்பல்கள் பலகைகளாற் செய்யப்பட்டவைகளன்றோ? கப்பற்காரர்கள் மனிதர்களே யல்லரோ? தரை யெலிகளும் தண்ணீரெலிகளும் இருக்கின்றன. [அப்படியே] தரைக் கொள்ளைக்காரர்களும் கடற் கொள்ளைக் காரர்களும் இருக்கிறார்கள். சலத்தினாலும் காற்றினாலும் குன்றுகளினாலும் உண்டாகின்ற கெடுதியுமுண்டு. ஆயினும் அவர் பெறுமானவர்தான். மூவாயிரம் டக்கற்று, அவரிடத்தில் நான் முறிபெற்றுக்கொள்ளலாம் என்று நினைக்கின்றேன்.

பசானியோ.—நீர் பெற்றுக்கொள்வதில் சந்தேகமில்லை.

ஷைலாக்.—நான் அப்படிச் செய்யக்கூடும் என்பதை உறுதிசெய்துகொள்ளவேண்டும். அந்தோனியோவினிடத்தில் நான் பேசலாமா?

பசானியோ.—எங்களுடன் புசிக்க உமக்குப் பிரியமிருந்தால் [புசிக்கச் சந்திக்கும் பொழுது பேசலாம்].

ஷைலாக்.—சரிதான். பன்றிக்கறி வாசனை யேற்றுக் கொள்ளவோ? உங்களுடைய நாசரத்துத் தீர்க்கதரிசி ஏவின பிசாசுகளுக்கு இருப்பிடமாகிய பன்றியைப் புசிக்கவோ? உங்களுடன் விற்பேன். உங்களுடன் பேசுவேன். உங்களுடன் நடப்பேன். இன்னும் இப்படிப் பட்டவைகள் எல்லாம்செய்வேன். ஆனால் உங்களோடு கூடப் புசிக்க மாட்டேன். உங்களோடுகூடக் குடிக்கமாட்டேன். உங்களோடுகூடச் சுவாமியை வணங்கமாட்டேன். பரிவர்த்தன சாலையில் என்ன விசேஷம்? இதோ வருகிறவர் யார்?

[அந்தோனியோ வருதல்.]

பசானியோ.—இதோ (வருகிறவர்) அந்தோனியோ.

ஷைலாக்.—(ஓர்புறம் ஒதுங்கிக்கொண்டு சொல்லுகிறான்.)

இச்சகக் கண்டற் காரனை யொப்ப
அவனெவ் வாறு தோற்றுகின்றனன். அவன்
கிறிஸ்தவ னாதலால் வெறுத்தே னவனைநான்,
மிகுமட மையினால் வீணிலே காசை
வட்டியி லாமலே வழங்கி வெனிஸில்
எங்கட் கெய்தும் வட்டி யிராசியைத்
தணித்துள னாதலிற் சாலவும் பகைத்தேன்.

அவன் ஒரு முறைவசத் தகப்படு வானெனில்
அவன்மாட் டெனக்குள நெடும்பகை யனைத்தும்
தீரத் தெளியத் தீர்த்துக் கொள்வேன்.
எந்தாய்க் குலத்தை யிழித்துத் தூற்றி
என்னையு மென்னு டையவா ணிகத்தையும்
அநீத வட்டி யென்றவ னியம்பிடும்
பாடு பட்டுநான் தேடும் பணத்தையும்
பழித்து வாணிகர் குழுத்தொறும் வாய்ப்பறை
அறைவன். அவனைநான் பொறுத்திடு வேனேல்
எனது குலத்திற் கென்றுஞ் சாபம்
உளதே யாகுக.

பசானியோ.— கேட்டீரோ ஷைலாக்.

ஷைலாக்.—இப்பொழு தென்பா லிருக்கும் பொருளை
லாம்
எவ்வள வென்றுநா னெண்ணிப் பார்க்கிறேன்.
எனக்கு ஞாபக முளவரை யிக்கணம்
மூவா யிரம்டக் கற்று முழுவதுமுடம்
என்வயி னில்லை. ஆயினு மென்சொல்.
என்குலச் செல்வத் தியூபலா ம்புரு
வேண்டிய வெறுக்கை கொடுப்பான். பொறும்
பொறும்.
திங்க ளெத்தனை செல்லு மென்றனிர்.
(அந்தோனியோவைப் பார்த்து)
கடவுள் துணைசெய, கனமிகு மையா!
இப்போ தியாம் நாவன் யிட்டதும் பெயரே.

அந்தோனியோ.—வட்டிக் குக்கடன் வாங்கலு மீதலும்
இல்லை யாயினு மென்னன் பனுக்கு

விரைவி லவசியம் வேண்டி யிருத்தலால்
வழக்கத்தி னின்றும் வழுவுவல் ஷைலாக்.
யாம் வேண் டுவதெவ் வளவென் றறிவதே.

ஷைலாக்.—மூவா யிரம் டக்கற்று

அந்தோனியோ.— மும்மதி.

ஷைலாக்.—அயர்ந்தேன். மூன்று மாதநீ ரறைந்தனிர்.
சரிசரி, நும்முறி நிபந்தனை நோக்குவம்.
என்றும்நீர் வட்டிக் கீதலும் வாங்கலும்
இலையெனப் புகன்றீ ரெனநா னெண்ணினேன்.

அந்தோனியோ.—அவ்வா றென்றும் யான்செய் திலனால்.

ஷைலாக்.—தன்று யிழைத்த தந்திரச் செயலால்
எமது புனித ஆபிரா மினுக்கு
மூன்று ஞாதி யானயாக் கோபு—
ஆம் அவன் மூன்றாம் ஞாதியே யாகும்—
தனது தந்தைக் கிளவலாம் லபனது
ஆடு மேய்த்திடு மந்நா ளதனில்—

அந்தோனியோ.—அதற்கென் ? வட்டி வாங்கினன் கொலோ ?

ஷைலாக்.—பெற இலை வட்டி. பின்னீ ரியம்பிடும்
வண்ணம்நேர் வட்டி வாங்க விலையவன்.
இயாக்கோப் செய்ததை இயம்புவல் என்னுதிர்.
புள்ளியும் வரியும் பொருந்திய மறிகள்
யாக்கோபுக்கு மேய்ப்புக் கூலி
ஆகுக வென்றே யவனும் லபனும்
உடன்பா டுற்றபின் பு சமர்த்தனும்
இடையன் சிற்சில இளவ ளார்களை

உரித்து நாற்ற முடைய இளம்பெண்
ஆடுக ளின்முன் னழுந்த வூன்றினன்.
அம்மறி கருப்ப மடைந்து பின்னர்க்
கருவு யிர்த்திடுங் காலக் குட்டிகள்
பன்னிறத் தனவாய்ப் பலபிறந் தன. அவை
யாக்கோ பினவா யாகி விட்டன.
ஊதியம் பெறற்கிஃ தோர்வழி யாயது,
அவற்குக் கடவு ளருளுமுண் டாயது.
மனிதன் திருட மதியா னாயின்
இலாப மீசன் கடாட்சமே யாகும்.

அந்தோனியோ.—ஐயா ! யாக்கோப் இயற்றிய வேலை
மனோரத வர்த்தக மன்றி யவனால்
எய்து வித்தற் கியலா ததுவாய்
நித்த வியம நிர் மாணமா யுளது.
வட்டி வாங்குதல் நலமென வகுப்பான்
இவ்வா மிசைத்தனை போலும். இலையேல்
உன்ற னிடத்துள செம்பொனும் வெண்பொனும்
ஆணாடு பெண்ணா டாமென வறைதியோ.

ஷைலாக்.—அஃதுநா னறையேன். ஆயினு மென்றனம்
அவைபோல் விருத்தி யாகிடப் புரிவன்.
கேளு மையா.

அந்தோனியோ.— கேளும் பசானியோ.
பேயுந் தன்பிடி வாத நாட்டச்
சத்திய வேதந் தனையெடுத் துரைக்கும்.
துராத்மா வொருவன் றூய சாட்சியம்
பகர்தல் நகைமுகப் பாதகன் போலவும்

அகத்து எழுகிப் புறத்தில் அழகுடைப்
பழம்போ லவுமாம். பழுதாம் பொய்க்கும்
அந்தோ வெத்துணை வெளிப்பகட் டம்மா!

ஷைலாக்.—மூவா யிரம் டக் கற்று மும்மதி
பெருந்தொகை யாதலிற் பெறலாம் வட்டியை
எண்ணிப் பார்ப்பல்.

அந்தோனியோ.— சரி, ஷை லாக்கே,
பணநீந் தெமைக்கடன் பட்டிடச் செய்வையோ?

ஷைலாக்.—அந்தோனி யோவே யடிக்கடி பன்முறை
எனது பணமும் வட்டியுஞ் சுட்டி
நாணயச் சாலையி னனியிகழ்ந் துளீர்நீர்.
எங்குல விருது பொறையே யாதலின்
எக்கா லமுமதை யென்றோள் விதிர்ப்புடன்
பொறுத்துளேன். என்னை நீர் பொய் மதக்கோள்
உடையாயென்று முயிருண் சுணங்கன்
என்றும் விளித்தே யென்னுடை யூத
மேலா டையின்மேல் மிச்சி லுமிழ்திரால்.
இத்தகைச் செயலெலா மெனதே யான
பணம்பான் வழங்கும் பான்மையி னுயின.
உமக்கிப் போதென் னுதவிவேண்டும் போன்ம்.
ஆதலி னென்வயி னடைந்தனிர், அடைந்து
"ஷைலாக் கே நீ தருதி பணம்" என
உரையா நின்றனிர், உம்வாய்ப் புனலை
என்றன் முகத்தி லுமிழ்ந்தே யென்னையும்
உந்தம் வாயிலி லுற்றவே திலன்றன்
கள்ள நாயைக் கடையினின் றகற்றி
உதைப்பது போலெனை உதைத்துளிர் நீரே.

நீர்பணம் வேட்டனிர். உமக்கு நானும்
நவில வேண்டுவ தெவன்? ஞமலிக்கும்
பணமுள தோ? பண மூவா யிரம் டக்
கற்றுக் கள்ளநாய் கடன்றரல் கூடுமோ?
எனநா னியம்பிடி னேற்கா தாகுமோ?
"ஐயா, அடியேன் மீது நீரும்
உமிழ்ந்தீர் புதவா ரந்தனி லுமிழ்நீர்,
இன்ன நாளிலே யெனைநீர் உதைத்தீர்,
இன்னு மோர்முறை யெனைநீர் நாயென
இகழ்ந்தி ரித்தகை மரியா தைக்கா
உமக்கித் துணைப்பண முதவுவல் யான்" என்
றடிபணி வுற்றியா னடிமையிற் றிறனுடன்
அதிவணக் கத்தோ டயலார் கேட்கொணு
வாய்ப்பேச் சுடனே வழங்கிட வேண்டுமோ?

அந்தோனியோ.—நானுனை யின்று நாயென விளிப்பேன்,
உமிழ்வே னுமிழ்நீ ருதைப்பேன் முன்போல்,
அளித்தற் கியைபுறிற் கடன்நின் அன்பர்க்
கீயுமா றென்றனக் கீவதை யொழிதி நீ.
நட்புத் தகைமை யில்லா வியல்புடை
உலோகந் தனக்கு வட்டியென் குட்டி
தனதுமிழ் கீன்றன் பாலெக் காலெந்
நேயன் பெற்றுளான்? நீ யெனக்குப் பணம்
தருவையேல் சத்துரு தான்பெறு கடனைக்
குறித்த நாளிற் கொடாஅ தொழியிற்
றண்ணளி யின்றித் தண்டனை புரிதூஉ
வாங்கு மாபோல் வாங்குதி. இவ்வா
றன்றியீ யற்க.

ஷைலாக்.— எவ பாருகீர்.
கடுஞ்சினத் தவராய்க் கழறுதன் மறிந்தீர்.
உமக்குநான் மித்திர னுகி யுமது
நேசமும் பெற்றுநீ ரெனையுட் படுத்திய
பங்க மறந்து பகரும் பொருளெலாம்
வட்டியே யின்றி வழங்கிட வேட்டேன்.
என்மொழி தன்னை யெள்ளிக் கேளீர்.
இதுநா னியற்ற வியைந்திடும் பட்சம்.

பசானியோ.—அங்ஙன முளதே லுதவை யாமே.

ஷைலாக்.—இதைநா னியற்றுவல், என்னுட னேகியோர்
சாதன லிகிதன் றன்பாற் சாதனம்
எழுதி யிலச்சினை யிட்டுவந் திடுவீர்.
நீயத்தனை யின்படி நியமித்த நாளில்
இடத்திற் றொகைதரத் தவறிற் றண்டனை
உம்முடம் பினில்யான் விரும்புறு முறுப்பில்
ஓரிராத் தல் தசை யறுத்தெடுத் துக்கொள்வ
தெனவினை யாட்டா யெழுதிநீர் தருக.

அந்தோனியோ.—உண்மையிற் றிருத்தியே, உரைத்தவா றெழுதி
வரைந்து தருவல். வரையிலாக் கருணை
யூதனுக் குளதென வுரைத்திடு வேனியான்.

பசானியோ.—எனக்கா வம்முறி யிலச்சினை யிடாதிர்
எனதின் மையிலே யான்வாழ்ந் திடுவன்.

அந்தோனியோ.—அஞ்சன்மின் எனக் கினைய தண்டம்
வருவதே யன்று. வரைந்திடு மம்முறிக்
காலங் கழிதற் கொருமா சத்தின்முன்
இதுமுத லிருமதி யினில்முறிக் குள்ள

பணத்தின்மும் மும்மடி பணம்வரு மெற்கே.

ஷைலாக்.—ஆபிராம் பிதாவே ! ஆ ! இக் கிறிஸ்தவர்
தமது கடினமா நடத்தை தானே
அயலார் நினைப்பையு மையுறச் செய்வது.
குறித்தநாள் கழியி னெபாரதங் கொளீஇ
நான்பெறும் பேறென் நவில்வீர் நயையா,
ஒருநரன் றன்பா லோரிராத் தற்றசை
ஆடு மாடுவெள் ளாட்டின் றசைபோல்
எண்ணப் படுதலு மிலை. ஓ ரிலாபமும்
பயத்தலு மின்றால். பகர்வது வேண்மோ.
அவரன் பினையா னுதைரித் துள்ளேன்.
ஆதலி னித்தகை புரிவா னெடுத்தேன்.
அடைந்திட வேட்பின் அவ்வா மாருக.
இலையேற் போமின். என்னன் புன்னி
இனியெனை யிகழா திருப்பீ ராக.

அந்தோனியோ.—ஆம் ஷை லாக்கே யம்முறி தருவேன்.

ஷைலாக்.—ஆயி னெல்லையி லடைந்திரென் னுடனே.
சாதன லிகிதன் றன்னிடத் திங்க
விநோத பத்திரம் விரைவி லெழுதிடக்
கட்டளை கொடுப்பீர். யான்கடி தேகிப்
பணத்தைப் பையினி லிட்டுக் கவலையில்
காவற் சிறுவன் காத்திடு மென்மனை
சேமமா விருத்தல் தெரிந்து பின்னர்
உமையவந் தடைவேன்.

அந்தோனியோ.— உடனே செல்லுதி.

(ஷைலாக்போதல்.)

சாந்தமாம் யூதனே தயையுடை யோனுய்

ஆகின்றான். அவன் கிறிஸ்தவ னொருவன்.

பஸானியோ.—பாதகன் மனமும் பகருநன் மொழியும்
யான் நம்பேனே.

அந்தோனியோ.— வருதும் வருதிர் நீர்.
தவணையாக் குறித்த தினஞ்சார் தற்கு
முப்பது நாட்கு முன்னரே யென்றன்
கப்பல்க ளெல்லாம் வருங்கரை தனக்கே.
இதிலோ ரச்சமு மில்லை யெனக்கே.

[எல்லோரும் போதல்.]

அங்கம் - ௨.

முதற்களம்.

இடம்:—பெல்மண்டு; போர்ஷியாவினுடைய
மாளிகையின் ஓர் அறை.

[எக்காளம் ஊத மொராக்கோ தேசத்து
அரசனும் பரிசனங்களும் வருதல்.
போர்ஷியாவும் நெரிசாவும் ஏனையோரும்
தொடர்ந்து செல்லுதல்.]

மொராக்கோ.—எனக்கனி யொரு பெண்ணைப் புரந்திடும்
இலங்கொளி யாதவ னளிக்களித் திட்ட
காருடை யாகுமிக் கரிநிற மதனால்
என்னை வெறுத்திடேல்: எல்லியி னுருப்பம்
இம்மியும் பனியை யிளக்குதல் செய்யா
வடதே சத்துள் மலிபெரு வனப்புடை
ஒருவனும் யானு முனதன் பினுக்கா
யாக்கையி னிரத்த மெடுத்துக் காட்டுமின்
செந்நீர் மிகைந்து சிவந்த தெவற்கோ
எற்கோ வெனவுணர்ந் தறிவா யெங்கள்
உடம்பினிற் குத்தி யுதிர மெடுத்து
நற்சான் றாக நன்கு விளக்குதும்.
வனிதாய்! என்றன் வதன நோக்குபு
வெருவி யோடிய வீரர்கள் பலரே.
என்றே யத்தினி லியாவ ராலும்

கழிந்திப் புடைய காரிகை யர்பலர்
என்முகம் பார்த்திட் டெனைவேட் டுள்ளார்
என்றுன் மீதுள வென்றுமே யன்பார்
சத்திய மாகச் சாற்றுகின் றேன்யான்.
சாந்த முடைய நையால்! நின்னு
பனங்கவர் வதற்கே யன்றி மற்றிங்
கென்னிற யாற்றற் கிசைகொள் ளேனே.

போர்ஷியா.—மங்கை யொருத்தி முறைமை வரித்தலில்
நலமுறி திறனுறு நாட்டந் தென்னெறி
முற்றும் யான்செல முடியாது; அன்றியென்
விதியைச் சீட்டே விதித்தற் பாலதாய்
இருத்தலி னசையுற்றி யானே வரிக்கும்
என்றன தரிமையை பெறக்கஃ தொழித்ததால்.
உமக்கியா னுரைத்துள வொண்மொழி யாலெனைப்
பெறுபவ னுக்கே பெண்டி ராகத்
தனது மதியினு லெனது தந்தை
எனைத்தடை செய்து வெளியிட் டிலனேல்,
கனமிகு மாசே யிதுவரை யான்கண்
ணுற்றவர்க் கொப்ப நீருமென் னன்பிற்
கருக ராகவே யமைவுற் றிருப்பீர்.

மொராக்கோ.—இதற்குமே வந்தன மிதம்புவன் யானே
ஆதலி னென்ற னதிட்ட மறிவான்
பெட்டியைக் காட்டப் பிரார்த்திக் கின்றேன்.
சுலுத்தான் சோலிமானை மும்முறைக்
கொற்ற லந்தனில் வென்கொளும் பாரசீக
அரசையுஞ் சோபியா மவனைபு மட்ட

இவ்வா ளாணையா லுனையா னெய்துவான்
வெருட்டி நோக்குந ரெவரையும் வெருட்டுவேன்;
இப்புவி தனிலே யிகலுளா ரெவரினும்
மிகுதிற லுடையனுப் வெல்லுவ னிங்கே;
குட்டிவடி பாலுகர் குருளையைக் கவர்வேன்;
ஆகாரந்திற் கார்ப்புறு மெல்லையில்
அரிமடங் கலையு மமருக் கழைப்பேன்.
ஆனாலேயோ! ஏர்க்குலீஸ் லிக்காஸ்
இவர்தமில் வல்லா னியாவ னென்று
அறிவான் சூதாட் டபார்வா ராயின்
மெலியவன் வென்றி மேவினு மேவுவன்.
ஆல்சிடீஸ் இவ்வா றவன்றற் றனாற்
றேல்வியெய் தினன். குருட் டதிட்டந் தாண்டிட
அருகன லாதோ னடையற் பாலதாம்
அதனை நா னடையா திழந்து துன்புற்றி
இறப்பினு மிறப்பேன்.

போர்ஷியா.— தேர்ந்திட முயல்கவிர்.
தேர்ந்திடற் சித்தி பெற்றிலி ரேற்பின்
கடிமணம் வேட்டுக் கன்னிய ரெவரையும்
உசாவுத லொழிவே னென்ன முன்னரே
உறுதியர் கச்சூ ளுரைக்கிர். அவ் விரண்டில்
ஒன்றே தேர்ந்திடற் பாலது. அஃதோர்திர்;
ஆதலி னுன்ன காராய்ந் தமிழிர்.

மொராக்கோ.—ஒழிவேன். வா. எனை விதியிட் டுய்த்தி.

போர்ஷியா.—தேவா லயந்தனக் கேமுற செல்லுதிர்.
உண்டியின் பின்னு மும்முடைத் துணிவாக்கு

செயலைச் செய்திர்.

மொராக்கோ.— நல்ல விதிப்பட
எய்துக வெனக்கே யின்பமதை யன்றேல்
உயர்விலாப் பிள்ளை வருந்துற் றேனா, அந்
தத்தனைச் சாபம் பெற்றவனாவேன்.

இரண்டாங்களம்.

இடம்:—வெனிஸ் நகரம், ஒரு வீதி.

[லான்சிலட் காபோ வருதல்.]

லான்சிலட்.—நிச்சயமாகவே என் எசமானாகிய யூதனுடைய வேலையை விட்டு நான் ஓடிப் போவதனால் என் மனம் என்னை வருத்தப் படுத்தாது. பிசாசு முழங்கை யருகிலிருந்து கொண்டு 'காபோ! லான்சிலட் காபோ! நல்ல லான்சிலட்டே! நல்ல காபோ! நல்ல லான்சிலட் காபோ! உன் கால்களை உபயோகப் படுத்து. ஓட்டம் பிடிக்கத்தொடங்கு. ஓடிப்போ' என்று சொல்லி என்னை ஏவாநின்றது. மனச்சாட்சியோ, 'கூடாது. யோக்கியமான லான்சிலட்டே! கவனமாயிரு. உண்மையான காபோ! கவனமாயிரு. யோக்கியமான லான்சிலட் காபோ! ஓடாதே. ஓடுவதை இகழ்வாயாக' என்று சொல்லாநின்றது. நல்லது, மிக்கமனவலியுள்ள பிசாசு 'மூட்டைகட்டு' என்று கட்டளை இடுகின்றது. பிசாசு 'போபோ' என்று சொல்லுகின்றது. 'உனக்குப் புண்ணியமுண்டு. உன் மனத்தைத் தைரியப்படுத்திக் கொண்டு ஓடு' என்று பிசாசு சொல்லுகின்றது. என் மனச்

சாட்சி என் இதயத்தின் கழுத்தில் தொங்கிக்கொண்டிருந்த விவேகத்துடன் "என்னு யோக்கியனை கோபுவாகிய லான்சிலட்டே! நீ ஒரு யோக்கியனுடைய குமாரன். அதிலும் நீ ஒரு பதிவிரதையின் புத்திரன். லான்சிலட்டே ஓடாதே" என்று சொல்லுகின்றது. மனச்சாட்சி, போகாதே என்று சொல்லுகின்றது. பிசாசோ, போவென்று சொல்லுகின்றது; மனச்சாட்சியே! உன் ஆலோசனை நன்றாயிருக்கின்றது என்று நான் சொல்லுகிறேன். பிசாசே உன் அபிப்பிராயம் நன்றாயிருக்கின்றது என்று நான் சொல்லுகிறேன். என் மனச்சாட்சி விதிக்கிறபடி செய்வதானால் ஒருவகைப் பிசாசாக இருக்கிற (இப்படி என் எசமானனைப் பற்றி நான் சொல்வதற்காகக் கடவுள் என்னைப் பொறுப்பாராக) என் எசமானனாகிய யூதனை விட்டுப்போகாமல் நான் இருக்கவேண்டும். பிசாசு சொல்லும் வண்ணம் செய்வதானால் பிசாசின் வடிவமாயிருக்கிற யூதனை விட்டு ஓடிப்போகவேண்டும். நிச்சயமாக யூதன் பேயின் அவதாரமே. உண்மையாகப் பேசும்போது என் மனச்சாட்சி என்னை அந்த யூதனைவிட்டுப் போகாமலிருக்கும்படி சொல்வதனால் அது கடினமான மனச்சாட்சியே. பிசாசுதான் மிகப்பட்சமான புத்தி சொல்லுகின்

றது. பிசாசே! நான் ஓடுவேன். உன் சொற்படி என் கால்கள் ஓடும்—நானும் ஓடுவேன்.

(கிழட்டுக்காபோ ஒருகூடையோடு வருதல்.)

காபோ.—ஐயா! இளைஞரே! யூதன் வீட்டிற்கு வழியெது? தயைசெய்து சொல்லும்.

லான்சிலட்.—(தன்னுள்) தெய்வமே இவர் உண்மையாகவே என்னைப்பெற்ற பிதா. பார்வை குறையானது மாத்திரமா? கண்ணே பெரும்பாலும் தெரியாததனால் அவர் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை. நான் அவரோடே பரிகாசமாக வார்த்தையாடி ஒருகை பார்ப்பேன்.

காபோ.—ஐயா! வாலிப துரையே! யூதப்பிரபுவின் வீட்டிற்கு வழியாது? தயைசெய்து சொல்லும்.

லான்சிலட்.—இனித் திரும்பும்போது உம்முடைய வலக்கைப்பக்கம் திரும்பும். பின்பு திரும்பும்போது இடக்கைப்பக்கம் திரும்பும். சத்தியமாக அதற்குப்பின் திரும்புகையில் ஒரு கைப்பக்கமும் திரும்பாதேயும். ஆனால், யூதன் வீட்டிற்குச் சுற்றித்திரும்பும்.

காபோ.—சுவாமி சாட்சியாக அந்த வழியைக் கண்டு பிடிப்பது மகாகஷ்டம். அந்த யூதன் வீட்டிலிருக்கும் லான்சிலட் என்பவனொரு

வன் அவன் வீட்டில் இருக்கிறானா? இல்லையா? உம்மாலே சொல்லக்கூடுமா?

லான்சிலட்.—வாலிப லான்சிலட் துரையைப்பற்றியா கேட்கிறீர்? (தனக்குள்) என்னை இப்பொழுது பாரும். கண்ணீர் வரும்படி செய்வேன். வாலிப லான்சிலட் துரையைப் பற்றியா கேட்கிறீர்?

காபோ.—ஐயா! துரை யல்லன், ஓர் ஏழையின் குமாரன். நானே சொல்லுகிறதாக இருந்தாலுங் கூட அவனுடைய தகப்பன் யோக்கியனான மகாதரித்திரன் என்று சொல்லுகிறேன். ஆனால் சுவாமிகிருபையால் சீவனத்துக்குப் போதுமானது இருக்கிறது.

லான்சிலட்.—சரி. அவன் தகப்பன் எப்படி இருந்தாலும் இருக்கட்டும். நாம் வாலிப லான்சிலட் துரையைப்பற்றிப் பேசுவோம்.

காபோ.—ஐயா! கனம்பொருந்திய தங்கள் இஷ்டனான லான்சிலட்—

லான்சிலட்.—ஆனதனாலே பெரியவரே, வாலிப லான்சிலட் துரையைப் பற்றியா கேட்கிறீர்? தயைசெய்து சொல்லும். உம்மைப் பிரார்த்திக்கிறேன்.

காபோ.—லான்சிலட்டைப்பற்றித்தான் எசமானே! தங்களுக்குப் பிரியம் இருந்தால் சொல்லுங்கள்.

லான்சிலட்.—ஆனதனாலே லான்சிலட் துரை? ஐயா! லான்சிலட் துரையைப்பற்றிப் பேசாதேயும். அவர் விதியின் படிக்கும் தலையெழுத்தின் படிக்கும் மூன்று சகோதரிகள் முதலாகச் சாஸ்திரங்களிற் சொல்லி இருக்கிறபடிக்கும் அந்த வாலிப துரை உண்மையாகக் காலஞ்சென்று விட்டார். அல்லது சாதாரணமாகச் சொல்லுகிறபடி மோட்சத்திற்குப் போய்விட்டார்.

காபோ.—கடவுள் காப்பாராக. இந்த வயதில் எனக்கு அந்தப்பையன் ஓர் ஊன்றுகோலாகவும் எனக்குச் சகாயனாகவும் இருந்தான்.

லான்சிலட்.—நான் என்ன ஒரு வளைதடிபோலவும் குந்தாணிபோலவும் ஓர் ஊன்றுகோல் போலவும் ஒரு முட்டுக்கால் போலவுமாகவா தோற்றுகிறேன்? அப்பா! உமக்கு என்னைத் தெரிகிறதா?

காபோ.—ஐயோ! வாலிபதுரையே! உம்மைத் தெரியவில்லை. ஆனால் என் பையன் உயிரோடு இருக்கிறானா? இறந்துவிட்டானா? தயைசெய்து சொல்லும். சுவாமி அவன் ஆத்துமாவைக் காப்பாற்றுவாராக.

லான்சிலட்.—பிதாவே! உமக்கு என்னைத் தெரியவில்லையா?

காபோ.—ஐயோ! ஐயா! எனக்குப் பார்வை குறைவு. உம்மைத் தெரிந்துகொள்ளக் கூடவில்லை.

லான்சிலட்.—இல்லை. உமக்குப் பார்வை குறைவில்லாமலிருந்தாற்கூட என்னைத் தெரிந்துகொள்வதில் நீர் தவறிப்போவீர். விவேகமுடைய தகப்பன் தான் தன் சொந்தப் பிள்ளையைத் தெரிந்துகொள்ளுகிறான். நல்லது கிழவரே! உம்முடைய குமாரன் சங்கதியை உமக்குச் சொல்லுகிறேன். என்னை ஆசிர்வதியும். உண்மை வெளியாகும். கொலை வெகுநாளைக்கு மறைந்திராது. ஒருவனுடைய குமாரன் மறைந்திருக்கலாம். ஆனால் கடைசியில் உண்மை வெளியாகும்.

காபோ.—ஐயா! தயவுசெய்து எழுந்திரும். நிச்சயமாக என் குமாரனாகிய லான்சிலட் நீரல்லவீர்.

லான்சிலட்.—இதைப்பற்றி இனிமேற் பரிகாசம் வேண்டியதில்லை. என்னை ஆசிர்வதியும். உம்முடைய பையனாக இருந்து உம்முடைய குமாரனாக இருக்கிற உம்முடைய குழந்தையாயிருக்கப்போகிற லான்சிலட் நான்தான்.

காபோ.—நீர் என்னுடைய குமாரன் என்று நான் நினைக்கவில்லை.

லான்சிலட்.—அதைப்பற்றி என்ன நினைக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் யூதனுடைய ஆளாகிய லான்சிலட் நான்தான். உமது மனைவியாகிய மார்க்கேரி என்பவள் என் தாய் என்பது எனக்கு நிச்சயமே.

காபோ.—நிச்சயமாய் அவள் பெயர் மார்க்கேரிதான். நீ லான்சிலட்டாக இருந்தால் என் சதையிலும் இரத்தத்திலும் சேர்ந்தவன் என்று நான் சத்தியம் செய்வேன். கடவுளைப் பிரார்த்திப்போமாக. உனக்குத் தாடி எவ்வளவிருக்கிறது! என் வண்டிக் குதிரையாகிய டாபீனுக்கு வாலில் இருக்கிற உரோமத்தைப் பார்க்கிலும் உன் முகத்தில் அதிக உரோமம் இருக்கிறது.

லான்சிலட்.—அப்படியானால் டாபீனுடைய வால் பின்னோக்கி வளர்கிறது என்று தோன்றுகிறது. அதை நான் கடைசியிற் பார்த்தபொழுது என் முகத்திலிருக்கிற உரோமத்தைப் பார்க்கிலும் அதிக உரோமம் அதனுடைய வாலில் இருந்தது எனக்கு நிச்சயம்.

காபோ.—ஓ! சுவாமி! நீ எவ்வளவு மாறிப்போய்விட்டாய்? நீயும் உன் எசமானும் சரியாய் ஒத்திருக்கிறீர்களா? அவனுக்கு வெகுமானம் கொண்டுவந்திருக்கிறேன். நீங்கள் இப்பொழுது எப்படியிருக்கிறீர்கள்?

லான்சிலட்.—சரி சரி! என்னளவில் நான் ஓடிப்போய்விடுகிறதாகத் தீர்மானித்திருப்பதால் நான் கொஞ்சம் தூரம் ஓடிப்போகிற வரையில் சும்மா விருக்க மாட்டேன். என் எசமான் ஒரு சரியான யூதனே. அவனுக்கா வெகுமதி கொடுக்கிறது? அவனுக்குத் தூக்குக் கயிறு ஒன்று கொடும். அவனிடத்தில் வேலைக்கு இருந்து நான், பட்டினியாக இருக்கிறேன். என் விலாவெலும்பு எல்லாவற்றையும் உமது விரலாலே எண்ணலாம். அப்பா! நீர் வந்தது எனக்குச் சந்தோஷம். நிச்சயமாகவே எனக்கு அபூர்வமான புதிய உடுப்புகள் கொடுக்கின்ற பசானியோ துரையவர்களுக்குக் கொடுப்பதற்காக உம்முடைய வெகுமதியை என்னிடம் கொடும். அவருக்கு நான் வேலை செய்யாவிட்டால் சுவாமியால் உண்டாக்கப்பட்ட பூமியின் கோடிவரையிலும் ஓடிப்போவேன். இஃது என்ன நல்ல அதிருஷ்டம்! அவர் இதோ வருகிறார். பிதாவே! அவரிடத்திற் போம். இனிமேல் நான் யூதனுக்கு வேலைசெய்தால் நானும் யூதனே,

(லியோநார்டோவோடும் மற்றைப் பரிசனங்களோடும் பசானியோ வருதல்.)

பசானியோ.—நீ அப்படிச் செய்யலாம். எப்படியாவது அஞ்சுமணிக்கு மேற்படாமல் இரா

த்திரிபோசனம் ஆயத்தமாகும்படி துரிதம் பண்ண வேண்டும். இந்தக் கடிதங்கள் போய்ச் சேரவேண்டும். வேலைக்காரர்களின் உடுப்புக்களை உடனே அமைக்கும்படி செய். கிராஷியானோவை உடனே என் வீட்டுக்கு வரும்படி கேட்டுக்கொள்.

(ஒரு வேலைக்காரன் போதல்.)

லான்சிலட்.—பிதாவே! அவரிடத்திற் போம்.

காபோ.—சுவாமி உம்மை ஆசிர்வதிப்பாராக.

பசானியோ.—அநேகவந்தனம். உமக்கு ஏதாவது என்னிடத்தில் ஆகவேண்டியிருக்கின்றதா?

காபோ.—ஐயா! இதோ என்மகன். ஓர் ஏழைப் பையன்.

லான்சிலட்.—ஐயா! ஏழைப்பையன் அல்லேன். ஒரு செல்வனாகிய யூதனுடைய ஆள் ; ஐயா! அஃது என் தகப்பனார் சொல்லுகிறபடி.

காபோ.—ஐயா! எல்லோரும் சொல்வது போல் அவனுக்கு வேலைசெய்வதில் அதிகப் பிரியம்.

லான்சிலட்.—சுருக்கம் என்னவென்றால் நிச்சயமாக நான் யூதனிடத்தில் வேலை செய்கிறேன். என் தகப்பனார் சொல்லுகிறபடி எனக்குப் பிரியம் இருக்கிறது.

காபோ.—இவனுடைய எசமானும் இவனும் பங்காளிகள் போல் இருக்கிறார்கள். (நான் இப்படிச் சொல்வதைத் தயைசெய்து பொறுப்பீராக.)

லான்சிலட்.—சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் உண்மையாகவே அந்தயூதன் எனக்குக் கெடுதிசெய்து நான் நினைக்கிறபடி கிழவரான என் தகப்பனார் உம்மிடத்திற் சொல்வதுபோல்—

காபோ.—நான் இதோ ஒரு தட்டில் புறாக்கறி கொண்டுவந்திருக்கிறேன். அதை நான் தங்களுக்குத் தருவேன். என் பிரார்த்தனையாவது:—

லான்சிலட்.—சுருக்கிச் சொன்னாற் பிரார்த்தனையாவது, யோக்கியமான இந்தக் கிழவர் சொல்லுவதனால் நீர் அறிந்துகொள்ளப்போகிறபடி என்னைச் சேர்ந்ததன்று. நான் அதைச் சொன்னாலும் என் தகப்பன் கிழவனாக இருந்தாலும் எளியவன்.

பசானியோ.—இரண்டு பெயர்களுக்காகவும் ஒருவன் பேசுக. உங்களுக்கு வேண்டுவது என்னை?

லான்சிலட்.—ஐயா! உம்மிடத்தில் வேலைசெய்ய வேண்டும்.

காபோ.—ஐயா! அதுதான் சங்கதி.

பசானியோ.—உன்னை நன்றாய் அறிவேன். என்பால்

இச்சித்த வேலையைப் பெற்றனை நின்றே.
உன்னெசமானன் ஷைலாக் குன்னைச்
சிலாகித் துரைத்துச் 'சிபாரிசு' செய்தான்.
தனிக ஷைலாக்கி னூழியந் தவிர்ந்து
வறியேற் காளா வதுமேம் பாடே.

லான்சிலட்.—என் எசமானாகிய ஷைலாக்கும் நீரும் முதுமொழியைச் சமமாகப் பங்கிட்டுக் கொண்டிருக்கிறீர்கள். ஐயா! உமக்குக் கடவுள் கிருபை இருக்கிறது; அவருக்குப் போதுமான செல்வம் இருக்கிறது.

பசானியோ.—நன்கு நவின்றனை. நீநின் மகனொடும்
போதி யப்பா! யுன் னெசமா
னிடத்தில் விடைபெற் றென்னிட மெய்துதி.
அவன்போல் வாரினு மதியா டம்பர
ஆடையை யளிக்கி யவற்குத், தவறேல்.

லான்சிலட்.—பிதாவே! வாரும் எனக்கு வேலை கிடையாது, கிடையாது. என் தலையில் எனக்கு நாக்கு இல்லை. நல்லது 'விவிலிய' புஸ்தகத்தை வைத்துச் சத்தியம் செய்யப் பிரியப்படும் இத்தலியிலுள்ள எந்த மனிதனாவது என் உள்ளங்கை இரேகைகளைப் பார்க்கிலும் நல்ல இரேகைகளை உடையவனாக விருந்தால் எனக்கு நல்ல அதிருஷ்டம் இருக்கும். போம் இதோ ஓர் அற்ப இரேகை இருக்கிறது. இங்கே சிலபெண்கள்

இருக்கிறார்கள். ஐயோ, பதினைந்து பெண்சாதிகள் தானே! அதிகக் குறைவு. ஒரு மனிதனுக்குப் பதினொரு விதவைகளும் ஒன்பது குமரிகளும் மிகக்குறைவானவையே. மூன்று தடவை மூழ்கித்தப்பவேண்டும், ஒரு பஞ்சணை ஓரத்திலிருந்து பிராணாபாயம் உண்டாகும். இவையெல்லாம் இலேசாகத் தப்பிக்கொள்ளத்தக்கவைகள். நல்லது அதிருஷ்டமானது ஒரு பெண்பிள்ளையானால் இந்தச் சங்கதியிலே அது நல்ல பெண்பிள்ளையே. பிதாவே! வாரும். இமைப்பொழுதிற்குள் யூதனிடத்திலிருந்து விடைபெற்றுக்கொண்டு வருவேன்.

(லான்சிலட்டும் கிழட்டுக் கோபோவும் போதல்.)

பசானியோ.—நலமிகும் லியோ னார்டோ ஆய்ந்திதை
நன்று முடிக்கென நாம்வேண் டுறுமால்.
இப்பொருள் கொணக்கொடு கலன்களி லேற்றி
வல்லையின் வருதி இற்றை ஞான்றிரா
கனிமதிப் புடைய வெனது நண்பர்கள்
விருந்தா கின்றனர் விரைவா யேகுதி.

லியோ.—இயன்றன யாவு மியற்றுதல் தவிரேன்;

(கிராஷியானோ வருதல்.)

கிராஷியானோ.—என் எசமானன் எங்கே?

லியோ.—ஐயா! அதோ நடந்துபோகிறார்.

கிராஷியானோ.—ஐயா! பசானியோப் பிரபூ!

பசானியோ.—கிராஷியானோ!

கிராஷியானோ.—நான் உம்மிடத்திலே வேண்டிக்கொள்வது ஒன்று உளது.

பசானியோ.—அதை உமக்குத் தந்தேன்.

கிராஷியானோ.—மாட்டேன் என்று மறுக்கக்கூடாது, நான் உம்முடன் பெல்மண்டுக்குச் செல்லவேண்டும்.

பசானியோ.—என்னுட னீரு மேகிட விசைந்தேன்.
கிராஷியானோ! நான் கிளத்திடல் கேளுநீர்,
நாகரி கம்மிகு நடத்தை யிலீர்நீர்,
மிகுந்த வினயமு மிருது வசனமும்
இல்லீர், இத்தகைக் குணமெலா மெங்கள்
கண்களிற் களங்க மற்றவை யாகி
உமக்குத் தகுதியா யுள்ளன வாயினும்,
இதன்முன் னும்மைத் தெரியா விடங்களிற்
சிறிதுநா கரிக மிலீரெனத் தெரிக்கும்.
குதித்துத் துள்ளுநுங் குணத்தைச் சிறிது
மரியாதை யாந்தண் மாத்திரை யருந்தி
வருத்தி யடக்கமென் றுறு கிறேன்யான்.
இலையெனி னும்பால் வினய மின்மையால்
எனையு மவ்வழி னுமைப்போ லெண்ணுவர்,
என்னம் பிக்கையு மிழப்ப லதனால்.

கிராஷியானோ.—பசானியோ வேந்தன் பகர்வது கேட்டீர்
சாந்த வொழுக்கமுந் தாழ்ந்த வசனமும்
ஓரோர் காலத் தாணை யிடுதலும்

தோத்திரப் புத்தக முடையிற் றேற்றலும்
கம்பீ ரத்தனைக் காண்பித்தலும்
அன்றியுந் தோத்திர மறையுஞ் சாலையில்
இவ்விதத் 'தொப்பி'யா லென்கண் மறைத்தலும்
நெட்டுயிர்ப் பெறிந்தாங் கோமென நிகழ்த்தலும்
நாகரீ கம்முள நடத்தை யுடைமையும்
ஒருவன் பாட்டியை யுவப்பித் தற்காக்
கட்டமாய்ப் பயின்ற தமுகக் காட்டிடும்
இத்தகை யும்முறை யனைத்தோன் றிலெனேல்
இனியென்னை நம்பலின் றென்றுமக் குறிப்பீர்.

பஸானியோ.—நல்ல நுமது நடக்கைதனைப் பார்ப்
போம்.

கிராஷியானோ.—ஆனா லின்றிர வத்தனை வேண்டா,
பானின் றிரவி லியற்றுவ தாகெனை
மதித்திட லகற்றுதிர்.

பஸானியோ.— மற்றதற் கேடில.
விநோத மகிழ்வினை வேட்டிடு நண்பர்
மேவுதி லானீர் மிகவுல் லாசமா
யிருத்தலே வேண்டும். இஃதென் விருப்பம்.
பிரிவு வேலையா னெனக்கின்றும். செலீர்.

கிராஷியானோ.—நான்லா ரென்சோ முதலிய நண்பர்
இடத்திலே செல்குவன். என்னினு மிவ்விராப்
போசன காலம் பொருந்துவன் நும்பால்.

(எல்லாரும் போதல்.)

மூன்றாங் களம்.

அதே இடம் (அதாவது வெனிஸ் நகரம்.)

ஷைலாக் வீட்டில் ஓர் அறை.

[ஜெசிக்காவும் லான்சிலட்டும் வருதல்.]

ஜெசிக்கா.—இத்துணை விரைவில் என்றந்தையை நீ
இகந்தே குதலிற் கின்ன மிகவுறும்.
நமதில் நரக மெனினு முனைச்
செயலால் களியா யிதிற் றிரு
கவறு கைற்பிக் களிப்புண் டாக்கினை.
உனக் கிதோவொரு 'டக்கற்று' போய்வா.
ஏ! லான்சிலட்டே யிரவு லாரென்சோ
டன்புத் தெரசமா யமைவிருந் துண்ணற்
கேகுவன், அவனிட மிக்கடி தத்தை
ஏனைய றியா திருத்திப் போய்வா.
உன்னுட னுரையா டுவதைகண் டெந்தை
தெரிந்திடச் சிறிதும் விரும்புத லில்லேன்.

லான்சிலட்.—போய் வருகிறேன். விடைதருக. சொல்லவேண்டியதை என்கண்ணீர் சொல்லு கின்றது. அதிசயப்புறஜாதியார் அதிமதுரமுத் திறுப்! அதிப்பிரியமான யூதப்பெண்ணே! போய் வருகிறேன். இந்த மடமையான கண்ணீர்த் துளிகள் என் ஆண்மையைக் குறைக்கின்றன. போய்வருகிறேன்.

ஜெசிக்கா.—நல்ல லான்சிலட்டே நலமுடன்
போய்வா.
(லான்சிலட் போதல்.)
ஐயோ! என்னுடை யப்பன் புதல்வியா
யிருத்தலை யெள்குறு மெத்துணைப் பாவம்.
அவனிரத் தத்தி னும் மகளாயினும்,
அவனடக் கைக்குப் புத்திரி யல்லேன்.
சொல்லிய வண்ணம் லாரென்சோவே
செய்வீரே லிந்தத் தியக்கந் தீர்ந்து
கிறிஸ்தவ னாகும் பிரியங் கொழுநன்——
உடமனை யாட்டியா வுறுத லுண்மையே.
(போதல்.)

நான்காங்களம்.

அதே இடம்: (வெனிஸ் நகரம்), ஒரு வீதி.

[கிராஷியானோ, லாரென்சோ, சாலரீனோ,
சோலானியோ வருதல்.]

லாரென்சோ.—இல்லையில்லை, இராப்போசன காலத்தில்
வதிலு நழுவியா தேகியென் மனையில்
வேடம் பூண்டோர் கடிகையின் மீளுதும்.
கிராஷியானோ.—நாமினும் யத்தன நன்காச் செய்திலம்
சாலரீனோ.—இனுந்தீ வர்த்திக் காளேற் படவில்லை.
சோலானியோ.—இரசமா வேற்பாடி னன்றி யிவ்வேடம்
நன்றல, தரியா தொழிதலே நன்றும்
என்றுநா னெண்ணுவல்.
லாரென்சோ.— ஈரிரு கடிகைதான்
இப்போழ்தானது, இன்னுமிரண்டு
மணியுள வேண்டிய வண்ணஞ் செய்பவே.
[லான்சிலட் ஒரு கடிதத்துடன் வருதல்.]
மித்திரா லான்சிலட், விசேடமென் னுரைக்க.
லான்சிலட்.—நீர் தயைசெய்து இதை உடைத்துப்
பார்த்தால் அது விசேடத்தைச் சொல்லும்.
லாரென்சோ.—அஃதியா ரெழுத்தென றறிவே
[னியான்: அதை
வரைந்த கையோ மலிவனப் புடைத்தே.
வரைந்தாள் கடிதத்து, வெவ்வண் ணத்தினும்
அதிக வெண்மை யமைந்தவ் வத்தமே.

கிராஷியானோ.—மெய்யாகக் காதல் விஷயமே.
லான்சிலட்.—ஐயா! போக உத்தரவு தானோ?
லாரேன்சோ.—நீ எங்கே போகிறாய்?
லான்சிலட்.—ஐயா! என் புதிய எசமானாகிய
கிறிஸ்தவனுடனே இராப் போசனம் பண்ண
என் பழைய எசமானாகிய யூதனை அழைக்கப்
போகிறேன்.
லாரேன்சோ.—ஏற்றுக்கொள் நீ இதனை. சாந்தையாம்
ஜேசிக்கா செப்பின செய்வது தவறேன்
என்றவ ளிடத்தி லியம்புதி தனித்தே.
[லான்சிலட் போதல்.]
வருமின் துரைகா ளிற்றைநான் றிரவு
வேடம் பூண்டிட வேண்டுவ புரிதிரோ?
தீவர்த் திக்கா ளித்தமா வுளனால்.
சாலரினோ.—ஆம்யான் வல்லையி லதற்காவேகுவன்.
சோலானியோ.—வருவனியானும்.
லாரேன்சோ.— எனையுங் கிராஷியா
னோவையுங் கிராஷியா னோவின்மாளிகையில்
சற்றுப் பொறுத்துச் சாருதி ரையா.
சாலரினோ.—நாமப்படிச் செய்கின்றது நலமே.
அடுத்த இடம் அதாவது வேனிஸ் நகரம்
ஷைலாக் வீட்டில் ஓர் அறை.
[சாலரினோ சோலானியோ போதல்.]
கிராஷியானோ.—அழகிய ஜேசிக்கா வனுப்பிய கடிதமா

லாரேன்சோ.—உம்மிடத்தி யாவையு முரைப்ப தவசியம்
அவளைப் பிதாவி னகத்திருந் தெவ்வணம்
அகற்றலா மென்பதூஉ மெத்துணை யணியும்
பொன்னு மவளிடம் பொருந்திய வென்பதூஉம்
எச்சே வகனுடை யெடுத்து வைத்துளாள்
என்பதூஉ மெனக்குத் தெரித்தன ளேந்திழை.
அவள்பிதா வோர்கா லமரர்நா டடையின்
அவன்து சாந்த மகளா லேதான்.
அவள் விசுவாசி யலாத யூதன்
புதல்வியா யிருத்தற் பொருட்டே யன்றி
எக்கா லத்து மின்ன லவட்காங்
கெய்துவ தொழிக. வருதி யென்னுடன்.
வருமிக் கைவிழைல யிதனைநீர் பாரீர்.
எழிற் ஜேசிக்கா வென் றிவர்த்தி யேந்துவள்.
[எல்லாரும் போதல்.]

ஐந்தாங்களம்.

அதே இடம் (வேனிஸ் நகரம்), ஷைலாக்கின்
வீட்டின் முன்னே.

[ஷைலாக்கும் லான்சிலட்டும் வருதல்.]

ஷைலாக்.—பழைய ஷைலாக்கு பசானியோ இவர்க
டமக்குள தார தம்மிய முணர்வாய்.
உனது நேத்திரமே புண்மை யுணர்த்திடும்.
என்ன! ஜேசிக்கா! என்னிடமே போல்
அவனிட மீதா ணருந்துவ தொழிவாய்.
என்ன ஜேசிக்கா! என்னிடமே போல்
துயிறலுங் குறட்டை வாங்கலுந் துகிலினைக்
கிழித்தலுந் தவிர்தி. கேட்டிலை ஜேசிக்கா.

லான்சிலட்.—ஜேசிக்கா.

ஷைலாக்.—உனையாரழைத்திட உத்தரவளித்தது?
கூப்பிடும்படி நான் கூறிடவில்லையே.

லான்சிலட்.—ஏவினாலொழிய நான் ஏதுஞ் செய்ய முடியாதவன் என்று தாங்கள் அடிக்கடி சொல்வது வழக்கம்.

[ஜேசிக்கா வருதல்.]

ஜேசிக்கா.—எனை யழைத்தனிரோ? ஏதுநும் மிட்டம்?

ஷைலாக்.—இராப்போ சனத்திற் கெனை யழைத்துள
ஜேசிக்கா! திறவு கோல்கள் இந்தா. [ளார்.
ஏன்! யானேகுதல் வேண்டும், என்னை
அன்பா யழைத்திலர், அவர்செயல் முகத்துதி.

ஆயினு மமிதமாச் செலவிடுங் கிறிஸ்தவ
னுணவுண் டிடுவா னுவப்புட னேகுவல்.
என்றன் புதல்வியே ஜேசிக்கா வென்
வீடுகாத் திரு. மிகு வெறுப் போடேகுவல்.
கனவினிற் பணப்பை கண்டே னேற்றிரா.
ஆதலி னென்மன வமைதிக் கேதோ
தீங்கு விளைவது திண்ணம் போலும்.

லான்சிலட்.—ஐயா! தாங்கள் போகவேண்டும் என்று தங்களைப் பிரார்த்திக்கிறேன். என் இளைய எசமான் தங்கள் 'வசவை' (வரவை) எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்.

ஷைலாக்.—நானும் அப்படியே எதிர்பார்க்கிறேன்.

லான்சிலட்.—அவர்கள் ஒன்றுசேர்ந்து பேசிக்கொண்டிருந்தால் நீங்கள் ஒரு வேஷக் கூத்துப் பார்ப்பீர்கள் என்று நான் சொல்லமாட்டேன். நீங்கள் பார்த்தால் நாலு வருஷத்திற்கு முன் சாயங்காலம் வந்த 'விபூதித் திருவிழாப் புதன்கிழமை'யானது காலை ஆறுமணிக்கு வந்துபோன 'ஈஸ்டர்' திங்கட்கிழமையன்று என் நாசியிலிருந்து இரத்தம் சும்மா வரவில்லை.

ஷைலாக்—ஆங்கே வேஷக்கூத்து மமைவதோ?
யானிங் கியம்புதல் கேட்டி ஜேசிக்கா!
எனது கவாட மெல்லாந் தாளிடு.
முரசி னோசையு முரணிய கழுத்துடை
ஊதுகுழலின் கில்லென் னோசையும்

செவியுமின் பெருகுத் தைலம்பூசிய
முகத்தினை யுடைய கிறிஸ்தவ மூடரை
நோக்குவான் சாளர நுழைபேல். உன்றன்
மென்னியை நீட்டேல் தெருவினில். என்றன்
அகத்தின் செவிக ளாகும் பலகணி
அடைப்பாய். மாட்சிமையமையுமென் வீட்டில்
அப்பவீணையாட் டார்ப்பமை யறக.
இற்றை யிரவில் விருந்துணாற் கேகச்
சற்றும் பிரீதி யிலதால், சத்தியம்,
ஆயினுமேகுவல். அடா! நீ யெனக்கு
முன்ன ரடைந்தியான் வருவது மொழிமோ.

லான்சிலட்.—ஐயா! நான் முன்னே போவேன். அம்மா! இவர் சொல்வதெல்லாம் இருக்கட்டும். நீர் சாளரத்தின் வழியாகப் பாரும். உம் பார்வைக்குத் தகுந்த ஒரு கிறிஸ்தவன் அந்தப்பக்கமாகப் போவான்.

[போகுதல்.]

ஷைலாக்.—ஆகாரேச்சம் ஆ! அப்பேதை யென்சொனான்?

ஜெசிக்கா.—'அம்மணி! வந்தன' மென்ன வறைந்தனன். வேறிலை.

ஷைலாக்.— இத்திருவன் மிக்க வன்பினனே,
ஆயினும் பெருண் வேட்டோன்; அன்றியும்
காட்டுப்பூனையிற் கழியப் பகலெல்லாம்

துயிலுவன். நற்றுமேபோன் ஒருவன் தொழிலில்
சோம்பித் திரிதருஞ் சுரும்பின் மென்னே
டிருவி யெங்குக விலையே யாதலின்
அவனை விடுக்கனன். அவனை யென்வயிற்
கடன்பெற்றுள்ள களஞ்சிய மனைத்தும்
வீணிற் செலவிடற் குதவயான் வேட்ட
ஒருவனிடத்தனி லுய்த்துளேன் யானே.
செல்வா யகத்தி னுள்ளிற் ஜெசிக்கா!
உடனே யொருகால் மீளினு மீளுவன்.
உரைப்ப துகுற்றுதி, கவாடமடைத்தி.
'இறுக்கிப் பிணித்தலை சுறுக்கிற் காணலாம்'
எனுமுதுரையினை யென்றும் விருத்தி
நாடினோன் மனதிலதென நவிலாமே.

[போதல்.]

ஜெசிக்கா.—சுகமே போய்வா, அதிட்டந் துணைசெயில்
என்னைப்பெற்ற பிதாவை நானிழந்தேன்.
நின்ற புதல்வியை யிழந்தனை நீயுமே.

[போதல்.]

ஆறுங் களம்.

அதே இடம் : வெனிஸ் நகரம்.

[கிராஷியானோவும் சாலரினோவும் வேஷதாரிகளாய் வருதல்.]

கிராஷியானோ.—நம்மை லாரென்சோ நணுகுற நவின்ற
கொட்டிலாமிஃதே.

சாலரினோ.— குறித்த கடிகையும்
ஆயது.

கிராஷியானோ.— அன்பர்கள் குறித்த கடிகையின்
முன்னரே முடுகி வராதத னிவர்
ஆலசி யமுசிய லதிசயம் விளைக்கும்.

சாலரினோ.—நவின நண்பினை நன்கு நாட்டுவான்,
நாட்டிய நட்பு நழுவா திருக்க
முந்துறும் விரைவின் மும்முன் னொன்றும்
கடுப்புடன் சித்தசன் கபோதஞ் சென்றிடும்.

கிராஷியானோ.—எக்காலத்து மியல்பே யஃது. இங்
குன்னவுட் காருத லுற்ற காலையில்
உளதாங் கடும்பசியுடனே யுண்டபின்
எழுபவ னெவனுளன் ? முன்ன மியற்றிய
கட்டமாங் கதியெலாங் கால் பெயர்த் தப்பின்
தளிவி லுற்சாக மொடுதிரும் பிச்செயும்
அசுவ முண்டோ ? உளவாம் பொருளெலாம்
அனுபவித் ததினு மளவிலா வூக்கம்
செறுத்துப் தேடப் படுகின் றனவே.
பாத்தையின் குணமுள பலவுந் தன்னும்
றழுவிப் புல்லித் தனுதரி னைத்துறை

இகந்து நகினுட னிகிரியோ னிடம்பன்
போன்று மரக்கலம் போதர லெற்றே!
தாசி யியல்புடைச் சதாகதி தன்னால்
மழையினும் வெயிலினும் வருந்தின பக்கமும்
இதர்ந்த சிதையுமாய்ச் சிதைவுறு நாவாய்
மெலிந்து தளர்வுற் றிருவறி யன்றும்
இடம்பன் போலு மீளலெத் தகைத்தே ?

சாலரினோ.—இதோ லாரென்சோ வருகிறார். இன்னும்
இதைக்குறித் தினிமேற் பெயர்த்தும் பேசுவாம்.

[லாரென்சோ வருதல்.]

லாரென்சோ.—இனிய நண்பர்கா ளித்துணைக் காலம்
தாழ்த்துநான் போந்த தவற்றினைப் பொறுமின்.
என்வழி பார்த்துமை யிருக்கச் செய்தது
என்பணி யேயலால் யானலேன், எனைப்போற்
காதலி காடுநீர் கள்வரிற் றிரிதர
வாஞ்சித் திடுங்கால் மற்றுமக் கிப்படி
நானும் வழிபார்த் திருப்பேன் நணுகுதும்.
இவ்வழி யென்னுடைத் தந்தையாம் யூதன்
உளனும். உள்ளோ ருள்ளார் யார்கொல் ?

[ஜெசிகா வேலைக்காரன் உடையுடன் தோன்றுதல்.]

ஜெசிகா.—யாவர்நீர் ? உமது தொனியால் யானுமைத்
தெரிந்துளேன், சதமே, ஆயினுந் தெளிதின்
ஐய மகன்றிட வறைதிர லெனக்கே.

லாரென்சோ.—உனது காத லுடைய லாரென்சோ

ஜெசிகா.—உண்மை லாரென்சோ! உன்னையா லென்புன்

அன்ப! மற்றுமையலால் யாவரை யித்துணை
நயக்கிறேன்? நான் உம் மவளா யிருத்தலை
உமையலால் லாரென்சோ! உணர்வார் யார்?

லாரென்சோ.—என்னுடை யவளாய் நீயுளை யென்று
உன் நம்பிக்கையும் கடவுளு மேசாட்சி.

ஜெசிக்கா.—இதோ பிடியு மிந்தப் பெட்டியை.
பிரயாசத்திற் கேற்றதே யிருக்கும்,
சாலமிற் கண் ணுறு வண்ணம் சல்லிய
இருந்தமை யுவக்கிறேன்; எனதுவேட மடையால்
மிகவும் வெள்கினேன், ஆயினும் வேட்கை
கண்ணிலா ததுவே, காதலி னேர்புரி
சின்னஞ் சிறுமைச் செய்கைகள் தெரியார்.
தெரிந்திட வல்லரேல் தேவ தூதரும்
இச்சிறை நோக்கச் சிந்தகன் மறுக்
செக்கிறக் கமோவனு மெனக்கா னவன்.

லாரென்சோ.—இறங்குதி. எனக்குத் தீவர்த்தியாளா
யிருத்தல் வேண்டும்.

ஜெசிக்கா.— என்ன? எனது
நாணத் தெரிக்க நானுமோர் பந்தம்
பிடித்திடல் வேண்டுமோ? பிடியா தேயது
மிக்கவெளி வாயுள தன்றோ? மெய்யாய்!
இப்பணி காதல! எவர்க்குமெற் றெரிப்பதே,
காத்தொளிந் திருக்கக் கடவேன்.

லாரென்சோ.— காதலி!
சேவகன் றனது சிறந்த வுடையினும்

எழில்காட் டுவளாய். ஒல்லையில் வருதி.
ஏகாந்த மாமிரா வேகிடும் வல்லையில்.
பசானியோ விருந்தில் நமையெதிர் பார்க்கிறார்.

ஜெசிக்கா.—கதவுகா ளிட்டுநான் சில 'டக்கற்' றுடன்
உம்முட னொல்லையி லாகிடு வேன்யான்.

(மேலே போதல்.)

கிராஷியானோ.—என்றன் றலைமுடி யாணைமற் றிவள்ஓர்
அந்நிய மதத்தினள், யூதை அல்லள்.

லாரென்சோ.—அவளை நானேசிக்க வாதர வோடும்
வேட்டிலே னெனில்யான் மேவுக சாபம்.
எனெனி லென்மதிப் பதுபிழை படாதெனில்
அவளோர் அறிவுடை யவள்தான். என்றன்
கட்டுறு மன்னவை கண்ணுமேல் வனப்பினள்,
சத்த மெனவவள் நிரூபித் துள்ளாள்.
ஆதலி னென்று மாசிலாச் சிந்தையில்
அவளை யவ்வா றறிவுடை வனப்பும்
மெய்ப்பு முடையளாய் மனதிற் றிருப்பன்.

[ஜெசிக்கா கீழேவருதல்.]

என்ன? வந்தனையோ? வருதிநீ துணைகாள்.
மகமுடிப்போல் வேடம் பூண்டு நம்பர்
இதுவரை நமக்கா வெதிர்பார்த் திருப்பரே.

[ஜெசிக்காவோடும் கிராஷியானோவோடும் போதல்.]

[அந்தோனியோ வருதல்.]

அந்தோனியோ.—அங்கே யார்?

கிராஷியானோ.—ஐயா ! அந்தோனியோ !

அந்தோனியோ.—சீச்சீ கிராஷியானோ ஏனைய கிளைஞர்
எங்குளர் ? இப்பொழு தொன்பான் கடிகை
கழிந்த, நின் காதல ருமக்காக் காத்தனர் ;
இன்றை யிரா விழா வில்லைக் கூத்திலை,
மாருதந் தானியா வந்தது. பசானியோ
கடிதிற் கப்பற் சேர்குவர். உம்மை
நாட விருபது பெயரை யனுப்பினேன்.

கிராஷியானோ.—களிமகிழ் வுற்றேன் ; இந்நாள் இரவே
நாட் பாய்விரித் தகன்றிடின் மிக்க
இன்பம் விழைப்ப தெனக்குவே றில்லையே.

[எல்லோரும் போதல்.]

ஏழாவது களம்.

இடம் :—பெல்மண்டு போர்ஷியா வீட்டின் ஓர் அறை.

[எக்காளம் ஊத. மொராக்கோ அரசனுடன் போர்ஷியாவும் அவள் பரிசனங்களும் வருதல்.]

போர்ஷியா.—திரையை நீக்குபு சிறப்புடை யரசன்
காணவப் பெட்டி களைக்காட் டுதியால்.
—இனியுமக் கிட்ட மானதைத் தொடுதிர். [நர்சுவ

மொராக்கோ.—"எனைத்தெரிந் தெடுப்போன் பல்லோர்
தடைவான்" என்னுஞ் சாசன மமையுந்
தமனிய மதனாற் சமைந்தது முதலதே.
"எனைத்தெரிந் தெடுப்போன் தகுதிக் கிசைந்ததை
அடைவான்" எனும்வாக் களித்திட் டமைதரும்
இரசிதத் தாய திரண்டா வதுவே. [யும்.
"எனைத்தெரிந் தெடுப்போ னுள்ளன வெலாந்
ஈந்தெதற்குந் துணிந்திடல் வேண்டும்" எனும்
அச்சுறு நயமிலா வாசக மறைந்திடும்
ஒளியில் வங்கமா யுளதுமூன் றாவதே.
பெட்டியைச் சரியாத் தொட்டன னென்பதை
எவ்வண மறிவேன் விளம்புதி யாலரோ ?

போர்ஷியா.—அவற்று ளொன்றி லென் படமுள தரசே
அதுதெரிந் திடி லதனோ டியானுமே,

மொராக்கோ.—தெரிவி லெனக்குத் தெய்வந் துணைசெய,
பார்ப்பல், பொறிமொழி மாறிப் பார்ப்பல்,
வங்கப் பேழை வகுப்ப தென்கொல் ?

"எனைத்தெரிந் தெடுப்போ னுள்ளன வெவையும்
ஈத்தெறிந்து துணிந்திடல் வேண்டும்." ஈயக்
கட்டவன்: எதற்கா? வங்கந் தனக்கா?
ஈயந் தனக்கா துணிதல்? இப்பேழை
அச்சுறுத் துவதே. அனைத்துந் துணிந்திடும்
மானவர் பெருநல மதித்தே செய்குவர்.
பொன்மனம் பயனில் பொலிவுறு தோற்றந்
தனைநினை தற்குத் தாழிசை யாதே.
ஈயந் தனக்கா எதுவு மீந்திடேன்,
துணிவுடன் செய்யேன். நாவெண் மையுடன்
வெண்பொன் னுறும் விளம்புவ தென்கொல்?
" எனைத்தெரிந் தெடுப்போன் றகுதிக் கிசைந்ததை
அடைவான்." அவன்றன் தகுதிக் கனமளந்து.
நில்லாய், மொராக்கோ! நிறுநின் மதிப்பை
ஓரமின் றியுய்த் துணர்குதியால்.
உனதனை யினுன்னை மதித்திடிற்
போது மான நுனக்குப் பொருத்தமே.
ஆயினும் போதுதல் அப்பெண் மணியை
அணுகு மளவில தாயினு மாகும்.
ஆயினு மென்றன் தகுதியை யயிர்த்தல்
என்றன் தகுதியை யிகழ்வதே யாகும்.
எனது தகுதிக் கியைந்திடு மளவு!
அஃதப் பெண்மணி யாகும். ஐயமேன்?
அக்கழு முயர்குடிப் பிறப்பு மமைதரு
நாகரி கமுடை நடக்கையும் பண்பும்
அருமி வற்றுள வட்குநான் தகுதியே.

அன்புடைமையி னிவையினுந் திறந்தகையுளேன்,
இனுந்தடு மாறு திரைந்தெரிந் திடிலென் ?
செம்பொனிற் றீட்டிய செய்ய சாசனத்தை
இன்னு மோர்முறை நானியைவுற நோக்குவல்.
" எனைத்தெரிந் தெடுப்போன் பல்லோர் நச்சுவ
தடைவான்". அஃதவ் வனிதையே யன்றோ?
இப்பூ தலமெலா மிவளைவேட் டுளதால்,
உயிரோ டுள்ள மகாத்துமா வாகும்
இம்முனி கோயி லேத்துதற் குலகில்
நாற்றிசை யோரும் வந்துறு கின்றனரே.
ஏர்க்கே னியாவனம் இடமால் அரேபியாப்
பாழாம் பாலைத் திணையெலா மிப்பால்
பொற்புடைப் போர்ஷியா தனைக்கண் ணுறவரும்
இறைவர்க் கிராச பாட்டை யாயினவே.
செருக்குடைத் திரைநீ ரமே லெறிந்து
வானின் முகத்துத் திரையுமிழ் வாரிதி
தடுத்தில தன்னிய வீரர்சார் வுறலை.
கால்வாய் கடந்திடல் போற்கடல் கடந்து
தகவின்கொள் போர்ஷியா வைக்காண வொருவர்
இவளது திவ்விய வோவிய மிந்த
மூன்றி லொன்றே மூடிக்கொண் டுளது.
ஈய மொருக்கா லிவளை யுடையதோ?
இவ்விழி யெண்ணமே நிரயம் புகுத்தும்,
அருமிற ரதியாப் பிரேதக் குழியினில்
அவளது சேமச் சேலையை யடக்கவும்
தகுதியிற் றாழ்தரு மொளியிது லோகமே.

காய்ச்சின கனகம் தனிலும் பத்திலோர்
பங்கே மதிப்புடை வெள்ளியிற் பதித்தனள்
எனவெண் ணுவனோ? ஏ! தீ நினைவே!
இத்துணை விலையுய ரிரத்தின மென்றும்
பைம்பொனி லன்றிப் பதித்த தின்றே.
இங்கி லாந்தி லிரணியத் தனிற்பதி
தேவ தூதன் திருவுருத் தாங்கியோர்
நாணய முண்டால், ஆயினந் நாணயத்
தவ்வுரு வெளியிற் பதித்த தாகும்.
ஈண்டு இவ்வரசின் ஆடக வமளியில்
அகமெலா நிறைந்தமர்ந் தனனோ ரணங்கே.
சாவி தாட்டீகோல், இதை நான் தெரிந்துளேன்.
அதிட்ட மெவ்வண மாயினு மாகுக.

போர்ஷியா.—சுந்தர தரசே! சாவியை யேற்றிர்.
என்படமாங்கே யிருப்பின் அம்முறைமைநான்.

மொராக்கோ.—(செம்பொற் பெட்டியைத் திறக்கின்றான்.)
ஐயோ! நியமமே! ஏதுள திங்கே,
வெண்டலை யதனது வெறுங்கட் குழியில்
வரைந்தவோர் சுருளுளது, அதைவா சிப்பல்.
(வாசித்தல்.)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

மினுமினுப்ப தெல்லாம்பொன் னாகாதென்றே பல்கால்
விளம்பல் கேட்டாய்
எனது வெளிப்புறங்காணற் பொருட்டே தம்முயிர் தருவா
ரிலக்க மில்லார்,

கனகத்தின் புழுமலியுங் கல்லறையுந் தமனியப் பூச்
சுடைய தாமால்,
மனவலிமை யுடையாய்போன் மதிவலியு முடையோனு
யில்லா யன்றே. (1)
மதிப்புடையா யாகியுன தவயவங்க ளிளமையுதா
வயங்கு மாபோல்
முதுமைசேர் விவேகமலி வுடையோனாய் நீயுமிருந்
திவோ யாகில்
இதுபுரைவல் விடையுமுனக் கிங்கிடவே ணுவதொன்று
மிலதே யாகும்
வதுவைநீ வேட்டிடலும் வெறுப்பெனக்காம் விடைபெ
றுதிவாழி மன்னே. (2)
மெய்யா வெறுப்பே வேலையும் வினை.
விருப்பே ஏகுதி. வெறுப்பே வருதி
சலாமம்மா! போர்ஷியா! சாலப்பேசி
விடைபெற வொண்ணு விசனம் மிகவுள
இதயனன், இவ்வணம் தோற்பவர் பிரிவரால்.
(அவன் பரிசனத்தோடும் ஏக, எக்காளம் ஊதுதல்.)

போர்ஷியா.—அவரைச் சாந்தமா அகற்றினே னம்மா
சர்த்திய வெழினி. எனையிவர் போற்கரு
மூர்த்திய ரெவரும் முன்தெடுத் திடுகவே.
[எல்லாரும் போதல்.]

எட்டாவது களம்.

இடம் :—வெனிஸ் நகரம் ஒருவீதி.

[சாலரினோவும் சோலானியோவும் வருதல்.]

சாலரினோ.—என்ன,என் அன்பனே! பசானியோகலத்துச்
செல்லுறும் போதினுன் செவ்விதிற் கண்டேன்,
அவருடன் கிராஷியானோவு மகன்றனர்.
அக்கலத் துண்மையா லாரென் சோவிலை.

சோலானியோ.—துட்ட னம்யூதன் தான் இட்டகூக்குர
இந்நக ரதிபனை யெழுப்பியாங் கவனுடன் [லால்
பசானியோ வின்கலம் பார்த்திட முயன்றான்.

சாலரினோ.—காலந் தாழ்த்தவர் வந்தனர். கலமும்
சென்றது. லாரென்சோ வவனன்புசேர்
ஜெசிக்கா விருவருஞ் செல்ல வோடத்திற்
கண்டவ ருளரெனக் கடற்கரை தனிலெந்
நாட்டிறை தனக்கு நவின்றனரார் சிலர்.
அன்றியும் பசானியோ செல்கலத் தவருடன்
அவர்கள் சென்றில ரென அந்தோனியோ
உரைத்தனா ருறுதியிவ்வூ ரிறைவ னுக்கே.

சோலானியோ.—குக்கலும் யூதன் மறுகெலாங்குரைத்
தத்துணைக் குழப்பம் அத்துணை விநோதம் [தாங்
அத்துணை மூர்க்கம் அமைந்தபல் வகைமொழி
இதுவரை கேட்டிலேன். எனது புத்திரி !
ஆ!என் 'டக்கற்று'. ஆ!என் புதல்வி
ஒருகிறிஸ்தவனோ டோடிவிட் டனளே

ஏ! என் கிறிஸ்தவ 'டக்கற் றுகளே'!,
நீதியே! நியாயம் நிகழ்த்து சட்டங்களே!
என்'டக்கற்று'ம் எனது தனையையும்!
இலச்சினை யிட்ட கோர்வை 'டக்கற்று'
நிறைந்த லச்சினை நிலவிரு பைகள்.
இரட்டை 'டக்கற்று'கள் என்மாட் டுள்ளன,
என்றன் புத்திரி யெடுத்தகன் றனளே.
அணிகள், அருந்தக விரண்டு மணிகள்
மதிப்புள இருமணி வவ்வின ளென்மகள்.
கன்னியை நீதியே கண்டு பிடித்திடாய்.
அரதனம் 'டக்கற்று'களவை யெல்லாம்
அவளுடன் மேனியி லுடையன மற்றன்றே.

சாலரினோ.—ஏ!வெனிஸ் நகரு ளெல்லாச் சிறுவரும்
அவன்மணி யவன்மகள் அவன்'டக்கற்று'கள்
என்றுக் கூக்குர லிட்டவற் றொடர்வார்.

சோலானியோ.—நலமிகும் அந்தோனியோ தம்தவணை
இகவா திருப்பா ராகுக. இலையேல்
இதற்கவர் சாவு மிடும்பை யெய்துவர்.

சாலரினோ.—நன்றும் ஞாபக மூட்டினிர். நெருநலோர்
பிரான்சு தேசத்தா னுடன் பேசினேன்.
பிரான்சையும் இங்கிலாந்தினையும் பிரிக்கும்
ஒடுக்கமாங் கடலி னுயர்விலைப் பொருளொடு
கப்பலொன்று கவிழ்ந்ததென் றுரைத்தான்.
அந்நவ முரைத்தநும் அந்தோனி யோவை
எண்ணினே னுளன், அந்நவ மவனதா

யிருக்குக வென்றே மௌனமா வேட்டேன். [திர்;

சொலானியோ.—கேட்டதை அந்தோனியோ விட்டகிளத்
ஆயினும் பரபரப் பின்றியதைக் கூறுவீர்,
ஏனெனி லவர்க்கும் இன்னல் விளைக்கும்.

சாலரினோ.—அவரினும் சிறந்த அன்புள வாட்டவன்
இப்புவியிலே. அவரும் பசானியோவும்
ஒருவரை யொருவர் பிரிந்ததைப் பார்த்தேன்.
உரைத்தனர் பசானியோ ஒல்லை மீளுவதா.
அவ்வணம் புரியலீர், ஆங்கன பணியை
எற்கா அரைகுறை யாக வியற்றலீர்.
அத்தொழில் முடிவரை யவ்விடத் திருப்பீர்.
உமது காத லின்னிறை யுளத்தில்
என்வாயின் யூதன் ஏற்றுள வாவண—
நினைவுமக் கெய்திட வகைதக் குதிரால்.
இருந்திர் களிப்போடு. இயைந்திடு மனமும்
நேசப் படுத்தல் நேச முணர்த்திடல்
இவைகளி னவசிய மென்னும் செலுத்துதிர்
என்றனர். இவ்வா றியம்புங் காலையுங்
கண்களிற் கலுழி நிறைமுகந் திருப்பித்
தனது கரத்தினைத் தன்பினா நீட்டி
இறும்பூ திலமுக்கு மிதப நெகிழ்ச்சி
அமைபு மன்புடன் பசானியோ கரதலம்
பிடித் தழுத்தினர் அவர் பிரிந்தன ரிவ்வணம்

சொலானியோ. அவருக் காகவே யவனியை வேட்டனர்
எனயா னென்றுவல். வம்மின்யாம் போபவர்க்

கண்டவ ரமுந்துந் துயர்களைந் திடுவான்
இன்ப மெவ்வண மாயினு மிழைப்பேம்.

சாலரினோ.—அவ்விதமேயா மவைமுடன் புரிவாம்.
[எல்லாரும் போதல்.]

ஒன்பதாம் களம்.

இடம்—பெல்மண்டு; போர்ஷியா வீட்டின் ஓர் அறை.

[நெரிசா ஒரு சேவகனோடு வருதல்.]

நெரிசா.—சீக்கிரம், சீக்கிரம் என்றனை வேண்டுவல்,
இன்னே நீக்குதி யெழினியை. ஆரகன்
அரசன் சத்தியஞ் செய்தாய் விட்டது
தெரிந்தெடுத் தற்குச் செல்லுவ னிக்கணம்.

[எக்காளம் ஊத, ஆரகன் பிரபுவும் போர்ஷியாவும் அவர்கள் பரிசனங்களுடன் வருதல்.]

போர்ஷியா.—கனமுடைப் பிரபுவே! காணுதி பெட்டிகள்.
என்றன் படமுள தெதனைத் தெரிந்
தெடுக்கின் அதன்கண் மன்றல்வினை முடிவுறும்,
தவறிடி லரசே! மென்மொழி கூறுதல்
தவிர்த்துடன் இத்தலந் தணப்பது தகுதியாம்;

ஆரகன்.—காரிய மூன்று கைக்கொள லாணையால்
எனக்கு விதித்தன. முதலில் யாரொருவர்க்கும்
பெட்டி யெதனைத் தெரிந்தே னென்றதைப் பிறருக் கோதுதல்
ஒழிவதாம். உத்தமப் பெண்ணையான் தவறின்
என துயிர் காலமெல்லாம்
கடிசெய வனிதையைக் கருதா தொழிதல்,
அடுத்தது. கடையா யான்தெரிந் தெடுக்கும்
அதிட்ட மிலேனா யாயிடி லக்கணம்
உன்னை விட்டுநா னோடுவ தேயாம்.

போர்ஷியா.—தகுதியில் தாழ்மையன் எனக்காத் துணிபவர்
எவருமிவ் விதிகளுக் கிசைகின் றனரே.

ஆரகன்.—அப்படிச் செய்து மாயத்தமா யுள்ளேன்.
எனதனை விருப்பினுக் கதிட்டம் துணைசெய்க.
பொன்னும் வெள்ளியும் பொலிவில்லாக் கருமீயமும்.
"எனைத்தெரிந் தெடுப்போ னுள்ளன வெல்லையும்
சந்தேகத் திற்கு முன்னிட வேண்டும்." எப
அல்லதான் அணிய வாரும் பிக்கு முன்
அந்த மிருந்தது நோற்றுதல் வேண்டுமால்,
அழகிய பொன்னே சாற்றுவ தென்னே?
ஆ! நான் எதனைத் தழுவ நோக்குவன்.
"எனைத்தெரிந் தெடுப்போன் பல்லோர் நச்சுவ
தடைவான்." பல்லோர் நச்சுவது. அப்பலர்
எனுமொழி இகழ்ந்து தேய்ந்த சாலையில்
வெளிச்சுவ ரதனில் வெயில்மழை தாக்கக்
குடியமை கட்டும் குருவியைப் புரைய
அகத்துள திறனும் அறியா பயிரா
மூடமக்களை மொழிகுவது. அன்றியும்
விரும்பி வின்புறவெளிப்படச் செய்திடும்
மதியில் மாக்களையும் தெரிந்திடுமன்றே.
சாமானிய ருடன் சார்தல் புரியவும்
அநாகரிக மக்களு ளமையவும்
ஆர்த்தி யில்லேன். ஆதலிற் பல்லோர்
நச்சுவது நாடுதல் நீக்குவேன்.
ஆயின் வெள்ளிக் கருவூலப் பெட்டியாம்
உன்னை நாடித் தேர்க்குவன். இன்னும்
ஒருமுறை யுன்றன் வாசக முரையாய்.
"எனைத்தெரிந் தெடுப்போன் தகுதிக் கிசைந்ததை

அடைவான்." நன்று யறைக்குள நாலிது.
எனெனி லதிட்டந் தனையே மாற்றித்
தகுதி யெனிலச் சினைதரியா தெவன்றன்
முதன்மைக் குரியனு முக்காறத் திரிவனல்.
கனக்குந் தகுதியில் சால்பினை யெவனும்
பூணுதொழிக. புன்னெறி லதனல்
பட்டம் பதவி அதிகாரம் பெறல்
பொருந்தாது. ஏதமில் கவுரவம் பூண்போர்
பாத்திர வளவினுற் பெறுவது பான்மையே.
அவ்வித மாமேற் றலைப்பாகை யின்றி
இக்காற் றேற்றுந ரெந்தனை பெயரோ
சிரந்தனை மூடித் திரிவது தகுதியாம்,
பணிவாங் குநர்பலர் பணிசெயற் பாலரே.
அன்றி யுண்மையாக் கவுரவ ராகும்
மணியி னின்றெவ் வளவோ விழிய
நாக ரிகமில் நாட்டா ரான
பதரெத் தனைபெயர் தூற்றிடற் பாலராம்.
பதரே யாகவும் பன்னாட் சென்றதால்
அழிந்தவ ராகவு மமைவுறு மனத்த
பிடி யிழிதகை யோருட் பெருந்தகை
யாகு மெத்தனை பெயரைப் பொறுக்கலாம்.
சரிதான். யானுந் தெரிந்தெடுத் திடுவேன்.
"எனைத்தெரிந் தெடுப்போன் தகுதிக் கிசைந்ததை
அடைவான்," தகுதி யெனக்குள தாக
யானு மதிப்பல். அதற்குத் திறவுகோல்
தரிர். ஒல்லையென் னிட்டங் காண்பேன்.

(வெள்ளிப் பெட்டியைத் திறக்கின்றான்.)

போர்ஷியா.—அங்குநீர் காண்பதற் கத்தனை காலமே.

அரகன்.—இங்கே தானது? மருண்டு நோக்கிறுமைச்
சித்திர மெனக்கொரு கருள்தந் திடுமால்.
அதை நான் வாசித் திடுவேன், அந்தோ! நீ
போர்ஷியாவுக் கெத்தனை பொருத்தமு மிலாய்,
நானுறு நம்பிக்கை, எனது தகுதி
இவைகட் கிணக்க மெவ்வளவும் இலாய். [தை
"எனைத்தெரிந் தெடுப்போன் தகுதிக் கிசைந்த
அடைவான்." மூடமகன் றலையே யல்லால்
எனக்குத் தகுதி வேறில்லையே போலும்.
அதுவோ தன் பேறு? அதனினு மிக்க
தகுதி யெற்குச் சாற்றின் மற்றில்லையோ? [லாம்

போர்ஷியா.—தெரிப்புறு தவறுகை [illegible] தீர்க்க
ஒன்றாகியாவ [illegible] தொழில்களாய் முர
இயற்கை யுடையன வாகும். [ணிப

அரகன்— இங்குளதென்?

(வாசிக்கின்றான்.)

எழுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

அழல்தனிலேழு முறையுடபட்டுத் தாழ்விலா நில
[illegible],
வழுவறுமெக்கா [illegible] மதியா லெழுதாம் [illegible]
[illegible];
நிழல்தனை [illegible] [illegible]
[illegible].

அழகுடைமாக்க ளறிவிலா ரிலக்க மென்றவரு
ளவரென மதித்தேன் (1)
இவரை யொப்பதுவே யிவ்வுயிரில்லா முழுமகன்
றலையுண்டப் படமும்
அவரிதழ்த் தோகைக் காதலிவேறு செல்லின்றும் மரு
வுனைவிதே
அவனியி லெக்காலத்துமுன் னியோ யாமருவன்
மடத்தலை யேனும்
இவனைக் கண்டிலாய், வருதி, யேர்க்குக் காரியமினி
யபயனிலையால். (2)
இவ்வழி நிற்பவை யிருதிகிருந்த
அழிவிலி யாகத் தோற்றவர்... மடமனம்
ஏடு வருங்கா றுமிருந்... [மேடன்
சென்னி பொன் அளைந்திருந்தேன், இரண்
டோ தருமின்றேன். போகின்றேன்; இனியனே!
கலந்தனைப் பொறையாய்த் தாம்வருவாம்
எனது சாதக மெல்லாம் நான் நீக்கப்படுவேன்.
(ஆகன் அரசனும் அவன் பரிசனமும் போதல்.)

போர்ஷியா.—விளக்கின் வாது விட்டில் கட்டது.
ஆ! இத் தெரிந்த வருமதி யீனர்கள்!
அவர்தெரிந் திடுக்கா லவர்க்குள புத்தியால்
உள்ள ஞானத் தினையு மொழிப்பரே.

நெரிசா.—ஆக்குனைல் பெண்கொள்ளக் கழுக்குந் தனியிறல்
ஆமென வரைத்திடு முதுரை சாதகமே.

போர்ஷியா.—வருதி நெரிசா! திரைதனை மறியாய்.

(ஒரு வேலைக்காரன் வருதல்.)

வேலைக்காரன்.—தலைமகளெங்கே!

போர்ஷியா.— தலை 'இதோ, வேண்டுவதென்'.

வேலைக்காரன்.—தாயே! தன்னெசமானன் வருவதை
முன்னறி விப்பான் முடிகிய வெனிஷிய
இளைஞ னொருவனின் னில்வா யிறங்கினான்.
முகமனும் வந்தனமொழியு மல்லது
மிக்க விலையுள வெகுமதி யாகிய
உணர்வ மாமுப சாரமுங் கொணர்ந்தான்.
இத்தகைக் காதற் றூதனை யிதுவரை
நான் கண்டிலன். இவன் தனது நாயகன்முன்
வருவது குறிப்ப வசந்த காலத்
தெந்த நாளு மிவ்வா றினிமையாய்
வெயில் முதுவேனிற் கால்வரவினை
இதுவரை காட்டின தேயிலை யாமால். [அன்

போர்ஷியா.—போதும், தயைசெய். இப்பொழுதேயவ
னுற்றாகதா னென்னைச் சொல்வாய் நீயென்
றஞ்சுகின் றேனேன். அவனைப் புகழ்வதில்
அத்துணை யதிசய வுத்தியுடையாய்.
வருதி வருதி நெரிசா! இத்தனை
உபசாரத்தோடு வருமதன் றூதனை
விரைவிற் காண்பான் வேட்டனன் யானே.

நெரிசா.—மதனே! உனக்கது சம்மதமாயின்
வருமவன் பசானியோ வன்ன வாருகவே.

(எல்லாரும் போதல்.)

மூன்றாம் அங்கம்.

முதற்களம்.

இடம்.—வெனிஸ் நகரம் ஒரு வீதி.

[சொலானியோ சாலரினோ வருதல்.]

சொலானியோ.—நல்லது. பரிவர்த்தனை சாலையில் விசேஷமென்ன?

சாலரினோ.—என்ன? குட்வின்ஸ் என்று பெயருள்ளதாக நான் எண்ணுகிற ஒடுக்கமான கடலில் மிக்க விபத்துள்ள சரக்குகள் ஏற்றப்பட்டிருந்த அந்தோனியோவின் கப்பலொன்று உடைந்துபோன வதந்தி இன்னுமிருந்து கொண்டேயிருக்கிறது. அதுவிருந்த இடமாகவும் மிக்க அபாயமான ஒரு மணல் சமபூமி. உலகவதந்தி என்னும் மாது உண்மைமொழியுடையவளானால் அவ்விடத்தில் அநேகம் உயர்ந்த கப்பல்களின் சரக்குகள் புதையுண்டிருக்கும்.

சொலானியோ.—வழக்கம்போல் இஞ்சியின்று, அல்லது தன்னுடைய மூன்றாவது கணவன் இறந்ததனால் அழுவதாகத் தன் அயலாரை நம்பச்செய்த, பெண் பிள்ளையைப் போன்று, வதந்தி என்னும் பெண்ணானவள் இந்த விஷயத்தில் பொய்யவளாகக் கடவளென்பது என் விருப்பம். மிகைபடக்கூறுமனும் வார்த்தையாகிய இராச பாட்டையில் குறுக்கே செல்லாமனும் பேசுங்கால் உண்மையாக நன்மைமிக்க அந்தோனியோ, யோக்கியரான அந்தோனியோ, அவர்பெயருடன் சேர்த்துச் சொல்லத்தக்க நல்லபட்டம் வேறு இருக்கவேண்டுமென்று நான் விரும்புகின்றேன்.

சாலரினோ.—சரி தான். சொல்வதைப் பூர்த்திசெய்யும்.

சொலானியோ.—ஆ! நீர் என்ன சொல்லுகின்றீர்? ஏன்! அவர் ஒரு கப்பலை இழந்தார். இது தான் முடிவு.

சாலரினோ.—இதுவே அவர் நஷ்டங்களின் முடிவாயிருக்க வென்று நான் ஆவலுடையேன்.

சொலானியோ.—என் பிரார்த்தனைக்கு இடையூறாகப் பிசாசு செய்யாவண்ணம் நான் சீக்கிரத்தில் 'ஓம்' எனச் சொல்வேனாக. ஏனெனில் அவன் இதோ யூதன் உருவத்தோடு வருகின்றான்.

[ஷைலாக் வருதல்.]

என்ன ஷைலாக்கே! வர்த்தகர்களுக்குள்ளே என்ன சமாசாரம்?

ஷைலாக்.—என் மகள் பறந்துபோனதைப் பற்றி நீர் அறிவீர். அவ்வளவு நன்றாக வேறொரு

வருமறியார். உம்மைப்போல் வேறொருவரும் அவ்வளவு நன்றாக அறியார்.

சாலரினோ.—அது நிசமே. அவள் பறந்துபோன சிறகுகளைச் செய்து தந்த தையற்காரன் யாரென்று எனக்கும் தெரியும்.

சொலானியோ.—அந்தப் பறவை சிறகு முளைத்துப் பக்குவமடைந்ததென்று ஷைலாக் தாமே அறிவார். அப்பறவைகளெல்லாம் சிறகு முளைத்தவுடன் தாயை விட்டகறல் சுபாவமே.

ஷைலாக்.—அப்படிச் செய்ததற்காக அவள் நரகம் புகுவாளாக.

சாலரினோ.—பிசாசு அவளுக்கு நியாயாதிபதியானால் அது நிசமாம்.

ஷைலாக்.—என் சொந்த ஊனும் உதிரமும் எனக்கு விரோதமாய்க் கலகம் செய்வதா?

சொலானியோ.—அழுகிப்போன கிழத்தசையே! உனக்கு வெட்கமுண்டாக. இந்த வயதில் கலகம் செய்கின்றையா?

ஷைலாக்.—என் மகள் என் ஊனும் உதிரமும் என்று சொல்லுகிறேன்.

சாலரினோ.—அஞ்சனத்திற்கும் யானைத் தந்தத்திற்குமுள்ள பேதத்திலும் மிக்க பேதம் உமது சதைக்கும் அவள் தசைக்குமுள்ளது. சிவப்பு முந்திரிகையின் இரசத்திற்கும் ரெனிஸ் வெள்ளை முந்திரிகையின் இரசத்திற்கு முள்

ளதிலும் மிக்க பேதம் உங்கள் இரத்தங்களிலுள்ளது. அந்தோனியோ கடலில் ஏதாவது நஷ்டமடைந்தாரா, இல்லையா என்று கேள்விப்பட்டீரா? சொல்லும்.

ஷைலாக்.—அதிலெனக்கு வேறொரு நஷ்டமான வியாபாரம். பரிவர்த்தன சாலையில் தன் தலையைக் காட்ட மாட்டாதவன். வாங்கின கடனிறுக்க திருவாகமில்லாதவன். வீண் செலவாளி. பரிவர்த்தன சாலையில் பொருளுடையவன்போல் தோற்றி வரும் பிச்சைக்காரன். அவன் முறியைப் பார்த்துக்கொள்ளக்கடவன். அநியாய வட்டிக்குக் கொடுப்பவனென்று என்னை யெப்பொழுதும் சொல்லுகிறவன். தன் உடன்படிக்கையைப் பார்ப்பானாக. கிறிஸ்தவ தருமத்திற்காகப் பணம் கொடுப்பவன். அவன் தன் ஆவணச்சீட்டை நோக்குவானாக.

சாலரினோ.—ஏன்? அவர் தவறினால் அவர் மாமிசத்தைப் பெறமாட்டீர் என்பது எனக்குத் திண்ணமே. அது எதற்கு உபயோகம்?

ஷைலாக்.—மீன் பிடிக்க. அதைத் தூண்டிற் கிரையாக்க. அது வேறொன்றுக்கும் உணவாய் உதவாவிட்டாலும் என்பகைசாதிக்க உதவும். அவன் என்னை அவமதித்து ஐந்து லட்சம் 'டக்கற்று' லாபமடையவொட்டாமல் தடுத்திருக்கிறான். என் நஷ்டத்தைக்

கண்டு சிரித்தான். என் இலாபத்தைக்கண்டு பரிகசித்தான். என் குலத்தாரை நிந்தித்தான். என் இலாபங்களுக்கு இடையூறு செய்தான். என் நண்பர்கள் அன்பிற் குறையச்செய்தான். என் விரோதிகளின் விரோதத்தை விருத்தி செய்தான். இவையெல்லாம் ஏன் செய்தான்? நான் யூதனும். யூதனுக்குக் கண்களில்லையோ? கைகள் கால்கள் அகக்கருவிகள் புற உறுப்புக்கள் பஞ்சேந்திரியங்கள் மனோ விகாரங்கள் மனச்சலனங்கள் யூதனுக்கில்லையோ? கிறிஸ்தவன் புசிக்கும் போசனம் அவனும் புசிப்பதில்லையோ? ஒரே தன்மையான ஆயுதங்களால் காயம் அடைவதில்லையோ? ஒரே வியாதிகட்கு உள்ளாவதில்லையோ? ஒரே தன்மையான ஔஷதங்களால் வியாதி நீங்குவதில்லையோ? ஒரே தன்மையான சீதோஷ்ணங்களால் குளிர்ச்சியும் வெப்பமும் அடைவதில்லையோ? நீங்கள் எங்களைக் கிள்ளினால் எங்களுக்கு உதிரம் பாய்வதில்லையோ? நீங்கள் எங்களைக் கூச்சங் காட்டினால் சிரியோமோ? நீங்கள் எங்களுக்கு நஞ்சைக்கொடுத்தால் இறவோமோ? நீங்கள் எங்களுக்குத் தீங்கு செய்தால் நாங்கள் பழிவாங்கோமோ? மற்றவைகளில் நாங்கள் உங்களை ஒத்திருந்தால் அதிலும் உங்களை ஒத்திருப்போ

ம். ஒரு யூதன் ஒரு கிறிஸ்தவனுக்குப்பிழை செய்தால் அவன் தாழ்மையை எவ்விதம் காட்டுகின்றான்? பகைபாராட்டியே. ஒரு கிறிஸ்தவன் ஒரு யூதனுக்குக் குறையிழைப்பின், கிறிஸ்தவனது சித்தாந்தத்தின்படி அவன் பொறை யென்ன? வேட்க வென்றோமோ? தீமைக்குத்தீமை புரிதலே. நீங்கள் ஓதுவிக்கும் துன்மார்க்கத்தை நானும் பின்பற்றுவேன். எனக்குப் போதிப்பித்ததை விருத்தி செய்து காட்டாவிட்டால் எனக்குக்கெடுதி சம்பவிக்கக் கடவதாக.

[ஒரு வேலைக்காரன் வருதல்.]

வேலைக்காரன்.—துரைகளே! என் எஜமானாகிய அந்தோனியோ தம்முடைய வீட்டிலிருக்கிறார். உங்களிருவருடனும் பேசப் பிரியப்படுகின்றார்.

சாலரிநோ.—அவரைப்பார்க்கவேயெல்லாந்தேடினோம்.

[தூபல் வருதல்.]

சொலானியோ.—அந்தக் குலத்தைச்சேர்ந்தோன் இன்னொருவன் இதோ வருகின்றான். பிசாசே யூதன் ஆனாலொழிய இவர்களுடன் சேர்ந்து எண்ணத்தகுதியான மூன்றாமவனில்லை.

[சொலானியோ, சாலரிநோ, வேலைக்காரன் போதல்.]

ஷைலாக்.—என்ன? தூபலே! ஜினோவாவிலென்ன விசேஷம்? என் மகளைக் கண்டு பிடித்தீரா?

தூபல்.—அவளைப்பற்றிக் கேள்விப்பட்ட விடங்க

ருக்கெல்லாம் அடிக்கடி போனேன். ஆனால் அவனைக் கண்டுபிடிக்கக் கூடவில்லை.

ஷைலாக்.—என்ன! ஐயோ! ஐயோ! ஐயோ! ஐயோ! பிராங்கு போர்ட்டில் இரண்டாயிரம் 'டக்கற்று'க்கொடுத்து நான் வாங்கின வைரத்தினம் போய்விட்டது. இது வரையில் ஒரு சாபமும் நமது சாதியாருக்குச் சம்பவித்ததில்லை. இது வரையில் நான் அதை உணர்ந்ததில்லை. அதில் இரண்டாயிரம் 'டக்கற்றுகள்' தொலைந்துபோய் விட்டன. அதைத் தவிர மிக்க விலையுள்ள ஆபரணங்களும் தொலைந்தன. என் மகள் என் கால் மாட்டில் இறந்து கிடக்க அவள் காதில் நகைகளிருந்தால் அது எனக்குப் பிரியமாயிருக்கும். என் காலடியில் அவள் பாடையில் கிடக்க அவள் பிரேதப்பெட்டியில் என் 'டக்கற்று'களிருக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். அவைகளைப்பற்றி ஒரு சமாசாரமுமில்லையா? நல்லது! அவைகளைத் தேடுவதில் எவ்வளவு செலவாயிற்றோ அறியேன். ஆ! நஷ்டத்திற்குமேல் நஷ்டமே. திருடன் கொண்டுபோனது அவ்வளவு. திருடனைக் கண்டுபிடிக்க அவ்வளவு. திருப்தியில்லை. பழிக்குப் பழியுமில்லை. என் தலைக்கு வந்ததைத்தவிர வேறு துரதிர்ஷ்டமுமில்லை. நான் விடுகிறதைத்தவிர வேறு பெருமூச்சு

மில்லை. நான் சிந்துகிறதைத்தவிர வேறு கண்ணீருமில்லை.

தியூபல்.—ஆம் மற்றையோருக்கும் துரதிருஷ்டமுண்டு, நான் ஜினோவாவில் கேள்விப் பட்டபடி அந்தோனியோ—

ஷைலாக்.—என்ன? என்ன? என்ன? துரதிருஷ்டமா? துரதிருஷ்டமா?

தியூபல்.—டிரிப்போலியிலிருந்து வந்த ஒரு கப்பலுடைந்துபோய்விட்டது.

ஷைலாக்.—சுவாமிக்கு வந்தனம். சுவாமிக்கு வந்தனம்! நிசந்தானா? நிசந்தானா?

தியூபல்.—உடைந்த கப்பலிலிருந்து தப்பிவந்தசில கப்பற்காரருடன் பேசினேன்.

ஷைலாக்.—நல்ல தியூபலே! உனக்கு வந்தனம். நல்ல சங்கதி. நல்ல சமாசாரம். ஆ! ஆ! எங்கே ஜினோவாவிலா?

தியூபல்.—ஒரிராத்திரியில் ஜினோவாவில் எண்பது 'டக்கற்று' உமது மகள் செலவிட்டதாகக் கேட்டேன்.

ஷைலாக்.—ஒரு கத்தியால் என்னைக் குத்துகின்றீர். என் பொன்னை இனி யொருகாலும் நான் காணமாட்டேன். ஒரே முகூர்த்தத்தில் எண்பது 'டக்கற்று,' எண்பது 'டக்கற்று'!!

தியூபல்.— அந்தோனியோவுக்குக் கடன்கொடுத்தோர் அநேகர் என்னோடு வெனிஸ் நகரத்தி

ற்குவந்தார்கள். அவர்கள் அவன்கடன்தீர்க்க வகையற்றவனாக வேண்டியதைத்தவிர அவனுக்கு வேறே மார்க்கமில்லையென்று சத்தியஞ் செய்தார்கள்.

ஷைலாக்.—அதைப்பற்றியெனக்குமிருக்க ஆனந்தம். அவனைப் பிடிப்பேன். அவனைச் சித்திரவதை செய்வேன். அதைப்பற்றிச் சந்தோஷம்.

தியூபல்.—ஒரு குரங்கைக்கொடுத்து உமது மகளிடத்திலிருந்து தான்பெற்றவொருமோதிரத்தை அவர்களிலொருவன் எனக்குக்காட்டினான்.

ஷைலாக்.—அவள் நாசமாகப்போகட்டும். தியூபலே என்னைச் சித்திரவதை செய்கின்றீர். அது என் வைடூரியம்: நான் பிரமசாரியாயிருந்த பொழுது லீயா எனக்குத் தந்தது. ஒரு காட்டிலுள்ள குரங்குகளையெல்லாம் கொடுத்தாலும் அதை நான் கொடுக்கமாட்டேன்.

தியூபல்.—அந்தோனியோ நிச்சயமாகக்கெட்டுப்போனான்.

ஷைலாக்.—அது நிசமே. அது மிகவும் நிசமே. தியூபலே! போய் எனக்காக ஒருத்தியோகஸ்தனைத் தீர்மானியும். இரண்டு வாரத்திற்கு முன்னேயே பேசித் தீர்மானியும். அவன் தவறினால் அவன் இரத்தாசயத்தை நான் பெறுவேன். ஏனெனில் அவன் வெனிஸ் நகரத்தைவிட்டு ஒழிந்தால் என்னால் கூடிய

அளவு இலாபஞ் சம்பாதிப்பேன். தியூபலே! போம். போம். நமது ஆலயத்தில் என்னைச் சந்தியும். நல்ல தியூபலே! போம். தியூபலே! நமது கோவிலில் (சந்தியும்.)

(எல்லாரும் போதல்.)

இரண்டாம் களம்.

இடம்:—பெல்மண்டு, போர்ஷியா வீட்டின் ஓர் அறை.

[பசானியோ, போர்ஷியா, கிராஷியானோ, நெரிசா இவர்களும் பரிவாரங்களும் வருதல். பெட்டிகள் வெளியில் வைக்கப்பட்டிருக்கின்றன.] இன்ரேன்.

போர்ஷியா.—தாமதஞ் செய்கையைத் தயைப்பொறுத்து
தேர்ந்திடு முனாதிரண்டொரு தினந்தாமிரும்.
சரியல தாய்த்திடின் அந்தரவாரம்
அகறு யாதலின் நீர்த்திறந் தாமதியும்.
நின்னை இழப்பென நிகழ்த்துகின்றது.
அன்போ வன்னின் அன்றென வெறுப்போ.
இக்கதைப் புத்தி வியப்புறு கின்றேன்
தமதிர் நீவே. ஐயோ! கன்னிகைக்
குன்றிய தெரிய வுரைப்பது மாண்பல.
ஆயினு மெய்ம்மை நீர் நன்கு யறிதர
போதக் குறைக்கெத் தக முடிகுமன்
இரண்டொரு திங்க ளிவ்வயி னுறைகுவன்
நிறுத்துவல். உமக்கு நிதானமாம் பேழையை
ஓர்ந்திட வோதுவேன். ஆயி னதனுல்
ஆகேன் சத்தியம் பிழைத்தவள். அவ்விதம்
எக்கா லம்பா னிருப்ப தில்லையால்.
ஆகவே என்னை நீர் அடைதற் றவறினும்
தவறுதிர். அப்படி யாதலிற் சத்தியங்
கொன்றிடு தவென் குற்றமாம் பாவம் யான்
புரிந்திட விரும்பப் படுவோ ளாக்குதிர்.

நீரதிக் கிவ்விரு மதுவிழிக் கிரக்கின.
என்னை மயக்கி யென்னைப் பிரித் திட்டவால்.
என்னிலோர் பாதியுமதே. ஏனையொன்,
இயம்பற் பாலதா மேனைய பாதியும்
உமதே. ஏனெனி லுமதே யாகலின்
எல்லா முமதே, இந்தி நாட்கள்
உடையோர்க் குரிமை யுதவா தொழிக்கும்.
ஆதலி னுமதே யாயினு முமதலன்.
அங்கனந் தவறில் அரிதுட் புகுவது
அதிட்டமே, யானல. அளவிறந் தின்னே
உரைத்தேன் பேழை புணர்தல் தவிர்த் துயான்
காலங் கரைத்து செய்வது காலம்
நீண்டிடக் கட்டிப் பிடித்ததற் பொருட்டே.

பசானியோ.—தெரிவே னுக. ஏனெனிற் சித்திர
வதைக்களத் துள்ளன்போல் வதிகின்றேன்.

போர்ஷியா.—சித்திர வதையைப் பெயுமிடக் கன்னீர்,
ஆயின் உம்மன் புடனாயது துரோகம்
அதுவெது வென மெய் யுரைதிர் பசானியோ!

பசானியோ.—ஏதுமில் காதல் பெற்றெனு மோ வெனும்
அச்சம் விளக்கு மையமே யன்றித்
துரோகம் வேறிலை. துயினைத் திறக்கும்
எரிய மூலைக்கு மிணக்க முண்டெனில்
அதற்கு மிணக்க முண்டாயிடு மதினே.

போர்ஷியா.—ஆம். சித்திரவதைத் தான படுகின்றார்
படுவே தனையாற் பகர்ந்திடு மாபோல்
எஃதோ விபம்பினி ரெனயா னஞ்சுவல்.

பசானியோ.—எற்குயி ரளிப்பே னெனக்கு ளியம்புதி,
உண்மை மொழியா துனக்கோ துவல்யான்.
போர்ஷியா.—ஆயி னுண்மை யறைந்நீர் வாழ்ந்திடுவீர்.
பசானியோ.—காதலித் தேனென மெய்யிற் கழறலே
உண்மை யறிக்கை முழுவது மாகும்.
எனைநோய் செய்த நீ யாணய் வுற்றகாம்
முறைமை மொழிவதில் இன்பமே தந்தயே.
ஆயினு மென்ற னதிட்டம், பேழைகள்
தம்மிடை யென்னைச் சார்ந்திட வுய்த்தி.
போர்ஷியா.—ஆயிற் போதிர். அவைகளி லொன்றினுள்
பூட்டப்பட்டுளேன். எனைநீர் பொய்யிலா
அன்பால் வேட்டுளி ராமெனிற் காண்பீர்.
நெரிசா! எனையோர் நின்மி னிரகல;
அவர்தெரிந் திடுங்கா லொத்திட வாத்தியம்.
அன்னவர் பெற்றில ராமெனிற் கீதம்
பாடிப் பைப்பைய விறக்கு மன்னப்புட்
போலவே யிவரும் பொன்றிடு வாரால்.
உவமைஇனும்மிக வுசிதமாம் வண்ணம்
என்கண் ணிவருக் கோடையு முதக
மரணப் படுக்கையு மாகவாய்த் திடுமால்.
அவர்பெற் றிடிலோ வாச்சியம்யாவதாம்?
புதிதா மகுடம் புனையரை யன்றவர்ச்
சத்திய பத்தி தாறுடைச் சனங்கள்
முறைமுறை வணங்க முழங்குபல்லியமும்
கடிநாட் காலையிற் கனவுறீஇத் துயிலும்
மணமகன் செவியுற வன்றுயி லுறுவைக்.

கரைமுக்கு மாலைய மணியி னோசையுமாம்.
கதழுறும் ரோஜன் கடலரக்க னுக்கிடு
கன்னிப் பலியை யுயிர்காத் திடுங்கால்
இளமைசேர் அல்சிடீஸ் சென்றதற் கிறையும்
குறைவில் கன்னியக் கோலத் தடனும்
ஆயினு மவனினுங் கழிகனி யன்பு
சேர்ந்துமப் பொழுதிவர் செல்லுகின் றனரால்,
பழியிற் பண்டமாய் நிற்கின் றேன்யான்.
அயலுளா ஏனைவரும் அழுதலிற் கண்சிவப்
பமைதரு முகத்தின ராகி யான்றொழில்
முடிவு காணுற முன்றாறு ரோஜன்
பூவைய ராவரால். போதிர் எர்க்கியுலீஸ்.
வாழ்ந்திடு. நீருயிர் யானும் வாழ்ந்துளேன்.
சமர்புரி அம்பிளைத் தவமனக் கலக்கம்
அமைதரு பவளா யமர்நோக்குவனியான்.

[பசானியோ தனக்குள்ளே பேழைகளைக்குறித்து
ஆலோசிக்குங்கால் வாத்தியம் முழங்கப்
பின்வரும் பாட்டுப் பாடுதல்.]

குறள் வெண்செந்துறை.

அன்புறுமி யருமுட மிருதயமோ சிரமோ
அவ்விடமெற் கறைந்திடுவாய் பிறந்தநெவண்மை
[கும்
இன்பொடுமவ் விதமியம்பா யெதிர்விடை யெற்
[களிப்பாய்
இறவிழிக ளாக்தலத்திற் றோன்றிடு மாமே (1)
பார்வையினில் வளருவதாம் பார்வைதரு மன்பு

பகுக்குமிளங் குழவியுடைப் படுக்கையின்மாய்ந் [திடுமால்
ஆர்வமொடெல்லாரு முந் சாவுமணி யறைவோம்
அதனைத்தின் கிணிமெனவா ரம்பித்திடுவேன் (2)

(எல்லாரும் கிண்கிணி கிண்கிணி என)

பசானியோ.—இவ்வித மாகவே வெளித்தோற் றம்மெ [லாம்
இழிதகைத் தாருக. என்றுமிவ் வுலகம்
பகட்டினால் வஞ்சிக்கப் படுவதே.
சாற்றுங்கால் வழக்குச் சட்டங்களில்
மோசமுங் கெடுதியு முன்னிறை வழக்குகள்
இனிய மொழிகளா லிரசு முடையவாய்த்
தோஷத் தோற்றம் மறையா தவையெவை?
சமய சாத்திரத் தனிலுக்கு மறலாய்
குற்ற மொரி இதற் குணமுள தேசிகன்
மற்புண்டாக் தாக வேத மெடுத்துரைத்
தனிபெற வமைத்திடா வாசு மற்றுளதோ?
சுருணத் தோற்றந் திறிது வெளிப்புறத்
தாக்கிடாத் தனித்திக் குணமொன் றின்றே.
எர்க்குலீஸ் முகக்கடுப்புடைய மார்வீரர்களின்
மோவா யதனை மொய்ம்புறப் புரியுந்
தாடி களைத்தாங் காங்கின ராயினும்
மனத்தோபான மாஊம் பொய்யாம்
இதயத்தினரா யிரலையுள்ளோ
பார்க்கிற் பால்போல் வெண்மை யுடையரா
வதிமனக்கோழைய ரெத்தனை பெயருளர்?

இனர்தமக் கேனைய ரஞ்சிட வீரக்
களைகருந் தாடி யாமோ மிப்பரால்.
அழகைநோக்குதி. அஃது நிறுத்தற்
கொளப்படும் பொருள்களா லமைந் துமிர்த்திடும்.
அந்நனை நிறைப்பொரு ளார்ந்த தாயினும்
அப்பொருள் தனை மிக அணிந்தவர் கனம்பெறு
கிலேசு படச்செய் திடுதலா லவ்வழியில்
செகத்தி லதிசயந் தெழுமியல் பிற்றும்.
தன்னை யின்று காலம் சபாதிமி
திருக்கைத் தாறு மின்னொரு தலைக்குச்
சிதன மான தா அழுக்கடி. தெரிவதாய்க்
கற்பிதமாகச் செயப்பெறு கவினின்
தலைமேற் காற்றி னுல்லாச மாக
அலையும் வரிபொற் கூந்தலு மன்னதே
யாகும், ஆதலினால் வெளித்தோற்றம்
மிக்கவிடருளவைக் கரைத்தாங்
கொமாற்றுந்துறையே, இந்திய வனிதைக்
காக்குங் கவின் சேர் குந்தள மேயாம்.
சுருங்கச் சொல்லின் கூறிய வாளரை
வலையிற் சிக்கிடச் செய்ய வஞ்சகக்
காலந்தரித்திடுங் கபடமார் மொழியே.
ஆதலின் மைடஸ் அரசனுக்குச்
சிரமமாதல் செல்வாவுணவாம்
பிறர்க்குடைப்பொன்னே! பெற்றேனினி விரும்.
வெளிறி வரர்களின் வேலைசெய் யானே!
அற்பமு முன்பா லடைத்திடே னினை.

ஏது மீவதாய் வாக்களித் திடாமல்
அச்சுறுத் துவதா மழகிலா வங்கமே !
சொல்வன் மையினும் நின்வெள்ளிய தோற்றமே
என்மனமிளக்குமால். இதையேதான்றெரிந்
தெடுக்கிறேன் எனக்கானந்த முண்டாகுக.

போர்ஷியா.—ஐயமு மாய்ந்திடா வவநம்பிக்கையும்
பனிப்புறு பயமும் பசந்தப் பார்வைசேர்
காதற் பொறாமையுங் கடிக்கும்விகாரமும்
எல்லாம்வளியென வெங்கனம்பறக்கும் !
ஆ! காதலே ! நீ அளவா அமைதியால்,
நின்றுபரவசந் தணித்தி. நின்னுடைய
ஆனந்தத்தை யளவிட் டடக்காய்.
இப்பே ரின்பஞ் சற்றே குறைத்தியால்.
உன்னருள் கண்டியான் மெய்ம்மறந் துள்ளேன்
தெவிட்ட லுறுவனாந் திருக்கச் செய்திடு.

பசானியோ.—இவ்வயின் யான் கண்ணுறுவதென்கொ
லாம்?

(ஈயப்பேழையைத் திறந்து)
செவ்விசேர் போர்ஷியா சித்திரப் படமே !
சிறந்தவை யித்துணைச் செவ்வுற வெழுதிய
தெய்விக ரன்யார் ? இவ்விழி யசைபவோ?
இவையெனி லென்றன் விழியூர் தியினில்
ஊர்தலி னசைவாய்த் தோற்றுகின் றனவோ?
இன்னுயிர்ப் பகன்றுப் பிரிவுறு மிதழினை.

இத்துணை யினிதா மின்னுயிர்ப் புத்தடை
அத்துணை யினிய வன்பரைப் பிரித்தல்
அழகிதே, இதோ அவன் அளக பாரத்தில்
ஓவியன் சிலம்பி போற்றொழி லாற்றிச்
சிலந்தி வலையினிற் சிக்கிடு மீயினும்
அதிவிரை வுடனே யாடவ ரிதயம்
கண்ணியிற் சிக்குறு தங்க வலைகள்
நெய்துள்ளான். ஆ ! ஆ !! அவன் நேத்திரங்கள்
இரண்டையுந் தீட்டிடப் பார்ப்பதெவ் விழியால்!
இயற்றிய தொருகணே இயற்றியோ னிரண்டு
நயனமுங் கவர்ந்தலம் படைத்ததினால்,
அதன்றுணை யெழுதப் படாததாய் விடுமே.
எனினுமிச் சாயலை யானென தளவு
குறைவாக் கூறுபு கொள்ளைத் தேனே
அவ்வள விச்சாயலு மப்பொருட்குக்
குறைந்ததாக் குயிற்றியால். எனதிட் டத்தைச்
சுருக்கியடக்கிய சுருளிதோ வுளதே
(வாசிக்கிறான்.)
சுவடித்தாளிதை.

செப்புவெளித் தோற்றமதாற் றெரிந்தெடுத்திடாயியும்,
அப்படிச்செய் பவர்போ லல் லதிட்டமினைத் தையு
மடைவாய். (1)

அவ்வளவுமுண்மையின லாய்த்தெடுத்தாய் மற்றிதனை,
இவ்வளவா நல்லதிட்ட மேய்ந்ததனாற் றிருத்தியடை.()
புதிதாகப் பிறிதொன்றைப் புந்தியினி நாடாதே,
இதினியு மனிதிருத்தி யடை. உனக்கிதியைக்கதுதான்.

இன்புதவுமதிட்டமென வென்று நீயெனன்னிமனைக்
கன்புதவு முத்தமிட்டாங் கவலைகொண்டாடாயே.()

சிலமுறையே இச்சுருள் திருமாதே.

(முத்தமிடுகிறான்.)

மின்னனாமதிபுடை வினைமுத் தம்மிட
மனைவியாக் கொளவுரிமை வாய்ந்துளேன்.
திறலாட் டம்புரி இருவரி லொருவன்
நோக்குநர் குலப்பும் ஆர்ப்பும் நோக்குப்
பித்திறா னடைந்து தேர்ந்து மயங்கிப்
போற்றுபே ரொலிதனைப் புகழ்வோ இல்லையோ
என்றுயிர்ப் புடனிது நோக்குறுமாபோல்
உன்று அறுதியா ஒப்பமிட் டுவதிப்
பதிமொழை யான்பார்த்து ஐயமே யோவென
ஐயத் தடனுள் ளிருந்து நிற்கிறேன்,
வனப்புறும் மடந்தாய் கற்றுணை மகளே!

போர்ஷியா.—பஸானியோ! பார்த்தின் யானிருக்குமிடம்,
பார்த்தின் நிற்கும் பஸானியோப் பிரபுவே!
எனக்காக வேறா விருப்புமிக்கிலன்
ஆம்பே ராசையி லில்லை தாயினும்
அறுபது மடங்கு அவாவின்னும் பொருட்டே.
அழகி லாயிரம் செல்வத்துபதம்
மடங்கு வேட்பல், அஃதெலாம் மதிப்பில்
சற்குணத்து சவுந்தரத் தினம்பால் கர்களாம்
இவற்றின் மிக்கனா யிருக்கப் பொருட்டே.
என்பொருள் முழுவதூஉ மின்மையே யாம், யான்

சுருக்கிச் சொல்லிற் கல்விகற் பித்திடப்
படாத சிறுமியே. ஆயினு மடமான்
கற்கும் பிராயங் கடந்திலள் களிப்பே;
கற்றிடல் கடினமாம் வணமவள் மந்தமாய்ப்
பிறந்து வளர்ந்தில தீதுபெருங்களிப்பே.
அவட்குக் கலைவளத் தலைவனு மரசுமாம்
உம்மையிற் சார்ந்தமாத் தன்னுயி ரதனை
ஒப்புவித் துவாளிது தனிபெரு களிப்பே.
எனதுமிப் பொருள் நமது நீருமாய்
இப்பொழு தாயிற்றும். இதற்கொரு கணமுன்
இவ்வெழிற் மாளிகைக் கிறைவி யாகவும்
என்பணி செய்வோர்க் கெசமானி யாகவும்
எனக்குநா னேயரசி யாகவு மிருந்தேன்.
இக்கண மனை யிப்பொழு தோவிவ்
இல்லமிச் சேவக ரிந்நா னும்
உம்முடைய தாயினெ மொப்பிலென் றுரையே!
அவைதமை யிக்கணை யாழியோ டளிக்கிறேன்.
இதனை பிரிந்திடக் கூடுமேல் லையில்
அதுதான் காதலினின் முடிவைக் குறி
ஆங்கான் குறைகூற வதற்கு சாயாம்.

பஸானியோ.—பெண்மணி என்னைப் பேச்சிலா தாக்கினை.
என்னரம் பெல்லாம் இரத்தமே யியம்பும்.
பிரஜைகள் பிரியமாய்ப் பேறுறு மரசன்
செப்ப மதாப்பிர சங்கஞ் செய்தபின்
யாவரு மார்த்து வப்புடன் பேசின்றுக்
கலந்த குழப்பமுங் களிப்புமேயன்றி

எதுவும் விசதமாய்த் தோன்றிட விலதாய்
இருக்குமா றெனதகக் கணந்தனில்
மயக்க மேபலான்மற் றொன்றில்லையால்.
இவ்விரல் விட்டின் வாழி யகனுமேல்
ஆக்கையின் னுயிர்தா னகனுமப் பொழுதே.
ஆ! அக்கால மதனிற் பசானியோ
இறந்தன னெனநீ இயம்பாய் துணிவுடன்,

நேரிசா.—என்னைச மானே! என்னைச மானியே!
இதுவரை பயல்கின் றெமதிட்ட பூர்த்தி
வாய்ந்திடப் பார்த்தனம் மங்களம் கூறுதற்
கமயமற் றிதுவால். அறைகுது மங்களம்.

கிரா.—பசானியோ பிரபுவே! பண்புடை யம்மணி!
பெட்புறத் தருகம் யாவுநீர் பெறுக.
சான்றப் பாலதாய் நன்றுவ விதுவுநீர்
இச்சிசீ ரென்ப தெனக்கு நிச்சயமே.
ஒருவருக் கொருவர்கொள் காதலாப் பந்தம்
கனமிகுந் தாங்கள் முற்று வித்திடும்
அக்கா லத்திலே யானு மணந்திட
உத்தரந் தரகர் னுமைவேண்டி நின்றேன்.

பசானியோ.— உமக்குமோர் பெண்ணுள னெனின்
[மூழுப்பிரியமே.

கிராஷியானோ.—எனக்குநீ ரொருபெண் ணீந்தனிர், வந்த
[னம்.
உம்முடை நாட்ட மொப்பவென் னாட்டமும்
துரிதமாய் நோக்கவுங் கூடுமென் னுரையே!
தலைவியை நோக்கினீர் தாதியை நோக்கினேன்.

வேட்டனீ ரும்; வேட்டனன் யானும்.
எனினி னுமைப்போ லெனக்குந் தாமதம்
ஒவ்வா தாகுமால். உம்முடை யதிட்டம்
அவ்வழி யுளபே ழையினமர்ந் ததுவாம்.
தற்கா லத்துச் சார்நிகழ்ச் சிப்படி.
அதிட்டமென் னுடையது மதிலே யமர்ந்ததாம்.
வியர்வை யரும்பிடக் காதல் விளம்பியும்
அண்ணா முலர்ந்திட வாணை யிட்டும்
கடைசியிற் பிரதிக்கினை கடவா ளென்னில்
உமதிட் டத்தா லவளீ ருற்றிடின்
இவ்வனப் புடையா ளெனக்கவள் காதல்
ஈந்திடு முறுதி மொழியெற் கிசைந்துளாள்.

போர்ஷியா.—நேரிசா! இஃது நிசமோ நிகழ்ந்தாய்

நேரிசா.—உமக்கதுபிரியமேல்,உண்மையே அம்மா!

பசானியோ.—உண்மையா யுன்னினிர்; கிராஷியானோ
[உரையும்.

கிராஷியானோ.—ஆமாம் உண்மையேஎன தாண்டகையே!

பசானியோ.—உமது மணத்தினி லெமது வதுவையும்.
அடைந்திடு மிகுகனம்

கிராஷியானோ.— ஆ! இதோவருவதார்?
லாரேன்சோ! அவன் யூதையும்? ஆ! ஆ!
என்றன் வெனிஷிய நண்பன் சோலானியோ?

[லாரேன்சோ ஜெசிக்கா, சோலானியோ வருதல்.]

பசானியோ.—நவீன வுரிமை யிங்குமது நல்வரவு
ஏற்றிட வெற்குச் சுதந்தரந் தருமேல்,
லாரேன்சோ சோலானியோ வந்தனமையா,

இனியளே ! போர்ஷியா! எனதுநாட் டார்களும்
உண்மைத் தோழரு மாமிவர் திறத்தன்
இசைவுட னேற்பேன்; இதுநல் வரவே.

போர்ஷியா.—எற்றன ளவர்வர வியாதும் அவர்தம்
வரவு நமக்கு மங்களவரவே.

லாரென்சோ.—வந்தன முமக்குத் தந்தனம் வள்ளால்
இங்குமைப் பார்க்கயா னெண்ணிட வில்லை.
ஆனுற் சோலானியோ வழிதனிற்கண்டு நானெ
மதுக்கக் கூடாவனா வெனைவிக்குற
வேண்டினன்.

சோலானியோ.— எனது பிரபுவே வேண்டினேன்
அதற்குங் காரண முளதுஅந் தோனியோ
வள்ளலுமக்கு வழங்கினர் வந்தனம்.
(பசானியோவுக்கு ஒரு கடிதம் கொடுக்கின்றார்)

பசானியோ.—அவரது கடிதநான் பிரித்திடு வதன்முன்
எனதுநற் பாங்க ரெவ்வித முள்ளார்
எனத்தயை யுடனே யியம்புதி ரெனக்கே.

சோலானியோ.—என்றன் துரையே! உளத்தனி லன்றிப்
பிணியிலை அவர்க்குப் பிணியிலா தும்மிலை,
அவரது கடித முணர்த்து மவர்நிலை.
(பசானியோ கடிதத்தை படிக்கின்றார்.)

கிராஷியானோ.—நேரிசா! அந்த அந்நியனை உம்புதி.
அவட்குநல் வரவுரை, கைகொடும் சோலானியோ
வெனிஸ் நகரத்தின் விசேட மென்கொலோ?
இராசவர்த்தகராம் நல்லந் தோனியோ
எப்படி யிருக்கிறார்? எமதுசித் தியினுல்
இன்ப மெய்துவா ரெனயா னென்னுவல்

நாங்கள் ஜேசன்கள் நாங்கள் பொன்மயிர்
பெற்றனம்.

சோலானியோ.—அவரிழந் ததைநீர் பெறுதிரால்
என்பதே யன்ற னிச்சைய தாகும்.

போர்.—பசானியோ கன்னத்தொளிதனைப் பறிக்கும்
தீயசெய் தியேதோ இட்டப் பட்டுள
தக்கடி தத்தில். அருயிர்த் தோழன்
எவனோ மாண்டனன். இலையெனி லவிற்
கடைப்பிடி யுடையவோர் காளையின் மனவலி
இவ்வணம் மாற்றுதற் கேதுவொன் றும்மிலை.
ஆ! இனும் துக்கம் அதிகமாகின்றதே!
உமதுறு மதியுடன் இசைப்பேன் பசானியோ!
நாத! உம் பாதிநா னுதலிற் கடிதம்
கொணர்ந்திட்டா திவென் கூறும் மற்றதுவெது
வென்னினு மியானடைந் திடுதல் வேண்டுமே.

பசா—இனிய போர்ஷியா! எக்காலத்திலும்
காதிதமோக் கறைப்படுத் தியம்பிடு
தீயசெய் திகளிற் சிலவெனீங்கே.
பொறையுடைப் பாவாய்! பெருந்தமென்காதலை
உனக்கு நான்முன் முரைத்திடுங்காலை
என்றன்செல்வ மெலாமென் னரம்பில்
ஓடுவதே. அம்மனையர் குடிப்பிறப்பாம்
என்று தெள்ளிதி னிசைத்தனே னன்றோ?
அக்கால் யானுறைந் திட்டதுண்மையே.
ஆயினு மன்புள் வணங்கே! ஒன்றும்
இலாத வறுகனா னென்னை மதித்தனில்

எத்துணை யிடம்பனென்பதை நீயறி.
எனக்குப் பொருளொ டுட னில்லையென் றியான்
உனக்குரைத்திட்ட காலை யின்னிடம்
ஏது மிலானினு மிழிந்தவன் யானென்
றியம்பியிருக்க வேண்டுமால். ஏனெனில்
என்ற னன்புள நண்பனுக் கென்னைக்
கட்டுப் படும்படி செய்துளேன். ஆக
நான் பெறுவதற்காவென் றனன்பனை
அவனது தீராப் பகையா ளிக்குக்
கட்டுப் படுத்தினேன். மாதே! கடிதமொன்
றுளதிதோ? கடிதமென் நண்பனி னுடம்பாய்
அதிலோர் வோர்சொலுஞ் சீவதாரமாம்
குருதி கொப்புளிக்குங் கொடுங்காய மாகும்.
ஆயி னுண்மையோ? சோலானியோ அவர்தாம்
உவரியிற் றனிவா யுய்த்திடு கலன்கள்
எல்லாந் தவறினவோ? ஒன்றேனும்
சித்திபெய்திலதோ? திரிப்போலிஸ் மெக்ஸிகோ
இங்கிலாந்து இந்தியா லிஸ்பன் பார்பரி
வணிகரை நாசஞ் செய்யும் வரைகளின்
அச்சுறு தாக்குத லடையா மரக்கலம்
ஒன்று மிலை கொலோ?

சோலானியோ.— ஒன்றுமேயிலையால்
என்றன் றுரையே! இதுவலால் யூதன்
கடனை யிறுக்கக் கூடிய பணங் கையில்
இருப்பினு மேற்றிடா னவனெனத் தோற்றுமால்.
ஒரு மனிதனுக்கு நாசமுறுத்திட

அத்துணைக் கடும்பேராசை யவைதரும்
நரனுருத் தாங்கும் பிராணிநா னிதுவரை
அறிந்ததில். காலையு மாலையு மவனிந்
நகரதி பதிதனை நசையுடன் வினவுவன்.
அவர்க்கு நியாயம் மறுத்திடத் தவறின்
நகரத்தின் சுவாதீனத்தின் மேற்பிழை
சுமத்துவன். இருபது வாணிகர் தாமும்
பெரிய பட்டண வாசிகள் பிரபுவும்
இவரெலா மவர்க்கு வேண்டிய துரைத்தனர்.
அவன்றன் றுவேஷம் நியாயம் நட்டமாம்
வன்மமார் வழக்கினின் றெட்டுவா னெவருமில்.

ஜெஸிக்கா.— அவனுடன் யானிருந் திடுங் காலை
தனக்கவ னிந்திடத் தருவதி னிருபது
பங்குப் பணத்திலும் அந்தோனியோ தசை
அடைவதா யவன்றன் தோழர் தவராம்
சப், தியூபல் இவரிடஞ் சத்தியஞ்செய
நானே கேட்டுளேன். நாம்பரி தாபப்
படும்அந் தோனியோ இராச்சிய பலமும்
சட்டத் தோடதி காரமுந் தடாவிடில்
அல்ல லடைகுவ னாமென் துரையே.

போர்ஷியா.— இவ்வண மிடர்ப் பட்டோருமுயிர்த்
தோழரோ?

பசானியோ.— எனக்குமிருயிர்த் தோழரே.
ஒப்பிலாதோங்குதார மிக்க முடையோர்.
சாலவுந் தன்மையார், குருமுபகாரம்
உதற்றியிற் சலியா மோப்பிலா வுத்தமர்,

இத்தனி தேயத் தமிழ்ப்புடை யெவரினும்
இலக்க மற்றிவ்வி யாவருமேமத்தும்
யூதர் கோவை புரிமின் கழுகம்
சால விரிக்குந் தகைமிய நகார்.

போர்ஷியா.—அவர்தந் தனக்கவ் களிக்கவொன்றுயா கடமையென்னவோ? கதறுகிர் காதல!

பஸானியோ.—எனக்கா யுலக மிப்பட் கடிதம்

போர்ஷியா.—காணி? இன்னையேனோ! அறிவிக்க கடமை ஒருவாம் பரிகசித்திடுவீர்.
இத்தனை விட்டானென, வடைய புரிசமுதும்
பஸானியோ தன்மபால் விழுப்புமுன்
இருவீர்த்தகை மிரட்டுவீர். அவன்மேல்
அதனிழுபடைக் காதிட வைப்பீர்.
ஆயுத்தெதன் முடன் முன்னுரு வொழிமலே
கன்னலைமுக் ஆதவிருந்தை குதிரைவாகைகள்
பகிர் தாழ்வாய் இருமி வருமுனக்கடன்
கொள்வதின் விஸ்பாற் போக்குநீர் நயமாய்.
இச்சிறு கடனை வீசுத்திடவிருபால்
பங்கும் பசவழைவ படைக்குந் கடன் தீர்க்
கொடுக்கிறம் முன்னைக் கிளைவிருள் நலமும்
அமைத்திவ வனமுருகிர். விரைவாகுக
என்றவ் வொழியும் யாகு மிடையிலே
கன்னியும் கையை வெண்ணரின் இருப்போம்.
போகிர். போகிர் மணியில் வருளமு
நின்மேல் கீர்தரு கிரகமுதி சதனால்
உமதன்பருக்குகவ்வள மையைப்பார்...

கனிப்புறு வதனங் காட்டுகிர். மிக்க
அருமையா யுமைநா னடைக்கின தனுற்
கழிபேரன்புடன் காதலித் தேனுமை
ஆறல் உம்முடை யன்பர் கடிதம்
எற்குத் தெரிய வாசித் திடுவிராய்

(வாசிக்கின்றான்.)

இனிய பஸானியோ! என் மரக்கலங்கள் எல்லாம் தப்பிப்போயின. எனக்குக் கடன் கொடுத்தவர்கள் குரூரர்களாகின்றார்கள். என் ஆஸ்தி மிகக் குறைந்தது. யூதனுக்கு நான் எழுதிக் கொடுத்த பத்திரம் காலங்கழிந்து அபராதத்திற்குள்ளாயது. அந்த அபராதத்தைக் கொடுத்தபின் நான் ஜீவித்திருத்தல்கூடாது. ஆதலால் என் மரணகாலத்தில் உம்மை நான்காண்பதற்கு மாத்திரம் கூடுமாயின் உமக்கும் எனக்குமுள்ள கடன் எல்லாம் தீர்ந்ததாகும். ஆனாலும் உமதுபிரியப்படி செய்யும். உமதன்பு உம்மை இங்கு வரத் தூண்டா விட்டால் என் கடிதம் அப்படிச் செய்யாமல் இருப்பதாக.

போர்ஷியா.—ஆ! காதலனே! குறைபாடின்றி யனைத்தும் ஒல்லையி லாற்றி யுடனே யேகுதிர்.

பஸானியோ.—ஏகுவா னின்றன் னினிய விடைபெறக்
குறைதே யாதலி னொல்லையிற் செல்வேன்.
ஆயிற் றிரும்பினா னடைந்திடுங் காறும்
யானுப னித்திரை யினையும் தோடம்
எந்தப் படுக்கையும் எய்தாதாகும்.

நாமிரு வருஞ்சந் தித்திடு நாள்வரை
அயர்வுயிர்த் திடலெனக் கில்லா தாகுக.

(எல்லாரும் போதல்.)

மூன்றாங் களம்.

இடம்: வெனிஸ் நகரம் ஒரு வீதி.

[ஷைலாக், சாலரினோ, அந்தோனியோ,
சிறைகாப்பாளன் வருதல்.]

ஷைலாக்.—சிறைகாப்பானனே! செவ்வியிற் காவாய்,
இரக்கமென்றென் னிடத் தியம்புத லொழிதி.
வட்டியி லாக்கடன் றருமடையிவ் வியவன்.
சிறைகாப்பானனே! செவ்வியிற் காவாய்.

அந்தோனியோ.—நானினுங் கூறல்கேள் நல்லஷை
லாக்கே!

ஷைலாக்.—என்பத் திரப்படி பெறுவன்யான்.
என்றன்
பத்திரத் திற்கெதிர் பகர்தல் ஒழிதி.
என் பத்திரப்படி பெறுவன்யான் எனயான்
சத்தியஞ் செய்துளேன். சற்றுங் காரணம்
இன்றியென்னை நாயென விளித்தனை.
நாய்கல் யானதாலென்றன் கூரிய
பற்களைப் பற்றிமற் றெச்சரிக்கைகொள்.
இந்நகர்த் துறைவனு மெனக்கு நியாயம்
அளிப்ப னவசியம். அன்றியக் கம்சிறை
சிறைகாப் பானனே! இவனிட் டவன்றன்
வேண்டிய வீதி வெளியி லவனுடன்
வந்திட மடையனா யிருப்பது வியப்பே!

அந்தோனியோ.—நானுரை மொழியைக் கேட்கத்
தகையாய்.

ஷைலாக்.—பத்திரப்படியே பெறுவேன். நீ பகர்வது
செவியுறேன். பெறுவேன் பத்திரப்படி, பேச்சினித்
தவிர். இதில் தயைத் தியன்றர்க் கிணங்கிச்
இரக்கத்திரங்கிப் பெருமூச் செறிந்தும்
குழைமனக் கசிய மதியிலா மூடனும்
ஆகேன். என்றன் பின்வருமடையேல்.
ஒருமொழியும் பேசவிடக்கொடேன்.
என்றுரைத்துப்படி யிறங்கு வியாபில
சலரினோ.—மனிதர்க ளோடுடன் காலமும் வசித்திடும்
வச்சிர மனமுடைக் கள்ளநா யிவனே.
அந்தோனியோ.—அவன்போகட்டும் அவனைப்பயனிலாப்
பிரார்த்தனையுடனினிப் பின்தொட ரேன்யான்.
அவனென தாவியை யவாவினான். அவன்றன்
கருத்தை நன்றுகக் கண்டறிந் தேன்யான்.
என்பாற் முறையிர லவன்கடன் காரர்
பலரைநான் பன்முறை கட்டண மடைத்திடா
வாறுகாத் தனன்யான். ஆதலி னென்னைப்
பகைத்தனன்.
சலரினோ.— இக்கடப் பறித்தல் கண்டும்
பிரபுவேந்தனும் பொருந்தா னென்றுமே.
அந்தோனியோ.—நேய முறைதனை நிறுபணிசெயினல்
ஆகாதகுமாம். அதனைமறுத்திடல்
வேனிஸில் வியாபாரஞ்செய் யன்னியர்க்
கிராச நீதிக் கியம்புள தேதம்;
ஏனெனில் இந்நகர் வாணிபமியாவும்
இந்நேயத்துள சாதிய செல்லாம்

சேர்ந்துசெய் வனவாம். ஆதலிற் போகிர்.
இவ்விச னங்களும் நட்டமுந் தருமென்
கொடுங்கடன் கொடுத்தோ னெற்குநாளை
ஓரிறாத் தசைதனைப் பரிசிற்றுதவுந்
தொனைமை யென்னை மெலிவித்தனவே.
சிறைக்காப்பாளனே! நடந்து செல்லுதி.
அவன்கடன் தனைநா னடைத்திடப் பஸானியோ
காணப் பொருந்திடக் கடவுளை வேண்டுகின்றேன்.
அப்பொழு தெனக்கோர் கவலையு மில்லையால்.
(எல்லாரும் போதல்.)

நான்காங்களம்.

இடம். பெல்மொண்டு, போர்ஷியா வீட்டில் ஓர் அறை.

[போர்ஷியா நெரிசா, லாரென்சோ,
ஜெசிக்கா, பால்தசார்
இவர்கள் வருதல்.]

லாரென்சோ.—அம்மணி! உம்முன் யானுரைக் கிடினும்
தெய்வத நட்பின் பிறங்கொண் டாடும்
கவுரவ முண்மைசேர் கருத்துசீ ருடையீர்.
அஃதிவ் வனமு மதன்பிற் பிரிவதும்
பொறைபெ றிட்டமாய்ப் புகன்றிடு மன்றே.
இக்கன மெவர்க்கு நீர்தனி செனினும்
எத்துணை யுண்மைத் துரைமகற் கிந்த
உதவி புரிந்தனி ரெனுமுங் கணவனும்
என்றன் றுரைமகற் கெத்துணைப் பிரிய
சினேக னெனவுநீர் தெரிகுதி ரொழுக்கமாம்
உதாரத் துவமுமை யுக்கத் தினால்
இயற்றுமப் பணிதனி லிந்தப் பணியை
அதிகப் பெருமையாய் மதிப்பிரென் றுயிவன்.

போர்ஷியா.—நன்மைசெய் ததற்கா நானிது காறும்
பச்சாத் தாபம் பட்டதே யில்லை.
இக்கா லத்துநான் படுவ திலையால்.
இருவரோ டொருவர் பேசுபு காலம்
கழித்தே யன்பாற் சமநுகம் பூண்டும்
ஆவியை யுடைய ராவலர் சாயலும்
ஒழுக்கமுங் குணமு மொத்திருத் தலவசியம்.
என்றன் மகிழ்நருக் கின்னுயிர்ப் பாங்கன்

ஆக அந்தோனியோ விருத்தலா லென்றன்
புருடனை யனையவன் போல்வது திண்ணமே.
என்னுயிர்ச் சமானனை யிருணில வேதனை
நிகர்த்த பிடையி னின்றுமீட் டிடச்
செலவிடு மெத்துணைச் செலவுமன் சிறிதே.
இஃதெனை யானனி புகழ்தலே இனியும்.
அப்பேச்சொழிக. மற் றதைவது கேட்டியால்.
என்றுயக னிவண் மீள்வுறு மளவும்
வீட்டினிர் வாகம் விசாரணை யிவ்வெலாம்
உன்கையி லொப்புவித் தேன்லா ரென்சோ !
எங்கள்கணவர்க ளிவண்வருங் காறும்
இங்கெரி சாவுட னென்றனித் திசனைப்
போற்றுபு நீட்டை புரியுமோர் விரதம்
இரகசியமாகப் பூண்டுளேன். இரண்டு
'மைலுக்' கப்பாற் றுறவோர் மடமொன்
றுளதவணுங்க ளுறைவோம், உமக்குநான்
இடுமிப் பணிதனை யேற்றிட மறுக்கன்மின்
எனதயக் கன்றால். இப்பொறுப் பென்றன்
அன்பி னொடுசில வவசிய மும்மேற்
சுமத்திடச் செயுமால்.

லாரென்சோ:— துரைமகளே ! என்
மனப்பூ ருவமா யுமது மாசிலாக்
கட்டளை யாவுங் கடந்திடேன் யானே.

போர்ஷியா.—என்பரி சனமென் னெண்ண முன்னரே
அறிவா ராதலி னுலே பசானியோப்
பிரபுதனக் குமெனக் கும்பிரதியா

உமையும் ஜெசிக்கா வினையு மேற்றிடுவர்.
அதனிற் போதிர் யாம் போய்வருங் காரியம்.

லாரென்சோ.—நல்லன நன்று நுமக்குள வாகுக.

ஜெஸிக்கா.—இஷ்டபூர்த்தி யெய்துக வுமக்கே,

போர்ஷியா.—உமதன் பிறுக்கா வுமக்கு வந்தனம்.
உமக்கதைத் திரும்ப வுரைத்திட வுவந்தேன்.
வந்தனம் ஜெசிக்கா!

(ஜெசிக்காவும் லாரென்சோவும் போதல்.)

வருதி பால்த்தசார்.
உண்மையும் யோக்கியமு முடையை யாவுனை,
எக்கா லத்திலுங் கானுமா றின்னும்
காண்பே னுக. இக்கடி தந்தெகாண்
டாடவர் செல்லத் கடுமெல் வேகமா
வருதி படுவா தனக்கு. ஆங் கென்றன்
பந்து வாகும் பண்டிதன் பலாரியோ
கையிலிக் கடித மீந்தவ னன்னிடம்
வழங்கிடு முடையுங் கடிதமும் வாங்கியே
வெனிசுடன் வியாபா ரஞ்செய் பொதுத்துறை
மீனுவே கத்துடன் வருதியென் பிரார்த்தனை.
வார்த்தையாற் காலம் போக்கா தேகுதி.
நானு முனக்குமுன் னனுகுவ னங்கே.

பால்த்தசார்.—கூடிய வேகங் கொண்டேகிடுவேன்.
(போதல்)

போர்ஷியா.—நெரிசா! வருதி நீயினு மறியாக்
கருமமென் றுடைக் கைதனி லுள்ளதால்.
நமையவர் நினைத்திடு முன்னமே நாங்கள்

கணவரைக் காண்பேம்.

நெரிசா.— அவர்நமைக் காண்பரோ?

போர்ஷியா.—அவர்கா ணுவரால் ஆயினு நெரிசா!
நமக்கிலா தனைகள் நமக்குள தாவவர்
உனச்செய் புடையுடன் காணுவர். ஒட்டம்.
இருவே முமியைப் வாடவ ராடை
தரித்திடி னிருவரில் யான்மிகத் தைரியம்
உடையவ னாகுவேன், மிகு முக்கம்
சேர்தரு சிறப்பொடு கட்க மேந்துவேன்.
பாலப் பருவம் காளைப் பருவமாய்
மாறிடு மந்நியிற் சில்லொலி வசனமாய்ப்
பேசுவேன். பிணுக்கா யிரண்டடி வைப்பதை
ஆண்மைசே ரோரடி யாயிட வைப்பேன்.
இடம்ப வனப்புறு மிளையவ னேபோற்
காதற் போரினைக் குறித்துக் கழறுவேன்.
கனமிகு முடைய மாதரென் காதலை
வேட்டுகொள் மறுப்பப் பிணியுற் றிறந்த
விசித்திரப் பொய்பல விளம்பிடு வேனால்.
அதைநான் தவிர்த்திட லமையா தன்றே.
அதன்பின் றெலந்த தாயமங் கடைவேன்.
எவ்விதத் தானு மவரைச் செருக்குடா
திருந்தே னிலையே எனத்துய ருறுவேன்.
பன்னிரு மாத முன்னமே பள்ளி
அகன்றன னெனவே யாடவர் சத்தியஞ்
செய்திட வித்தகைச் சிறுபொய் பிறுபது
செப்புவேன். என்றன் சிந்தையி லுள்ளே

இடம்பரி னிவ்வகை யாயிர மறிவில்
அகட விகட முள அவைகளைநான்
ஆடிக் காட்டுவேன். ஆதலின் வருதி.
நமக்காக நந்தன வனவாசலிலே
காத்துள வண்டியி லேறுங் காலையில்
என்றன் சூழ்ச்சி யெலாமுனக் கியம்புவன்.
ஆதலிற் றுரிதமாக விரைந்திடாய்,
இன்றுநா மிருபது மைல்செல வேண்டுமே.

(எல்லாரும் போதல்)

ஐந்தாம் களம்.

அதேயிடம். ஒருதோட்டம்.

[லான்சிலட்டும் ஜெசிக்காவும் வருதல்.]

லான்சிலட்.—ஆம் உண்மையே. ஏனென்றால் பார்: தகப்பனுடைய பாவங்கள் பிள்ளைகளைப் பிடிக்கின்றன. ஆதலா லுமக்காகப் பயப்படுகிறேனென்று உமக்குச் சொல்லுகிறேன். உம்மிடத்தில் நான் எப்பொழுதுங் கபடமில்லாமற் பேசுகிறவன். ஆதலால் அந்தச் சங்கதியைப்பற்றி யென்னுடைய அபிப்பிராயத்தை யிப்பொழுது சொல்லுகிறேன். ஆகையாற் சந்தோஷமா யிரும். ஏனெனில் நிச்சயமாக நீர் நரகத்திற் குள்ளாவீர். உமக் கேதாவது நன்மை செய்யக் கூடிய ஒரே யொரு நம்பிக்கைதா னிருக்கிறது. அதுவு மதிகப் பாவமான நம்பிக்கையே.

ஜெசிக்கா.—அதுவென்ன நம்பிக்கை யென்று தயைசெய்து சொல்லு.

லான்சிலட்.—சத்தியமாய் உமது தகப்பனும்மைப் பெறாம லிருந்திருக்கவேண்டு மென்றும், நீர் யூதனுடைய பெண்ணாயிராம லிருந்திருக்க வேண்டு மென்றும் நீர் நினைத்து நம்பலாம்.

ஜெசிக்கா.—மெய்யாக, அது பாவமான நம்பிக்கையே! ஆகவே என் தாயின் பாவங்களின் பயனை நானனுபவிக்க வேண்டும்.

லான்சிலட்.—ஆனால், உண்மையாக, உமது தகப்பனும், உமது தாயாரும், நீர் நாசமடைவீரென்று நம்புகிறேன். இவ்விதமாக நான் உம்முடைய தகப்பனாகிய சில்லாவை விட்டகலும் பொழுது, உமது தாயாகிய கேரிப்டிஸில் விழுகிறேன். நல்லது, இருவழியிலும் நிர்நாசமடைந்து போனீர்.

ஜெசிக்கா.—என் புருஷனால் இரட்சிக்கப் படுவேன். அவரென்னைக் கிறிஸ்தவ மதத்தராக்கி யிருக்கிறார்.

லான்சிலட்.—மெய்யாக, அவர்பேரில் அதிகக் குற்றமேயுண்டு. முன்னமேயே பெரும்பான கிறிஸ்தவர்களிருக்கிறோம். ஒருவனுக் கொருவன் இடைஞ்சலில்லாதபடி வாழ்ந்திருக்கக் கூடிய அத்தனைபேரிருக்கிறோம். இவ்விதமாக கிறிஸ்தவர்களாகிறது பன்றியின் விலையை யதிகமாக்கும். நாம் எல்லாரும் பன்றிக்கறி தின்பவர்களானால், கரிமேல் வைக்கப் பன்றிக்கறி வற்றலை பணத்திற்குங் கூடிய சீக்கிரத்திற் கிடையாமற் போய்விடும்.

[லாரென்சோ வருதல்.]

ஜெசிக்கா.—லான்சிலட்டே! நீ சொல்லுவதை என்புருஷனிடத்திற் சொல்லுவேன். இதோ அவர் வருகிறார்.

லாரென்சோ.—லான்சிலட்டே! நீ இப்படி என்பெண்சாதியை மூலையில் அழைத்துக்கொண்டு

போகிறதா யிருந்தால் சீக்கிரத்தில் உன்னைச் சந்தேகிப்பவனாவேன்.

ஜெசிக்கா.—இல்லை. எங்களைப் பற்றிப் பயப்பட வேண்டுவதில்லை; லாரென்சோவே! லான்சிலட்டும் நானுஞ் சண்டைபோட்டுக்கொண்டிருக்கிறோம். நானொரு யூதன் மகளாதலால், எனக்குக் கடவுள் கருணை கைவராதென்று கண்டிப்பாகச் சொல்லுகிறான். யூதரைக் கிறிஸ்தவராக்கிப் பன்றிக்கறியின் விலையை நீர் அதிகப்படுத்துவதனால், குடியரசுக்குண்டாகும் நல்லக்ஷணத்தினர் நீரல்லவென்று அவனென்னிடம் நிகழ்த்தாநின்றான்.

லாரென்சோ.—விரைவில் மௌனமா யிருத்தலே அறிவின் சிறந்ததையளிக்கும் காலமாயும். அக்காலத்திலும் இவ்விதமான பேச்சைக்கிளிப் பிள்ளைகள் தவிர வேறியார் சொல்ல விசையாரென்று நான் நினைக்கின்றேன். ஐயா, உள்ளேபோய் அவர்களை புசிப்புக்கு ஆயத்தமாயிருக்கத் தெரியப்படுத்து.

லான்சிலட்.—ஐயா, அது ஆய்விட்டது. அவர்களெல்லாரும் மிக்க பசியுடனிருக்கிறார்கள்.

லாரென்சோ.—நல்ல பிரபுவே! வார்த்தையிலிருந்து வேடிக்கை விளைக்கிறவராயிருக்கிறீர். ஆனால் அவர்களை புசிப்பு சித்தமாக்கக் கட்டளையிடும்.

லான்சிலட்.—அதுவுமாய் விட்டது, ஐயா! 'மூடு' என்று சொல்லுகிற ஒரே வார்த்தை தான் பாக்கி.

லாரென்சோ.—ஆனால் ஐயா! 'மூடு' என்பதைத்தான் செய்வாயா?

லான்சிலட்.—ஐயா! அதுவுஞ் செய்யேன், என் வேலை எனக்குத் தெரியும்.

லாரென்சோ.—சந்தர்ப்பங்கிடைக்கும் பொழுதெல்லாம் விதண்டம் பேசுகிறாய். உன்புத்தி சாதுரிய வைபவமெல்லாம் ஒரே தடவையிலா காட்டுகிறாய்? விடுவாயாக. கபடமில்லாமற் பேசுகிற மனிதன் பேச்சிலுள்ள தெளிவான அர்த்தத்தைத் தெரிந்துகொள்ளென்று உன்னை வேண்டிக் கொள்ளுகிறேன், உன்னுடன் வேலைசெய்கிறவர்களிடத்திற்குப் போ. அவர்களை 'மேசை'யை மூடச்சொல்லு. கறியைப் பரிமாறு. நாங்களுண்ண வருவோம்.

லான்சிலட்.—ஐயா! மேசையோ பரிமாறப்படும். கறியோ ஐயா! மூடப்படும். நீங்களுண்ண வருகிறதோ ஐயா! உங்களுடைய மனப் போக்கின்படிக்கும் மனச்சாபல்யப்படிக்கு மாகட்டும்.

(போதல்.)

லாரென்.—ஆ! ஆ! அருமையாம் விவேகமே! எத்தனை
பொருத்தமா யவன்றன் வார்த்தைகள்
[பொலியுமால்.

இத்திரு வன்றன் வினைப்பி லெத்தனை
நன்மொழி தன்னைமுந் நன்னான். அவனினும்
உயர்தரு பதவியி லிருக்கின்றான் பலபல
வசன முடையவ ராயினும் வழங்க
உற்சா கம்முள மொழியோன் நிலைமையால்
அருத்தங் கெடுத்திடு மவரை மூடரைத்
தெரிவே னறிவ. ஜெசிக்கா! என்ன?
சம்மதி சரிதான் சகலம் விளம்புவனே!
பசானியோப் பிரபுவின் பாரியை யெவ்வணம்
மதித்தனை. உன்னெண்ண மதிப்பெனக் கியம்பாய்.

ஜெசிக்கா.—உரைக்கவொண் ணாதே. பசானியோப் பிரபு
யோக்கிய மான நடக்கை யுடையராய்
வாழ்ந்திடத் தக்கதே. தன்மனை வியினும்
இத்தகைப் பாக்கிய மெய்தலவன் புவியிற்
சுவர்க்க சுகமுறுதல் தன் தலையிற்
பெறுவன். அவ்வணம் பெறுந்தகை யிலனேல்
அவனொரு காலுஞ் சுவர்க்க மடைதல்
கூடா தாகக் குறித்தல் வேண்டுமால்.
வான நாட்டினில் வான வரிருவர்
இகலிப் பணயம் பெண்க ளென்றிருவரின்
ஒருவள் போர்ஷியா வையொட் டமைக்கில்
அவட்கிணை யாகவெவ் வணங்கனை மற்றவள்
வைக்கினுங் குறைக்கு வன்பொருள் பிறிதும்
வைத்திட லல்லாற் குறைதீரும் பாரால்.
ஏனெனில் வறும்பொருள் இவ்வுல கத்தில்
அவட்கிணை யாமற் றொருத்தியு மிலையால்.

லாரென்சோ.—மனையா ளாகமற் றிவளிருக் கிடல்போல்
நின்று புகழு நீயெனைப் பெற்றனை.
ஜெசிக்கா.—இல்லை, என் னெண்ண மதனையுங் கேட்பீர்.
லாரென்சோ.—உடனே கேட்பேன், உணவு போதேமுன்.
ஜெசிக்கா.—இல்லை, நான் பசியா யிருக்கும் காலையே
புகழ்ந்திட வேண்டுமை.
லாரென்சோ.— வேண்டாம் போசனம்
உண்ணுங் காலை புரையாடு வோம்நாம்.
அப்பொழு தெவ்விதம் நீயுரைத் திடினும்
அம்மற் றனையுடன் சீரண மாகும்.
ஜெசிக்கா.—நல்லது. உமைநா னன்றாய்ப் புகழுவேன்.
(எல்லோரும் போதல்)

நான்காம் அங்கம்.

முதற்களம்.

இடம் வெனிஸ் நகரம்.
ஒரு நியாயஸ்தலம்.
[நகரத்தலைவனும் பெரியபட்டின வாசிகளும்
அந்தோனியோவும் பசானியோவும்
கிராஷியானோவும் சோலானியோவும்
மற்றவர்களும் வருதல்.]

நகரத்தலைவன்:— என்ன ? அந்தோனியோ இங்கே
இருக்கின்றாரா?
அந்தோனியோ:— இதோ இருக்கின்றேன். தங்கள்
சித்தம்.
நகரத்தலைவன்:—பாவமைக் குறித்து மிகவுமே
[வருந்துகிறேன்.
இரக்கமென் பதுசிறி தேனு மில்லாத்
தயையுளந் தரும்பு நிலைதனைக் கொண்ட
அரக்கன் கன்மனத் தினனும் அன்னவற்
குத்தரந் சொல்லிவா வுற்றனிர் நீரே.
அந்தோனியோ —அவன்றன் கொடுமை தணிக்கச் செல
[வின்றி யடக்கித்
தனித்திடத் தாங்கள் சாலவுஞ் சிரமப்
பட்டதாக் கேள்விப் பட்டேனா னாசே!
பிடித்த பிடிவிடா திருத்தலி னவன்

பொறுமை யற்றெழும் பொல்லாக் கொடி [னின்
நெஞ்சச் சட்ட மதனியாற் றாங்கித் திடத்துடன்
கூடா மையினவன் கோபத் திற்குக்
பொறுமையை யிடர் தீர்க்கு மன்றன்
கொடுங்குரத் தையென் றுறவமைதியிற்
சகித்திடச் சித்தம் யானிருக் கின்றேன்.

மகத் தலைவன்:— அருக ஒருவனிவ்விடத்தே யழைக்குக.

சேவகர்:— வாயிலிற் காத்துளன் வருகின்றான் காவலா!

[ஷைலாக் வருதல்.]

மகத் தலைவன்:— இடங்கொடும் அவனெம் முன்னிற்க [கிறக்கவே.
ஷைலாக்! நீயுந் நினைப்பதுந் நானையும்
வன்மனத் தொடர்ந்தாம் வழிகடைக் கின்றாய்,
என்றுலகினர் நம்பும். யாமெண்ணுவதுமதுவே.
இன்னும் யாவரும் நினைக்கின்றனர் யெவ்வை [யெனில்,
இப்பொழு தீய செய்துவிட்ட மேலுமின்
கொடுமையிற் கொடிய மிகைக் கொடுத்துய
பச்சாத் தாபங் காட்டுவாய் பின்னர்.
அன்றியு மன்னிய யாகவே யித்த
ஏழை வாணிகன் றனதேயர் சேர்த்தல்
கொடுத்திடு மிவ்விடத் திழந்தே
அவையுய ராய் முடிவாய் தனிலெத்
காலமும் பயின்றறி யாக்கடு மனத்தாத்
தார்த்தர் துருக்கியர் திருப்புகெத்த நத்தினர்

சிதைந்திக் கனத்தொகு கொடுக்கு மிரக்கம்
உறச்செயும் பார்வையுடைய தாகியும்
இராசவாணிகனையுந் தலையெடா தழுத்தும்
இறந்தின தாகியுந் தின்றுவரச்
சாலத் திரண்டு தாங்கொளுந் தகையதாய்
தலைவித் திடுமவர் கட்ட மனைத்தையும்
கருணைசேர் விழியுடன் கடைக்கணித் தளர் [தம்
அப்பொ தகத்தினை யகற்றிலை யன்றி
மார்க்கர்க் குரிய சாந்தமகன் பிழைமுதல்
உன்னத் தகுந்தி யதனை முதலிற்
பாதியை மன்னிப் பாயென் பவையே.
யூத! நின் வருண்மொழிக் கெல்லாம் [காத்தனம்.

ஷைலாக்:— என்றலையின் மேலுள குறைத்தனெ [ன் யான்.
என்பதற் கிப்பதுவென குறித் தாங்கடன்
அடையவெந் தீயதா மொய்வரா யின்மேல்
இட்டனெ னின்று. அதிற் றிலையென மறுப்பின்
உமது பட்டய முர்ச்சதர் தாங்கள்
இவற்றிற்கு நாச மெய்துக. மூவா
யிரம்டக் கற்பினை யெற்றனுக்குடன்
பிணைத்தை நிறைபெறப் பெட்புறு மாதெற [வன்?
எனாநீர் வினவுவீர். அதற்கிதற் கிடையான்
அளிப்பேன். ஆயினு மிவ்விதன் விட்டமென்

நவிறுவேன், அதுவிடை பகர்ந்த தன்றோ?
என்னகத் தொரெலி யிடரியற் றிடுமேல்.
அதனைக்கொன் றிடஅப்பு தம்மிடக் 'டூக்கட்'கள்
தந்திட விச்சை யுடையே னாயினன்?
இதுவே யெதிர்விடை யாக்கொளோரென்
[ஞரோ?
அங்காந் திடும்பன் றியைப்பரு வருப்பார்
சிலருளர். பூனையைக் கண்டுமிக் கினைப்பார்.
அதுவேயன்றி யுக்கேர வொத்தின்
வாசிக் கின்றெழும் வன்னொலி கேட்டுத்
தம்மை யடக்குந் தாமிலர் தாம்பலர்.
மனுஜர்க ளத்தொ மாளும் வேட்கை
விருப்பு வெறுப்பைத் தன்வழி நடத்தும்.
இப்போழ் தமக்குத வெதிர்விடை யீரு
[வன்.
வாயங் காந்திடும் வராகத்தை வெறுத்தலும்
வீட்டிற் றிரிமியப் பூனையை வெறுத்தலும்
விக்குமொத் தொலிமீது விருப்பா திருந்த
[லும்
எய்துவ தற்குநல் லேது வின்றியும்
தனைவெறுப் புறத்தும் தகையவொருவன்றன்
தாம்வெறுத் தளிரு மாம்விலங் கொன்று
நானதை யன்னவர் நோய்போல் பயனிலா
இத்தரு வழக்குத் தொடர்வழி யெனக்கும்
அந்தோனியோமே லுள்ளபகை மத்தனை
விரோதமு முறதியாம் வெறுப்புமே யன்றி.

வேறு காரணம் விளம்பிடற் கில்லை.
மேலினிக் கூறுதற் கிடையெப் பிராசி—
பசானியோ:—இரக்கமின் மனிதனே ! இஃதுன் கொடூரப்
போக்கினைப் பொறுத்திடற் கேற்ற
[தோர் விடையல.
ஷைலாக்:—என்னுடைய் தாருமக் கிட்டமாம் விடை
[யைம்
புகன்றிடக் கடனும் பூண்டவ னல்லேன்.
பசானியோ:—வெறுத்த பொருளினைக் கொல்வரோ
[யாவரும்?
ஷைலாக்:—கிட்ட லொன்றனை வெறுப்பரோ
[எவரும்?
பசானியோ:—வெறுப்பனை முதற்கணே விரோதப்
[பனையல.
ஷைலாக்:—அரவினை யிருகா லுன்னைத் தீண்ட
விரும்புவா யோ?
அந்தோனியோ:— நீர் விவாதஞ் செய்வது
யூத னுடனென் றுன்னுதி ருமக்கே.
கடற்கரை யிற்போய் நின்றக் கடலின்
வெள்ளம் வழக்கமாய் விஞ்சிடு முயரந்
தணித்திட நீரும் பணித்திட லாகும்.
பழிதனைக் கவர்ந்து செம்மறி யதைத்தழச்
செய்ததென் னெனவோ நாயைக் கேட்க
[லாம்.
மலைவளர் மரங்கள் வளிபட் டசைந்துழிச்
சுக்கெனத் தலைகளைத் தரம்பெறச் சிரித்தும்

இவைகளை நீர்தவிர்க் கொழித்திட லாகும்.
இவனது யூத இருதயந் தன்னின்
(ஆ! ஆ! அதனிலும் கடினமெதுவோ)
இளகச் செய்திட முயலுவதிலும்
அதிகக் கடின மாபுன தெதுவோ
அதையினக் கொடீர் முயலின் முடியுமால்.
ஆதலி னினியே தனிக்கிடப் போவீர்,
மற்றைய உபாய வழியெலா நீக்கிச்
சாலச் சுருக்கமுந் தகுதியாய் விரைவும்
ஆய தீர்ப்பையா னடைக. வேட்டதை
யூதன் பெறுக வெனப் பிரார்த்திக்கிறேன்

பஸானியோ:—மூவா யிரம் 'டக்கட்'க் கிருமட
ங்காயிர முனதிதோ.

ஷைலாக்:— ஆறுயிரம் 'டக்
கட்'டி லொவ்வொரு 'டக்கட்டு' மாறு
பாகமா யொவ்வொரு பாகமோர் 'டக்கட்
டாய்' இருப்பினு மவைகளை யான் கொள்ளேன், என்னன்
பத்திரப் படியே பெற்றிடுவேன் யான்.

கோமகன்:—இரக்கந் தினையும் காட்டாதீயும்
அதனை யெவ்வணம் அடைந்திட நம்புதி?

ஷைலாக்:—தவறு செய்திலேற் கெதுதண் டனைப் [பயம்?
அடிமைக ளநேகரை விலைக்குநீர் கொண்டு [ளீர்.
அவர்களை விலைக்குநீர் வாங்கிய வாறு
கழுதையும் நாயுங் கோவேறு கழுதையும்

இவைபோ லிழிவா மடிமைத் தொழில் [செய
அவர்தமை யேவு கின்றனிர், அவரை
சிறைவிடுத் தமது செல்வக் கைக்கொளாது
குரியமக் கட்கு மணத்தைப் புரிந்துக,
சுமைசுமந் தேனவர் வியர்க்கிறார், அவர்தம்
படுக்கை நம்முடைய படுக்கையின் மெது [வாய்
உண்ணு முணவுநம் போலருசியா யிருக்க,
என்றிங் குமக்குரை யியம்பிட லாமோ?
அடிமைக ளெம்பொரு ளெனவிடை யறை [வீர்.
அதுபோ லென்ற னெதிர்விடை யாயிதும்.
அதிகா ரத்துட னவனிடம் கேட்குமோர்
இராத்தற் றசையெனு லவற்றவு மரிதாய்
அடையப் பட்டதே, அஃதென தேயாம்.
எவ்வித முமதைப் பெறுவேன், இதை யெனக்கில்
சீச்சீ யும்முடைச் சட்டமும் பாழே.
வெனிஸ்நக ரத்தின, தீர்ப்பும் வியர்த்தமே.
'தீர்ப்பு' நான் பெறுவேன், சரிவிடை செப் [புவீர்.
அதை நானடை வேனோ?

கோமகன்:— இவ் வழக்குத் தீர்த்திடற்கு
நானழைத் தனன் கல்வி பண்டிதன்
தம் பெல்லாரியோ வித்துவா னிவ்விடத்
திடாதெனி லென்னதி காரத் தாலிவ்
வழக்கு விசாரணை நிறுத்திவைப் பேன்.

சால:— என்னுடைய பர்சே யிவளிப் பொழுது
மதிந்தசுருள் பின்புத்த ளிடமிருந்
தொருநாடு நத்தாட்டுநேரா தன்னெனி
தனிவிற் கின்றனன்

நகாத்:— அருமையாற் கடிதம்,
அனுப்பாய் அந்தனே.

பசா:— அந்தோனியோவே!
சந்தோ டமாயிரும் என்னே? தைரியம்
இன்றும் விடாதிர் ஐய! வெவ்வெபாருட்
கெம்முதி ரத்தி லொருதுளி யிறக்குமுன்
என்றசைச் சோரிபெறும்புக லெல்லாம்
அடைவான் யூதனே.

அந்:— மாசா மடைந்திட
மந்தையிற் றக்க வன்பிணி யொன்றுறும்
ஆடு நானே. அதுபல வினமாம்
கனிமுத லிற்றகை மேல்விழுஞ் சுப்ப
யாவு மீறுதி யெய்துவ தாக.
சற்றும் பின்னே யுயிருட னிருந்தென்
மரண சாசனம் வரைதலின் மிக்க
உயர்ந்ததோர் தொழிலி ருந்திடு மோ?

[வக்கீலின் இலேககனுக்குரிய உடையுடன் நேரிசா வருதல்.]

நகா:— பதுவா பட்டணத் தவளலோ வரியோ
இடத்தி லிருந்தோ நீ வந்தனை பாகுசொல்?

நேரி:— என்றுவ ளதசே அவ்விடத் திருந்து நான்
வந்தனேன், பேல்லரியோ வந்தனை மித்தனர்.

(குறுவாளைத் தீட்டல்.)

பசா:— இவ்வள வூக்கமா யேன்கத் தியைநீ
தீட்டுகின் றனையோ?

சைலா:— நீர்த்திடக் கடனை
வகைபோன் றின்றிமேற் றங்கே நிற்பவ
னிடத்தப றாத மதுத்தெழித் திடற்கே.

கிரா:— கொடிய யூத! உன் கத்திநீ ராக்கல்
உன்னடித் தோலிலன் றுன்னுடை யுயிரிலாம்.
கொடியவுன் பொறாமையின் கூர்மையிற் பாதி
எந்த வாயுதந் தனக்கும் மிலையே.
கொலைப்பணி முடிப்போன் கோடரிக் கு
மிலை.
எவ்வித வேண்டுதல் மனக்கா தோவுனை?

சைலா:— இலக்கா நன்மதிக் கேட்டிய நியாயம்.

கிரா:— ஆ! வெறுக் கத்தகு நாயே! அழிசதி.
உயிருடன் இவனைத் திருப்பவு மெய்யாம்
நியாய வாதம். பிதகோராசபோல்
விலங்கி னாத்துமா மானிட மேனியிற்
புகுமென வென்னவாம் போற்றி என்மதத்
தனிலின் றியான்றடு மாறச் செய்திடாய்.
உனதுநா யாத்துமா வோநா யுடம்பிற்
புகுந்தொரு நரவதை புரிந்திடத் தாக்குண
டிடுங்காற் றாக்குமர மிசைந்தக் கொடிய
வாத்துமாப் பறந்துன் னசுத்தத் தாய்வயின்
சீவனி தருநாள் நின்னுளே புக்கது.
ஏனெனி லுன்ற னெண்ண மெல்லாம்

ஓராய்த் தன்மையு முயிரப் பிரியமும்
மிகுபசி யுடைமையு மிசைவோ டறுமாம்.

ஷைலா:—என்பத் திரவிலச் சினந்தனை யிகழ்ந்து
நீக்கிடுங் காதும் நின்னுரை யீதலை
ஆரவா ரத்துடன் பேசி யழித்தியால்,
புத்தியைப் புதுக்குதல் புரிதிறற் சிறுவ!
இலையெனிற் றீரா வழிவெய் திடுமால்.
நியாயம் பெறாது நிற்கின் றேனிவன்.

நகரத்:—மேலுநி யாயத் தலத்திற் சேர்தற்
படிப்புடை வாலிப பண்டித வொருவரைப்
பெல்லா ரியோவுநம் மிடையிக் கடிதம்
இன்புறக் கொணர்ந்தது. அவரிங் கெவு
ளார்?

நேரி:—அவரைச் சேர்த்துக் கொள்ளுவ தெவ்வான்
அருகிலே யுறுதி யறிதற் கிருக்கே.

நகரத்:—முற்றும் களித்தனம், மூவர்க ளல்லது
நால்வர்போ யவரை நன்மரி யாதையோ
டழைத்து வம்மினிர். அதுவரை யாமும்
பெல்லாரியோ கடிதம் பேசுதல் கேட்பாம்.

(இலேககன் வாசிக்கின்றான்.)

தங்கள் கடிதம் வந்து சேர்ந்த இப்பொழுது நான் வியாதியா யிருக்கின்றேனென்று தங்கள் கனத்திற்குத் தெரியவரும். ஆனால், தங்களுடைய ஆள் வந்தபொழுது ரோமாபுரியி லிருந்து ஒரு வாலிப பண்டிதர் என்னை அன்பு

டன் பார்க்க வந்து என்னுடன் இருந்தார். அவர் பெயர் பால்தசார். யூதனுக்கும் வியாபாரியாகிய அந்தோனியோவுக்கும் உண்டாகிய விவாதவழக்கைப்பற்றி யவருடன் சொன்னேன்; இருவரு மநேக புத்தகங்களைத் திருப்பிப்பார்த்தோம். அவரிடத்தில் என் அபிப்பிராயத்தைச் சொல்லி யிருக்கிறேன். தங்களுடைய வேண்டுகோளை எனக்குப் பிரதியாக நிறைவேற்ற நான் கேட்டுக்கொண்டதன்மேல், நான்போதுமானபடி புகழ்ந்துரைக்கக் கூடாத அவ்வளவு பெருமிதமான கல்வியை யுடைய அவரால், அந்த என்னுடைய அபிப்பிராயம் விர்த்தி செய்யப்பட்டு அவருடன் அனுப்பப்பட் டிருக்கின்றது. அவருடைய வயதின் குறைவானது அவர் அடைய வேண்டிய கௌரவமான மதிப்பிற்கு இடையூறா யிராதபடி தங்களைப் பிரார்த்திக்கின்றேன். ஏனெனில், இவ்வளவு முதிர்ந்தமூளையையுடைய இளைய சரீரத்தைப் பார்த்ததே இல்லை. அவரைத் தாங்கள் கிருபையுடன் ஏற்றுக்கொள்ள—அனுப்புகிறேன்; விசாரணைக் காலத்தில் அவருடைய கீர்த்தி நன்றாய் வெளிப்படும்.

நகரத்:—கல்விமான் பெல்லா ரியோவெழு தியதை
வாசித் திடநீர் கேட்டீர், வந்தனர்
பண்டித ரிதோ:—

[நியாயசாஸ்திர பண்டிதர்போல் உடுத்துக்கொண்டு
போர்ஷியா வருதல்.]

நும் பாணி கொடுத்திடும்.
வந்தனிர் விருத்தனாம் பெல்லாரியோ விட்-
டிருந்தே ?

போர்:— ஆம்ஐய நேரினேன் சொன்னவளே !

நகரத்:— உம்வர விற்கியா மிகமகிழ்ந் துள்ளோம்.
இருக்கை காணும். இந் நியாயத் தலத்திலே
விசாரணை யாதும் விவாதந் தறிந்தனிர்.

போர்:— காரியம் வழக்கினை நன்கு மறிந்துளேன்.
யாவன் வணிகன் ! யாவன் யூதன் ?

நகரத்:— அந்தோனியோ, கிழ ஷைலாக் காவீர்
நில்லுமின்.

போர்:— நின்பெயர் ஷைலாக் காமோ ?

ஷைலா:— என்றன் பெயரது ஷைலாக் காகும்.

போர்:— நீபிடி வாதமாய் நிகழ்த்திடும் விவாதம்
விநோதமே. ஆயினும், வெனிஸிய சட்ட
விதியோ நின்செயல் விலக்கத் தக்குறப்
பேசா தொழுகால். அவன்றன் பிடிக்குள்
அகப்பட் டுள்ளீ ரன்றோ ?

அந்:— ஆம் அவன்
அவ்வணம் சொல்கிறான்

போர்:— அவனுக் கெழுதிய
ஒப்புகின் றனிரோ ?

அந்:— ஒப்புக் கொள்கிறேன்.

போர்:— அவ்விதமாமேல் இந்த யூதனும்
இரக்கமுள் ளவனா யிருந்திடல் வேண்டும்.

ஷைலா:— இருந்தவெவ் வகையிற் றாலென் னியம் [புதிர்

போர்:— இரக்கமென் பதுபல வந்தத் திலையல [தொன்
றன்று. விண் ணின்றிவ் வவனியின் மீதே
வீழ்ந்திடு மினிய மழைபோன் மேவும்.
அஃதிரு வகையா நன்மை பயிப்பது.
ஈவோர் பெற்றோ ரென்றிரு வருக்கும்
எக் காலத்தி லின்னல மீயும்.
உயர்வுறு திறலினு முயர்வுறு திறத்தது.
பட்டாபி ஷேகம் பெற்றநு பாலற்
கவனது கிரீட மதனினுஞ் சிறந்தது.
தாரிபன் செங்கோல் தானியி லவனது
அதிகா ரத்தி னடையாக் குறியே.
அனைத்து மாட்சியுஞ் சனங்கட் கச்சமும்
தந்து விளங்கும். இந்தத் தரணியில்
இறைவர்க் கருளுற சின்னமி துவதே.
இரக்கமோ இச்செங் கோற்குமேம் பட் [டதே.
இறைவர்க ளிதயமெ மாசனத் திருப்பதாம்.
ஈசன் பண்புகளைத் தெற்றவோர் குணம். இத்
தலைமையா யத்தைச் சமனப் படுத்திறல்
தானியே மற்றுமை சகதீச னதுபோன்
றொளிருமன்றே. ஆதலின் யூத !
நியாயம் பெறலே நின்வழக் காயினும்
நீதி யொன்றையே நிமலன் கைக்கொளின்
எவரும் பரகதி யடைவோம் இதைநினை.

பேசருங் கிருபையைப் பிரார்த்திக்கின்றனம்.
அப்பிரார்த்தனை நமெல்லாரும் இரக்கச்
செய்கை புரிந்திடப் படிப்பிக்குமாம்.
நின்றன் வழக்கின் நீதியுந் திருத்தத்
சமனப் படுத்திடத் தகவிவண் சாற்றினேன்.
அன்றியும் நீ நிதியை யடைந்தினின் றுதிர்த்தால்,
இவ்வெனிஸ் நகருள நியாயத்தின் கடுந்
தீர்ப்புத் தவறின்றிச் செலுத்தும் வணிகர்
தெதிர்த் தீர்ப்புச் செலுத் திடுமே யடைவது.
ஷைலா:— என்செயற் பயனென் மேலனே யடைக.
சட்டம் பத்திரத் தண்டம் நாடியே
இவையே யான் விரும்பத் தக்கவை யென்பேன்.
போர்:— தனதுக் கடனைச் செலுத்த வல்லனோ?
பஸா:— இசைவனேன். அவன்பொருட்டு விக்கியம் பத்துமடங்
கேனு மீந்து அத்தொகைக் கிரட்டிப்
பேன். அதுவே போதாதெனில் பத்து
மடங்கதுத் தருவன் கட்டுவேன் மன்னன்.
கையை யெனுமிதனைக் கயிற்றில் திணைப்
அமர்த்து மாறுக. அதுவும் அதுவே
யிலையெனில் சம்மதத் திருத்தியில் ஆதர
வன்னம் பெருந்தகை யிலையா நாட்டம்
தகர்த்து மொழிந்திடும். ஆனால் ஐயா! நும்
அதிகா ரத்தால் சட்ட மதனை
வளைத்து மொருமுறைக் காகிலும் ஒரு நன்கலம்
செயவோர் சிறுபிழை செய்திடில் கொன்னரசர்
கொடுமையை யியைபடக் குறைக்கவேண் டுகிறேன்.

போர்:— அதாகாது. வெனிஸில் உளவதி காரம்
ஏதும் நியமித்திய சட்ட மெதனையும்
மாற்றமுற் றன்றில், அஃதோர் மேற்கோள்
ஆக நிலைத்தே யதுவாக ரணமா
அளவில் பிழைகள் அரசாங் கத்தில்
அமைந்திடும். ஆதலி னதுகூடாதே.
ஷைலா:— இவர்வழக் குத்தீர்க் கிடவந்த டானியல்.
ஆ! ஆ! டானியல் ஆ! ஞான நீதிபதி
வாலிப நீதி மானே உமையான்
எத்துணை வியப்பேன்.
போர்:— இப்பத் திரத்தை
நன்குபார்த் தாய்ந்திட நல்கத் தயைபுரி.
ஷைலா:— உளதிதோ மிகக்கனம் முடையபெரி யீரே,
உளதிதோ.
போர்:— உன்பணத் தின்மும் மடங்குத்
தனமீதோ ஷைலாக் கேதந் திடுவரால்.
ஷைலாக்:— சத்தியம், சத்தியம், கடவுள்முன் சத்தியம்
செய்துளேன், பொய்ச்சத் தியத்தின லெய்தும்
பாவமென் னுத்துமா பற்றிட விடுவனோ?
ஆத்துமா பாவ மடைந்திட விடேனே!
விடேன்வெனிஸ் நகரெலா மெற்கிற் றிடினுமே.
போர்:— ஏன்? இப் பத்திர மிகுந்ததே யாகும்.
சட்டப் படியிந்த வுலோ யூதனும்
அவ்வணிகன் றன் னிதயத் தனக்கணித்
தாகவோர் ராத்தல் தசையை யறுத்துக்
கொள்ளுமோ துரிமை கொண்டவ னுவனால்.

இரக்கிட்டாய், மும்மடங் காம்பண மேற்றிட்டாய்.
பத்திரம் பரிகரித் திடவெற் கிசைத்திடாய்.
ஷைலா:—நீவிரோர் தக்க நியாயாதி பதியாத்
தோற்றுகிறீர். சட்டந் தெரிந்துளீர் நீரே.
உம்வியாக் கியானமு முசிதமா யுளதால்.
சட்டந் தனக்குத் தக்கவா தாரமாய்
நீரிருந் ததனாற் றீர்ப்பு நிகழ்த்திடீர்.
என்னாத் திடத்திடம் மனித னவிற்றும்
பலமிலை. பத்திரப் படிதான் பெறுவேன்.
அந்:—'தீர்மா னத்'தைச்செய நியாயாதி பதியைப்
பிரீதி மிகுந்துநான் பிரார்த்திக் கின்றேன்.
போர்:—அப்படி யாயி னவனது கத்திக்
கும்மார் பினைவெளிப் புலிக்கவேண்டும்.
ஷைலா:—ஓமாட் சிமையுள நியாயாதி பதியே!
ஓமிக வுசித வாலிப சிரேட்டரே ?
போர்:—வினவிற் பத்திர மதனிற் காணும்
அபராத மானது சட்டந் தனக்குறு
அதனா லாக்குதற் கமைந்துள தன்றே.
ஷைலா:—அதாமிக வுண்மை யாம். முறை கோடா
நீதிசேர் நியாயாதி பதியே, நீர்தாம்
தோற்றத் தனிலுந் தன்மை முதிர்க் கான்றவர்.
போர்:—ஆகவே உம்மார் பதனைத் திறந்திடுவீர்.
ஷைலா:—ஆமவன் மார்பம், அவ்வண மாவணம்
அறைகிடும், ஆ! ஐயரே யப்படி யன்றோ ?
"அவனித யத்திற் கதிப்பணித் தாய்"எனும்
இவையே பத்திரத் தெழுதிய மொழிகள்

போர்:—ஆமா. மனைபல் லவமே யுளவால்.
தசைக்கூறு நிறுக்கத் தராசதி யுளதோ ?
ஷைலா:—ஆயத்த மாக வைத்தது முடையேன்.
போர்:—இரத்தம் பாய்ந்தவ னிறந்து படாவணம்
அவன்புண் வாய்தனை யடைக்க ஷைலாக்கே!
மற்றுமுன் செலவிலோர் சத்திர வைத்தியன்
றனையா யத்தமாய்த் தருவித்து வைப்பாய்.
ஷைலா:—அவ்வண மாவணந் தனிலுரைத் துளதோ ?
போர்:—அவ்வண மில்லை, ஆயினு மென்னே?
அறமா வதற்கிதை செய்தி நன்மையாம்.
ஷைலா:—அதைநான் கண்டிலேன். அவணத் தனிலிலை.
போர்:—வணிக! நீ யெதேனும் வகுத்திடல் வேண்டுமோ?
அந்:—சிறிதே, சித்தமு முக்கமு மாய்நான்
உள்ளேன். பசானியோ உம்தன் கைகொடும்.
நீர்சுக மேபோய் வாரும், நண்பா
இதற்குட் பட்டே னெனத்துய ரொழிவீர்.
ஏனெனி லதிட்டமென் பாள்வழக் கத்திலும்
அதிக நேயமுளா ளாகிய் வியப்புத்
திருக்கின் றனளால். இன்னலுற் றவரைச்
செல்வ மிழந்தபிற் சீவனோ டிருத்தி
உட்குழி கண்ணு முதிர்நரை நுதலுமாய்த்
தரித்திரக் கிழவய தனைப்பார்த் திடல்
அவட்கெக் காலும் வழக்கமே யாகும்.
அத்தகைத் துன்ப மாகெடுந் தண்ட
னின்றெனை யவளு நீக்குகின் றனளால்.
உம்மனை மனைவிக் கெனினியற் றனையும்.

அந்தோனி யோமுடி வுறுமவற் கதையும்,
அந்நிலை புரைபடா மேவென விசையும்.
நானிறந் தொழிந்தபி னென்னலை நவில்வீர்.
கதைதீர் கழறிய பின்னர் பசானியோ
ஒருகா லத்திலோ ருண்மை நண்பனை
உடையரா யிருந்தா ரோவிலை யோவென
அவளே தனக்குள் ளறிவா ளாகுக.
இட்டனை இழந்து விடுகிறீ ரென்று
வியசனப் படுவீ ராகில் மற்றவனும்
உம்கட னிறுப்பதற் குளத்திற் றுன்புறான்,
ஏனெனில் யூத னாழமாய் மாத்திரம்
அறுத்திடு வானேல் லத்தக் கணமே
எனதுள விதயந் தன்னொடு மீவேன்.
பசா:—அந்தோனி யோவென் னுயிர்போ லருமையாம்
மனைவியை மணந்துளே னான், ஆயினுமுயிர்
தானு மென்னுடைத் தாரமு மெல்லா
உலகமும் முயிர் தனக் குமதிப் பிலவாம்.
எல்லா மிழந்திடு மேனுமை யீட்டற்
கதுமாத் திரமோ, அவைக ளனைத்தையும்
இப்பேய்க் குப்பலி யீந்திடு வேனே.
போர்:—அவ்வா றளிப்பதைக் கேட்கவும் மனைவி
உம்சமீ பத்தி லுற்றிடு வாளேல்
அதற்கா வுமக்கவள் வந்தன மளியாள்.
கிரா:—நான்மிக நயப்பா யுவக்குமோர்
இல்லா ளெனக்குள்ளாள். இக்கா யூதனைச்
சித்தந் திருப்பவோர் தெய்வந் தன்னைப்

பிரார்த்தனை புரிந்து பெற்றிடு வதற்கா!
இந்தவள் வானி லிருக்கவா னிழைவேன்.
நேரி:—அவள்முது கிற்பினீ ரறைந்ததாம் குற்றமின்
றன்றேற் றம்மில்வாழ் வமைதியற் றதுவாம்.
ஷைலா:—(திரும்பி) இவர்கள் கிறிஸ்தவக் கணவராம்,
[எனக்கோர்
புத்திரி யுளள். அவளுக்குப் புருடனாய்க்
கிறிஸ்தவ னொருவன் கிடைப்பதிற் பாரபஸ்
மரபி லெவனோ யாயினு மணமகன்
ஆயிடக் கடவ னென்பதென் னாசையே.
(வெளிப்படையாய்)
காலம் வீணே கழிக்கின் றனமியாம்.
'தீர்ப்பு'ச் செயவுமைப் பிரார்த்திக் கின்றேன்.
போர்:—இவ்வணி கன்றசை யினிலோ ரிராத்தல்
நினதே, நீதி பதியளிக் கின்றனர்,
சட்டமு மதனைத் தந்திடு மாலோ.
ஷைலா:—நீதி மிகவுடை நியாய திபதி!
போர்:—இத்தசை நீயவ னிதயந் தனிலிருந்
தறுத்திடல் வேண்டும், மற்றதனைச் சட்டம்
அளித்திடும், நியாயா திபதியு மளிப்பார்.
ஷைலா:—மிகுவிற் பன்முள நியாயா திபதியே!
(அந்தோனியோவை நோக்கி)
தீர்ப்பு, வாராய் சித்தஞ் செய்திடாய்.
போர்:—சிறிது தாழ்த்திடு. இவ்விது முன்னனை.
இம்முறி யுன்றனக் கிரத்த மணுவும்
ஈயாது. இராத் தசைதனை யென்கிறதே.
அதனாற் பத்திரப் படியே யடைந்திடாய்.

நிறைதிராத் தற்றசை நீபெற் றிடுதி.
அறு வன்றைய றுக் கிடைவதிற் கிறிஸ்தவ
உதிரத் துளியொரு திவலை சிந்திடில்
வெனிஸ்நகர் நியாய விதிப்படியே யுன்
ஸ்தாவர சங்கம சொத்துகள் வெனிஸின்
அரச னுக்கப ஹாரதமா யிடுமால்.

கிரா:—பழுதிலா நீதிபதி! பார், யூதனே!
நெறிகோடாத நியாயாதி பதியே!
உணர் வுடைய நியாயாதிபதியே!

ஷைலா.—சட்ட மதுகொலோ ?

போர்:— சட்டமீ தேபார்.
நியாயமதனையே நீவேட் டுடலால்.
நீவிரும் பிடற்கு மேற்படி நியாயம்
நீபெறுவாயென நிச்சய மாயிரு.

கிரா:—உணர் வுடைய நியாய துரந்தரன்;
நீகாண் யூத ! கற்ற நியாயவான்.

ஷைலா:—ஆயினிப் போழ்தன் னளித்ததை யடைவேன்.
பத்திரப் பணத்தின் மும்மடங் களித்திர்,
விடுக கிறிஸ்தவன்.

பசா:— இங்குள தப்பணம்.

போர்:—பொறும், பொறும், யூதன் முழுவதூட [நியாயமே
அடைவான், பொறுமின், அவசர மிலையால்
அபராதத் தன்றவிர்த் தவனே யம்பெறுன்.

கிரா:—ஓயூத நீயேகா நேர்நீதி பதியே!
நிரம்பக் கற்ற நியாய துரந்தர!

போர்:—ஆதலிற் றசைகொய வாயத் தஞ்செய்யாய்.
உதிரஞ் சிந்தேல், ஒரிராத் தற்றசை
அலாற்றிடு தேனு மதிகமாக் குறைவா
அறுத்திடேல். ஒரிராத் தற்றசைக் கதிகம்
அல்லது குறைவாக் காற்கழஞ் சாயினும்
அறுத்திடல் கூடாது. அந்த மட்டோ,
ஒருநோ மயிரி ளவே யாயினும்
துலாக்கோல் சாய்வுறிற் றஞ்சம் பாகினீ.
உன்றன் பொருளெலா மரசுக் குரியவாம்

கிரா:—ஓ இரண்டாம் டானியல், ஓ டானியல்.
வாராய் யூத கிறிஸ்தவத் தன்பிலாய்,
இப்போழ் ததநீ யென்கையிற் சிக்கினாய்.

போர்:—தாழ்த்தலென் யூத! அபரா தம்பெறுய்.

ஷைலா:—என்முதலெனக்கீந் தென்னைச்செல விடு [திர்.

பசா:—உனக்குச் சித்தமாய் வைத்துளேன், உன [திதோ.

போர்:—அவனதை யடைவுற நியாய சபையிலே
இசைந்திலன், நியாயமு முறியுமே பெறு [வன்.

கிரா:—ஓ டானியல், ஓ இரண்டாம் டானியல்
எனநா னின்னு மியம்பிடு கின்றேன்.
எனக்குநீ யிம்மொழி யியம்பிய வாற்றுல்
யூதனே யுனக்கு வந்தனம் புரிவனால்.

ஷைலா:—என்முதலேனும் யானடைக் கிடே [னோ?

போர்:—அபராதமிலால் வேறொன்று மடை [யாய்.

ஷைலா:—ஆயிற் பிசாசதன் றனி நன்மை
அவற்களித் திடுக. வீண்பேச் சொழிந்தா
இனியிவ் விடம்விட் டேகுவேனால்.

போர்:—தாமதி யூதனே! சட்டத்திற் றுன்பாகம்
வேறோர் பிடியுள! வெனிஸ்நகர் விதிகளில்
நேரா யேனு மேறிவா றேனும்
அயலா னொருவ னவ்வெனிஸ் நகர
வாசியி னுயிரை வவ்வுதல் வினைந்தெனில்
உன்னிறே றென்பதி தனிலோர் பாதி
எவனுயிர்க் கவனிட நினைத்தனன் னினையோ
அவனடைந் திடுவன். மற்றையோர் பாதி
அரசன் சொந்தப் பொக்கச மடையும்.
அவனுயி ரோவர சாக்கினைக் குள்ளாய்ப்
பிறரெவ ராயும் பேசலா காதாய்
மன்னவ னருளால் வாழ்தற் குரியதாம்.
நீயந் நிலையி னின்றனை காண்டி.
எனெனிற் பிரதி வாதியின் னுயிரைக்
கவர்ந்திட நேரா வழியே னன்றியும்
செய்தனை தந்திர மெனவொளிச் செயலால்
தெரிந்திடும். அதனால் யான்முன் செப்பிய
ஆபத் திலையீ தகப்பட் டுள்ளாய்.
ஆதலி னடிபணிந் திரக்க நீயுன்
இறைவனுற் கிரகத்தினை யடிகளில் வீழ்வாய்.

கிரா:—நான்ற கொலைவை தனைந் தேயென்று
[வேண்டிடு.

ஆயினு முன்சொத் தனைத்து மாசிற்
கபாரதமாகி யடைந்துவிட் டதனால்
நாணும் நான் விலையுமுன் பாலிலை யாதலால்
பாந்திடன் செலவினி லாக்கப் படுவாய்.

டியூக்:—நங்குண பேதநீ நன்குணர்ந் திடுவான்
கேட்டிடு முன்னுனைக் குயிரளிப் பேன்.
ஆத்தியிற் பாதி அந்தோனியோவதாம்.
மற்றைய பாதி மன்னற் குரியது.
அதிலப ராத மகல்வுற நின்றனைத்
தாழ்ந்திடை முனைவேல் தருவோம் நினக்கே.

போர்:—அரசிற் காமது, அந்தோனியோ வுக்கலீ?

ஷைலா:—இலை, என் னுயிரையும் மனையையுங் கொ
[ள்ளுமின்.
அனாதமென் வீட்டினைத் தாங்கும் ஆதாரத்தைத்
தாங்கிடுந் தம்பந் தன்னைய தற்றிடுவீர்
இவ்விதமெனவே பெறுவேன். யானுயிர் வாழுந் திடுமவைத்
தீக்கிடி லென்னுயிர் நீக்குவீ ரன்றே.

போர்:—அந்தோனியோ! அவற் கியாதருள் புரிவீர்?

கிரா:—தூக்கிடுக் கயிறுதான் தம்பா கொடுப்பதே.
சற்றேப் பிரியாய் வேறொன் றிலையே.
அன்றிபோன் றனிக்கல் தெய்வம் பொருந்தே.

அந்:—அவனுள சொத்தினிற் பாதி பாகம்
அபரா தத்தை யகற்றிட விக்கர்
அரசும் பிரபுவு மீனித்தலை போரும்
பரிவுசெய்திடுக. மறுபாதியை நான்
உபயோ கஞ்செய வன்னுப் புடனேல்
சென்றுன் முன்னவன் றனையடைத் திருடிய

அவன்மக ளுக்கிவன் அளித்திடப் பின்னர்
தந்திடப் பிரிய மெனக்குண் டாகும்.
இன்னும் இரண்டு சரிப்படுத் துதல்
வேண்டுமால், இந்த வெகுமதி தனக்கா
அவனிக் கணமே கிறிஸ்தவ னாதல்
ஒன்று, மற்றைய தவனிறந் தவ்விடத்
திருக்கு மவனிடத் துள்ளன வெல்லாம்
அவன்மரு கன்லா ரென்ஸோ வவன்மக
ளுக்கே யிவனா தன்கொடைச் சாசனம்
எழுதிவைப் பதுவே.

தகர்த்:— இதைச்செய லவசிய மவனால்,
இல்லையே லுனக்கு நல்கிய சந்தமுன்
இதைத்தமன் னிப்பைப் பகிஷ்கரித் திடுவோம்.

அநீ:—உனக்கிது திருப்தியே யூதனே யுரையாய்.

ஷைலா:—திருப்தியே.

போர்:— இலேககா நன்கொடைப் பத்திரம்
எழுதுவாய்.

ஷைலா:— இவண்விட் டேகுற வெனக்கு
விடைபெறப் பாக்கியம் வேண்டுவன். எனக்குநோய்
அணுகிய தாலிதான் போயபின் பத்திரம்
அனுப்புமின். அதிலென் கைபொழுத் தமைப்பேன்.

தகர்த்:—போ. போ. ஆனா லதனைப்புரிந்திடாய்.

கிரா:—ஞானஸ் நானஞ் செய்வதி லுனக்கு
ஞானத் தந்தை யர்பதி யிருவர். நான்
நியாயாதி பதியா யிருந்திடி லின்னா
ரைவர் ஞானப் பெட்டிக் கனாமற்

தூக்கு மரத்துக் குக்கொண் டேக
இன்னும் பதின்மரை யுடையனா யிருப்பாய்.

(ஷைலாக் போதல்.)

தகர்த்:—ஐயா என்னுடன் புசிக்க வென்னகம்
வர நேர்வுமை வரக்கேட் கின்றேன்.

போர்:—தாழ்வொடு தங்கள் கனத்தை மன்னிப்பு
நான்கேட் கின்றேன். பதுவா நகர்க்கின்
றிராத்திரி யேநான் போக வேண்டுமால்
உடனே புறப்பட அவசிய மாகும்.

தகர்த்:—அவகா சமுமக்கிலா மையால் விசனமே.
அந்தோனி யோஇந் நவமகற்குத் தகும்
பரிசளித் திடும் கடப் பாடு டையைநீ
எனியநீ யெனவெண் ணுகின் றேன்.

(தகர்த்தனும் அவன் பரிசனங்களும் போதல்.)

பஸா:—மாட்சிமை மிகுநல் லாரேயென் றனை
இட்டது யர்துயர் தன்னை நானுமது
விவேகந் தன்னால் வேகமே மெய்து
நண்பனுந் தப்பினேம். அதற்கா யூதன்
மூவா யிரப்பொற் காசு முழுவது முடன்
உபசார சகிதமா யுற்ற சிரமத்
தனக்குமா றாகத் தருவ முவந்தே.

அநீ:—அதுவே யன்றியே நாமென்று மன்பினாலும்
ஊழியர் தனிலு முமக்காட் பட்டுளோம்.

போர்:—திருத்தி யுடையோன் செல்வ மடைந்தோன்.
நீக்கினின் றமை நிவர்த்தித்த திருப்தியே.
அதனாற் பரிசடைந் தவனே யானேன்.
எந்த வினுமென் மனமருப வாசைப்

பட்ட தேயிலை, இனிநாம் பார்த்திடும்
அமயத் தெனைநீர் அறிய வேண்டுவல்.
வாழிய நீவிர்; நான் போய்வரு கின்றேன்
பசா:—நேயமுள் ளவரே! நிர்ப்பந்த மாவுமை
இனுநா னிணங்கச் செய்திட வேண்டுமால்.
கட்டண மாக வன்றுகா ணிக்கையாய்
எம்மிடத் தொன்றுஞா பகப்பொரு ளேற்பீர்.
இருவர மீந்திட வுமைப்பிரார்த் திக்கேன்,
எனக்கில்லெ னுரைமையும், மன்னிப் பருளுமாம்.
போர்:—அதிக நெருக்கஞ் செய்கிறீ ராதலால்
இணங்குவேன்,
(அந்தோனியோவை நோக்கி)
எற்குநுங் கையுறை தருவீர்.
அதைநா னும்பொருட் டாக வணிகுவேன்.
(பசானியோவைப் பார்த்து)
உமதன் பினுக்கா வுமது கைபுனைநும்
இக்கணை யாழியை யேற்பன்யானே.
உமது கையைநீ ருள்ளிழுக் கற்க.
மேலொன் றேனுநா னொன்றும், அன்பினால்
எனக்கீ தில்லையெனநீர் மறுக்கீர்.
பசா:—ஐயோ! நன்மைசே ரையவிக் கணை
யாழி யற்பமே. இதையுமக் களித்தான்
நியானவ மான மெய்திட விசையேன்.
போர்:—இதனைத் தவிரமற் றெதனையும் பெறச்சிடேன்.
இதன்மிசை மனமுள தென்றியான் கூறுவேன்.
பசா:—இதனது விலையினும் ஏற்றமாம் விசேடம்
உளதிது. வெனிஸில் விலைமிக வுயர்ந்த

அந்த வேர்கணை யாழியை யளிப்பேன்.
அதைப்பறை சாற்றி யறிவேன். இதற்கு
மாத்திர மெனைமன் னிக்கிட வேண்டுவேன்.
போர்:—அளிக்கநீ ரையா, அளிப்பதாய்ப் பகர்தலில்
உதாரர் நீரே. உமைநா னிரக்க
முன்னர்ச் செய்தீர், பின்னர் இரவலர்க்
களித்திடும் விடையு மளிக்கின் றீரென
நானினைக் கின்றேன்.
பசா:— நன்மைசே ரையனே
இக்கணை யாழியெற் கீந்தவென் மனைவி
அணிந்தளித் திட்டனள் றதனைநான் விற்றல்
ஈதலிழத் தலெதுவுஞ் சத்தியம்
பண்ணிடத் தேற்றனள்.
போர்:— தாங்கள் பதினை
ஒழிக்க மனிதருக் கிஃதோ ருபாயம். உம்
பத்தினி பயித்தியக் காரியா யிலாமல்
இம்மோ திரம்பெற வென்றனைத் தகுதியுளேன்
எனவறி வாளேல் எனக்கு நீரிதை
ஈவதற் காகவெக் காலத் திலும்பகை
சாதியாள். செல்கிறேன், சாலவாழ் வுறுகநீர்.
(போர்ஷியாவும் நெரிசாவும் போதல்.)
அந்:—எனது பசானியோப் பிரபுவே யிவருக்
கம்மோ திரமீந் திடும்; எனதன் புமவர்
தகுதியு மொத்தென் னையல் சட்டமோ
தன்னினு மேலா மதிக்கத் தகுமே.
பசா:—ஏகுதிர் கிராஷியானோ, ஏகியவர்க்கிது
அவசர மாகமற் றவர்தமை யணுகு.

யோதிர மகிழ்த்துநம் மால்முடி யும்மேல்
அவரை அந்தோனியோ வகத்தொண் டடினவீர்.
போதிர் மிக்க விரைவுடன் போதிர்.

(கிராஷியானோ போதல்.)

வருதிர், திரு மாநா மல்லையின்
இக்கண மேருவோம், வைகறை மதனில்
காம்பெல் மன்டு நகரத் தனக்கு
வல்லிமிற் செல்வோம், வருதிர் அந்தோனியோ.

(எல்லாரும் போதல்.)

இரண்டாங்களம்.

அதே இடம் ஒருவீதி.

(போர்ஷியாவும் நெரிசாவும் வருதல்.)

போர்:—யூதன் மாளிகை விசாரிப் பத்திரம்
தந்து கைச்சாத் திடவரச் செய்தி.
இற்றைநாள் இரவே யேகிடம் விட்டை
நங்கள் விருக்கோர் நாள்முன் னறுகுவோம்.
இம்முடி லாரென் சோவுக் கினியதாம்.

(கிராஷியானோ வருதல்.)

கிரா:—நல்முடை யையர உமையடைத் தருநலம்.
என்றன் பஸ்ஸானியோப் பிரபு இந்த
மோதிர மதனை முன்னினை நன்றாய்
ஆலோசித் தும்மக் கனுப்பினர். அன்றியும்
அவ்விருந் துண்ண உம்மை யழைத்தனர்.

போர்:—அதுமுடி யாதே. அதினைக் களித்துடன்
அவர்களை யாமிவை யங்கீகரித்தேன்.
இதனை யவருக் கியம்பிட வேண்டினேன்.
அன்றியும் யூதனகத்தினை யென்றன்
இளைஞனுக் காட்டுதிர்.

கிரா:— இயற்று வேனதனை.

நெரி:—(போர்ஷியா பக்கம் திரும்பி)
உம்முடன் நேர்மொழி யுரைத்திட வேண்டும்
என்கண வர்த்திடும் மோதிரம் பெறுவேன்
ஒன்றவிட் டகற்றிலாதெனக் களித்த
அதனியான் அவ்வா றளிப்பிரா பார்ப்போம்.

போர்:—(நெரிசா பக்கமாகத் திரும்பி)
அடைக்கிட வாருதி அழகிச் சயமே.
அவர்கள் மோதிர மாடவர்க் களித்ததைக்
கூறிடு சத்தியங் கழுவை ராமல்.
அவரிரு மதிகமா வைகவரா மிட்டாம்
வைரம்மை காண மடைவுறப் புரிவோம்.
(வெளிப்படையாய்)
போ இனிவாய், போதொன் றக்கும்
இடமி மறிவாய்.
நெரி:— இனிய மேமே!
வருதிர். அம் மாளிகைக்குக் காட்டுவீரோ?
(எல்லாரும்போகல்.)

ஐந்தாம் அங்கம்.

முதற்களம்.

இடம்:—பெல்மண்டு, போர்ஷியா வீட்டின் முன்றில்.
[லாரென்சோவும், ஜெசிக்காவும் வருதல்.]

லாரே:—சந்திரன் இன்னே தவழிளிர் கின்றனன்.
இத்தகை மைத்தா யிராத்திரி யதனில்
இத்தகை யிரவினில் இனிய மாருதம்
விருக்கள் கிளைமேல் முத்த மிட்டிட
அவைகள் சிறிதும் சத்தம் செய்யா
இத்தகைத் தாய இரவினிற் போலும்
டிராய்நகர் மதில்மேல் டிராய்லஸ் ஏறி
கிரேக்கர் கூடா ரங்களுள் கிரெசிட்
தனில் இருந்தனள் அதனை நோக்கி
நெட்டுயிர்ப் பெறிந்தான் எனநினைக் கின்றேன்.
ஜெசி:—இத்தகைத் தாய இரவினிற் போலும்
திஸ்பி பனிமேல் திருவாய்த் தாண்டிப்
படங்க ளிழலையும் படங்கத்தா னுமுன்
காணா உக்கலங்கியத் தோடினளாமே.
லாரே:—இத்தகை யிரவில் டைடோ தனது
கைதனில் 'வில்லோ'க் கிளைகளை யுடையளாய்க்
கொந்தளிப் புறுங்கடற் கரைதனி னின்றுதன்
காதலன் தன்னைக் கார்த்தேஜ் நகர்க்கு
மீளஅக் கிளைகளை வீசிநின் றனளால்

ஜெசி:—இத்தகை யிரவில் மேடியா வயோதிக
ஈஸனை யின்பியா ரூக்கிடு மந்திரப்
பூண்டுகள் பொறுக்கிச் சேர்த்தன ளாமால்.
லாரே:—இத்தகை யிரவிற் செல்வனும் யூதன்
இடம்விட் டோடினள் ஜெசிக்காகரந்தே,
வெனிஸ்நகர் விட்டுப் பெல்மண்டி னுக்குப்
பணம்மிகச் செலவுசெய் பவனுட னோடினள்.
ஜெசி:—இத்தகை யிரவிற் காளைலா ரென்சோ
உண்மைக் கிளிதுமே மென்று மாக விசுவா
உண்மை மொழிகள் பற்பல வுரைத்தாங்
கவடன் றென்னைக் கவர்ந்திசெய் தலைவி
பிகவிழை ஞற்றனர் மெய்ம்மொழி பகர்ந்தார்.
லாரே:—இத்தகை யிரவில் வெற்றிக்கேசர் ஜெசிக்கா
துர்க்குண மென்னுடைக் காதலை யொப்ப
அவன்கா தலன்மேல் வைத்துத் தினைவால்,
அவனது மன்னிப்பன், விந்தை யுறக்கே.
ஜெசி:—யானேயோ வெற்றிலை பேசியா ளுமமை
எந்தன் 'இரவேர்' இப்படி வென்றிடுவேன்;
ஆனாற் செவிகொடும், ஓராடவன் நடைச்
சத்தமென் செவியிற் சார்கரு கின்றதே.
(ஸ்டெபானோ வருதல்)
லாரே:—இத்தி தனிமையின் விரைவுடன் வருவது யார்?
ஸ்டீ:—ஓர் நண்பன்.
லாரே:— ஓர் நண்பன், எந்நண்பன்?
நண்ப! நின் னாமந் தனைத்தெரி வைசெய்,
ஸ்டீ:—என்று பெயர்ஸ்டெ பானோ. என்றன்
எஜமானி யிங்கே பெல்மண்டினுக்குப்

பொழுது புலர்ந்திடு முன்னரப் போதுவள்
எனும் வாசகம் யான் கொணர்ந்தேன். இன்பம்
விளைக்கும் வதுவைகாள் விழையுமிப் புனிதச்
சிலுவைகள் பக்கலிற் றிரிதரு கின்றனள்.
இவற்றை முழங்கால் படியிட் டேத்துவள்.
லாரே:—அவளுடன் வருவோர் யார்வரு கின்றனர்?
ஸ்டீ:—தாயவோர் துறவியுந் தோழியு மாம். என்
எஜமானன் திரும்பினனோ வினவுயும்.
லாரே:—அவர்வர வில்லையால், அவரிடத் தேயிருந்
தேதுந் தெரிதர வில்லை. ஜெசிக்கா
தயைசெய், உள்ளே சார்ந்திம் மனையின்
எஜமானியின்வர வேற்றுப சரித்தற்
காவன யாவு மாயத்தஞ் செய்வாம்.
(லான்சிலட் வருதல்.)
லான்:—'சொலா' 'சொலா' ஓ, ஆ, ஓ 'சொலா'
'சொலா'
லாரே:—கூப்பிடுகின்றது யார்?
லான்:—'சொலா' லாரென்சோ எஜமானையும் லாரென்சோ
எஜமானியையும் பார்த்தீரா 'சொலா' சொலா'
லாரே:—கூக்குரல் போடுகிறதை நிறுத்து, இதோ
லான்:—'சொலா' எங்கே! எங்கே!!
லாரே:—இங்கே.
லான்:—அநேக நற்செய்திகளை உடையவனும் ஓர்
தூதன் எஜமானிடத்திலிருந்து வந்திருக்கின்
றான் என்று அவரிடம்சொல்லும். நாளைக்கா
லைக்குள் என் எஜமான் இங்கே வருவார்.
(போதல்)

லாரே:—இன்னுயி ரோசா யில்லத்து ளேகி
ஆங்கே யவர்கள் வரவெதிர் பார்ப்போம்:
ஆயினு மென்னும், அகத்துட்சேர்வதேன்,
இல்லினுட் சென்றெஜ மானி யறிகினள்
எனத்தகையசெய்துரை யிஷ்டட லடவானே,
உடையவாத் தியத்தைக் கொணர்மின்று வெளியே.

(ஸ்டீவானோ போதல்.)

இக்கரை தன்னிற் றிங்களி னொளியே
இன்பமாகத் துயில்கின் றது. இவண்
நாமிவ ணிருந்து நமது செவிகளில்
சங்கீ தத்தொனி சார்ந்திடப் பெறுவோம்.
இனியநிச் சத்தமும் இந்த இரவும்
ஆனந்தமான மதுரவாய்ந் தவைகள்.
இருக்குக, ஜெசிக்கா எவ்வாறாம் வான்றலம்
அமிர்தியு பொற்றட் டங்க ளழுத்திய
தென்ன இலங்கும், காண்டிநீ, காணுறும்
அதிகச் சிறிதா யவையுள மண்டிலம்
தன்னியக் கதியிற் சுழலுங் காலுடைக்
கர்ந்து வருக்கெதிர் கானம் பாடும்
தேவ தூதர்கள் இவனைப் பாடுமால்.
அத்தகை யின்னிசை நித்தியமா மாவியில்
உளதாயினு மிம்மட் போர்வையுடை
சரீர மதாயிழி வுற்றழு டியதால்
அவ்விசை கேட்கலா காதவராயினோம்.

(வாத்தியக்காரர்கள் வருதல்)

ஆ-ஆ, வம்மின், டயானை யெவ்வியோர்
கீதந் தன்னாற் றுயிலெழ் கிடுமின்.

நல்லிய வினிய காத முடனெக
நாயகி காதைத் துலைத்திட வாத்திய
முழக்குடனவளை யகத்திற் சேர்மின்.

(வாத்தியம் முழங்கல்)

ஜெசி:—இன்னிசை கேட்கும்பொழு தோர்நான் மகிழ்ந்
திலேன்.

லாரே:—உன்னுயி ராவிடத் தொன்றலே காரணம்.
இரத்தங் கொதிக்கும் அதிக்கு மேலால்
அலைக்குழு மிக்க கனிக்கொடு துள்ளி
துடுமுல்லை சமுனடைய அட்டகன்
நாவிக் கூட்டம் கைப்புது காக
குதிரைக் குட்டிக் கூட்டமாகிய
இவற்றைக் குறித்திடு. இராகமொவிக் காகக்
கோதை கேட்க நேரிடு மாயினும்
வகையாக் குதிரையின் னிசை வசியாற்
தம்முடைக் கொடிய பார்வை மாற்றிப்
பார்வைய தாகியா மிருதுவா யமாம்.
ஆதலின் ஆர்வியஸ் விருக்கங் கல்லையும்
கற்களின் வெள்ளம் கடலையும் தன்னுடை
இசையா லிழுத்தா னெனவிசைத் தனர்கவி.
வினையிற் காண் டியற்றையை மாற்றுக்
தன்மைமிகா வன்மையுஞ் சவுமுடைய
இப்பியப் பொருள்க ளில்லையென் றெணிநும்.
சங்கீத ஞானஞ் சற்றுமில் லாயும்
இன்னிய விசையா லினிதுடை தனையும்
இராஜ துரோகம் சற்பினா பழியினை
தமக்குக் தகுதியானவன் குனே.

அவன்றன் ஞவிபி னியக்க மிரவுபோல்,
மனோகர மின்மையும் அவன்மன விகாரமும்
இமைக்கு எரிபஸ்போ லிருண்மை யாகும்;
அத்தகை யாடவன் றனைநம் பற்க.
கானந் தனைநீ கவனித் திடுதியே.

(போர்ஷியாவும் நேரிசாவும் தூரத்தில் வருதல்)

போர்:—பார்க்கா னுழயமல் வெளிச்ச மற்றென்றன்
அகத்தி லின்னாதே. அச்சிறு வர்த்தியின்
சுடர்எத் தூரந் துலங்கிடும், அத்துனை
நற்செயல் றீயவிற் ஞாலத் தொளிருமே.

நேரி:—மதியொளிர் தருங்கால் வர்த்தியைக் கண்டிலோம்.

போர்:—அதுபோற் பேரொளி சிற்றொளி யதனை
மழுங்கச் செய்திடும். மன்னவ னாகும்
வரைய மிராசப் பிரதிநிதி மன்னன்
போலப் பொலிவன், புரவல னுற்றுழி
உன்னுட் டோடையுவரிப் கொழிதல்போல்
அவன்சிறப் பொழியும். வாத்திய மதுகேள்.

நேரி:—மாதே! அதுநின் மனைவாத் தியமே.

போர்:—அயலாச்சார்ந்தன அவைகளன் றி
ஏதுவும் நன்றல எனத்தெரி கின்றது.
அதுபகற் காலத் திலுமிக வதிக
இனிமையா லொலிக்கின் றதுவென வென்
றுவல்.

நேரி:—அமைதியே யத்தகைக் குணமதை னுக்காந்
தளித்திடு மம்மணி!

போர்:— கவனியா திருப்பிற்
காப்புன்போ லினிதாக் காகமும் பாடிடும்.

எஃவிபி லின்பமாப் பாடிடும் புறவை
வர்ன்கோ ழிகளெலாம் வாய்திறந் தாற்றும்
பகலிற் பாடிடிற் சிறுபற வையினும்
இனிய கீத மிசைப்பதா வென்னாப்
படாதென நினைக்கிறேன். பரிவெத் தனையோ
பொருள்க ளிடத்திறற் புகழ்க்கிடத் தக்க
மதிப்பு முண்மைப் பூர்த்தியு மல்குபால்.
வாத்தியம்நிறுத்துக. மதியம் எண்டிமியன்
றன்னுட னித்திரை சார்தரு மதனால்
எழுப்பிடப் பிரிய மிலதாற் சற்றும்.

(வாத்தியம் நிற்க)

லாரே:—அஃது போர்ஷியா வதுகுர லேனேல்
யான்சா லவுமே மாற்றவ றுவேன்.

போர்:—குருடன் குக்கிலைக் குணமிலாத் தொனியால்
அறிதல் போன்றவனு மென்னை யறிந்தனன்.

லாரே:—அன்புடையம்மணி! அகத்துள் வருக.

போர்:—எமது கணவர்க ளின்பமாழ் விற்காத்
தெய்வந் தொழுதேம். அப்பிரார்த் தனையால்
அதுமிக க்ஷேமமாய் முடியு மென்றியாம்
அத்திக் குறும், அவர் திரும்பி வந்தனரோ?

லாரே:—இன்னு மவர்வர விலையம்மணி!
ஆயினு மவர்வர வறிவிக் கிடுவான்
ஒருதூ தன்முன் வந்துளைத் தனனால்.

போர்:—நேரிசா, உள்நீ பணி யவர்க்கு
என்றன் வேலைக் காரர்க ளெவரும்
இவ்விட மிகந்ததாம் போக்கத் தெரிவியா.

இருக்கக் கட்டளை யிடுதி. லாரென்சோ
பேசலீர் நீர், ஜெசிக்கா நீ பேசலீர்.

(எக்காளத்தொனி கேட்க)

லாரே:—அணுகினர் தமது காதலர், அவர்தம்
எக்காளத்தொனி யெம்செவி யேற்றதால்.
அம்ம! கோட் சொல்வோர் யாமலே மஞ்சலீர்.

போர்:—இப்போ திவ்விர வெல்மழுங் கியபகல்
ஆனதென் றெண்ணுவல். அன்னது சற்றே
விளர்த்ததாய்த் தோற்றம் வெயிலோனொளிப் புறப்
பகலாம் படியதோர் பகலே போலும்.

(பசானியோ அந்தோனியோ கிராஷியானோ
அவர்கள் பரிசனங்களோடு வருதல்)

பசா:—பரிதி சரத்தயிற் பட்டிடு வாயேல்
பூமியின் மற்றைய புறத்தவர் தம்மொடு
நமக்கும் பகலாய் நண்ணிடு மாமே.

போர்:—இன்னகை யுமக்கியா னீவ லாருக.
அன்றியென் னுகர்கனைக் காளா; காதியான்
மன்னுக, அத்தகை மனைவி கொழுநனுக்
கின்னல் விளைப்பாள். என்றும் பசானியோ
அத்தகை யடையா னுவரா தழுமே.
எனினும் யாவும் இறைசெய லாகுக.
வாழி துரை, உம் நல்வர வேற்கிறேன்.

பசா:—அம்மே வந்தனம். என்னுடைய யன்பரா
உபசரித் திடுதி; உரைப்பருங் கடப்பா
டிவர்கிறத் தானேன். இவர் அந்தோனியோ.

போர்:—இத்தகை யவர்க்குநீ எல்லாத் திறத்திலும்
கடப்பா டேற்றல் கடமை யன்றோ.

எதினாலி லவருமக் காக சிறைபடவும்
கடம்பட் டனரெனக் கேட்டனை யானே.

அந்:—'விடுதலை' யடைந்தேன், இனி மிகப் பேச
வேண்டுவ தில்லையால்

போர்:— ஐய, எம் வீட்டில்
உமையிருந் திரார யோம்பு கின்றோம்.
வார்த்தையா லன்றி மற்றைய வகையால்
அதனைத் தெரித்திடல் வேண்டியதாகலின்
வாசக மாத்திர வந்தனஞ் சுருக்குவேன்.

(கிராஷியானோவும் நெரிசாவும்
ஒருபுறம் ஒதுங்கிப் பேசுதல்)

கிரா:—என்மேற் குற்றம் ஏற்றுகின் றனையேன்?
ஆங்குள சந்திரன் மீதுக யானே
அறைகின் றேன்யான் உண்மையா யதனை
நடுவர் லிலேகன் றனக்கே நல்கினன்.
காதலி, அதற்கு நீயோ கவலைதால்,
அதனை யடைந்தோன் மாண்டு போயிருக்க
வேண்டுமென் றுதான் விரும்புகின்றேன்.

போர்:—ஆ, ஆ! அதற்குள் சண்டையோ? என்ன காரணம்?

கிரா:—கருவிரல் சிறிதோர் கணையாழியில் எனையும்
கவியினர் சிலர் "என்னைக் காதலி நீ,
விலகிடா திரு" எனுமக் கியமுடை—
ஒருமொழி யமைய, ஓதப் போதும்
அணுநிலை யக் கணிக்குமவ் வாழியே.

நெரி:—என், வாக்கியம், விலை, யிவற்றைக் குறித்து நீர்
அறைவதென் பணியோ! அதனை யுமக்கு நான்

சந்தவைக் கால் மிதித்திடவும்
அதனைத் தரித்துநீ இருப்பதாகவும்
உடறுகல் வளையமே ஆய்முடி ஊறவும்
இருந்திடல் வேண்டுமெனவுரைத் தந்தியம்
இயபிரிஷ், ஈனக்கா விலைவிழுவம்
ஆகாத் தெரியே நன்றிட்ட வாளே
அதனை யாளு மதித்தாரி மேவித்த
அவத்து ஊலக்கக்கேல்லவிலே தடமாள்.
நடுவ ஊரிக்கைகள் நாள்க்கு நல்கினிரோ ?
இல், நான் சொல்லுத்து இனைனமே கான் அ
அதனை யளுக்கு மிவக்கல் நவது
முகத்தி இமோபம முகிழ்த்திட விலேயே.

கிரா:—ஆடவ ஒருவனே மிருப்பதனை வதுவாம.

நெரி:—ஆமாம் அதினை யாடல் ஒவிலனவ்.

கிரா:—இக்கை பாரோ, ஐ நிவலுக் கீதிதன்.
நீன்னிறு செழுமை வல்லன்பன், நீதி
பதியே மேகதன் பசபசப்புணட்ட இறானென்,
கூலியா வதனை பிரந்தனன், கொடுக்க
மறுத்திட வென்மனம் வெயியின் இழுதிந்தது.

போர்:—உம்பிடத் தெரியா குறைத்திட்டல் வேண்டும்.
உடதன் விரலிருணையைசேர் மொழிக
நுடவே சேர்த்திடமும் விரற்றனையில்
ஆணையாம் ஆணி கொண்டிய கன்றுத்தும்
இன்பமே தருமுதம் சம்சார வாழ்ந்த
இத்துனே பிலேரி ஊர்ஜினது பிழையே.
என்றன் காதலர் சமுதியோன் நீதாக்

கதைமெய்க் காலமு மகளா இருக்க-
ஆனே வாங்கினேன். அவிதோ வேராக்.
பாருலகியும் பூண்மைப் பணமெலாம்
கொடுக்கிறு மதனைக் கொடாஅர், தன்விரல்
நின்றதை நீக்கா மொனகா னவற்காச்
சக்தியர் இன்னமாச் சாற்றுவ வாமேனன்.
உண்மையாக் கிராஷியானேடும் மனைவிக்
காற்றவ பன்பில் அல்ல வெரித்தனிர்;
யாரென்றறிக்குப் பிடித்தவ னாவேன்.

பசா:— (ஒருபக்கமாகத் திரும்பி)
என்ற னிடக்கர மதனைத் துணித்தே
அழிவைக் காத்து மதனை யிழந்தேன்,
எனச்சாத் தியக்கெய் இதுவ வுபாயமே.

கிரா:—அழி பிரந்திடு நீதிபதிக்கதை
சந்தன் றென்றன் வேண்டல் பாரானியே.
அவனதை பனடநற் குண்ணமாதி னாருகனே.
எழுதிச் சிறிது இரமெடுக்க
தீவனிலே ககேதும் அப்படி பண்பின்
இரக்காவினென்பால். எஜமான் வேலைக்
காரவெனன் இருவருக் கிணையாழிகளலால்
மற்றைப் பெறுவும் வாங்கு மனமிலா.

போர்:—எக்கதின் ஒழிமோ? என்மீ மாமோ,
காணரித் ததன்றெனு சாப்பு கின்றனன்.

பசா:—செய்பிழை பொறுத்தருள்வாய் சேப்பேன்.
[மறைப்பேனல்.
அழகிய வெண்ணை அக்குவி யாழி

இல்லெனத் தலைவன் கூறுதி. அதுவே காலைக் கிட்டுமே.

போர்:—இவ்வளவேயும் பொய்யா மிதயம்
உண்மை சற்று முள்ளதன்றே.
ஆழியைக் கண்ணுறு மளவுமுங்கள்
இல்லா ளாகே னிதுசத் தியமே.

நெரி:—என்னுடை யாழியை யான்காணளவும்
யானு முமக்குடை யில்லா ளாகேன்.

பஸா:—ஆழி யெவற்களித் தேனென் றறிதியேல்,
ஆழி யெவன்பொருட் டளித்த தறிதியேல்,
ஆழி யெதற்கா வளித்தது மறிந்து
ஆழியலா தொன்று மேற்காமை யறிந்து
ஆழியைச் சற்று மனமிலா தளித்ததும்,
அறிந்தா லெனினீ யடைந்துள தாய
கோபக் கொடுமையைக் குறைத்திடுவாயே.

போர்:—ஆழியின் தன்மை யறிதிரா யினையும்
ஆழி யளித்தவள் நீர்அடை பெருமையும்
ஆழியின் மதிப்பு மறிதிரே யாயின்
ஆழியை யகற்றி இருந்திருப்பீர். அவ்
ஆழியை யகற்றி இருக்க நீரும்
சற்றே யாவலாய்த் தடைசெய் திருப்பிரேல்.
புனிதப் பொருளாப் போற்றிப் பிணைத்ததைக்
கேட்டெனை நெருக்கி நிர்ப்பந்தஞ் செய்திட
வன்றான் விவேக மில்லா தவனே.
யானம் பத்தக்க நியாயமென நேரிசா
கற்றுக் கானே. ஆழியை ஒரு கன்னிகை
அடைந்தனள், இதுமெய் யன்றெனிற் சாவேன்:

பஸா:—இல்லையம் மணி! என் கவுரவ மென்றுயிர்
தம்மீ தாணை, ஓர் தையல் பெற் றிலளது.
மூவா யிரம் 'டக்கற்றை' மேவாது போகியம்
இரந்தவோர் சட்டப் பண்டித ரேற்றனர்.
என்றனைப் பிரிய விட்டவ னுயிர்தனை
இரட்சித் தவரே யாயினு மிலைஎன
மறுத்தாங் கவர்மன் மேனியா குலத்துடன்
வருமா விட்டேன், இன்றுணை மகளே.
யான்சொலத் தக்க தெவ்வகோ லோ, என்மனம்
நிர்ப்பந் தப்படா நிற்கவே மரித்ததைச்
சென்றவ ரிடமே செலுத்திச் சேர்த்தேன்.
நாமவர் திறத்து நாக ரிகமா
நடந்தே மிலையெனு மென்னானு நாணமும்
தமியே னென்றனைத் தாக்கின. அன்றியும்
செய்ந்நன்றி கோறலாந் தீயமா சென்னை
எய்திட வென்கவு ரவமினைக் கிடவிலை.
இதுபொறுத் தருள்க, என்றுணை மகளே!
விண்மீ னெயில் விளக்குகள் சான்றா,
அன்றவன் கேளீர் யான் [illegible] த்தேயல்
தனைசால் பண்டிதர் தமக்குத் தருவாளெ
என்பா லாழியை யீந்திருப் பாயே.

போர்:—எனக்கா நீர்வைத் திருப்பதாய்ச் சத்தியம்
உரைத்ததும் நானுமக் களித்ததுமாம் அவ்வாழியினை
அடைந்தனன் ராகவே லப்பண் டிதரந்
நாடு மென்மனையினி னாளுகா திருக்க.
உமைப்போல் யானு முதாரமு ளாவேன்.

என்வயி னானதொர் நிலையெனை னைற்கே
என் தேகம், என் கணவன் படுக்கை,
இவைகளை யவர்க்கிலை யென்னேன் னியானே.
அவரைநா னறிவேன், அதிலைஐ யம்பிலை.
இல்லினை யிகந்துநீர் என்றும் வதிர்.
எனைஆர்கஸ் போல் காத்திடுவீரே.
இலாமல் எனை நீர் தனியனை யிருத்திலப்
பண்டிதர் எனக்குப் படுக்கைத்தோழராய்
அமைவார், என்றன் கனத்தின் மேலாணை.

நெரி:—இலைகதப் தெளிவு பிலைபெனை னியாதும்.
ஆதலிற் றனித்தெனைவிட்டுநீர் அகல்வதைக்
குறித்துயோ சித்துக் கொள்ளுவீராக.

கிரா:—நன்று, நீ யவ்வணம் செய்வாய் நானும்
அவனைக் கண்ணுறா திருப்பேனுக.
எனினில் என்கரத் தவன்அகப் பட்டால்,
அவற்குப் பிழைப்பிலா தாக்குவேனே.

அந்:—இந்தச் சண்டைகட் கெல்லாங் காரணம்
அதிட்டமில் நானே.

போர்:— ஐயா, நீவிர்
ஒழிக, யாமுமைக் குபசரிக்கின்றோம்.

பசா:—போர்ஷியா வென்அத்தி போக்கொரு குற்ற
இந்தப் பிழைபொறு. இக் கனம்பின ரெல்லாம்
கேட்க வென்னெதிர் விளங்குமுன் கண்கள்
சான்றுச் சாற்றுவன்.

போர்:— பாரும் அதனை,
என்னிரு கண்களிற் றன்னைப் பிரட்டையாக்

காண்கிறார். ஒவ்வொரு கண்ணிலு மொவ்வொன்றும்.
உம்முடை யிரட்டை புத்தியின் உண்மையும்.
அதுநம் பத்தகு மாணையே யாகும்.

பசா:—இதனை யிப்படி வதைத்தே னாய்.
இப்பிழை பொறுத்தி, என்றன் பிராணை
இனியெக் காலுஞ் சத்தியம் பிழையேன்.

அந்:— (போர்ஷியாவைப் பார்த்து)
அவராக்கதற்கா ஒரு காலென்
உடலை யீகவினேன். உம்முடை நாயகன்
ஆழியைப் பெற்ற வனில் ராவிடில்
அஃதுமுற் றமாய மடைந்திருக்கும்.
புத்தியூர் வகமா யினியெக் காலும்
உமது காதலருண்மையி னிற்பவர்
என நா னினும்பந் தப்படுவேன், நான்
ஆவியைக் கருவை யாக மாகவே.

போர்:—ஆயினீ ரவர்க்கும் பிணையாகுவீராக,
இதையவர்க் களித்து மற்றதைப் பார்க்கினும்
நன்கு காத்திட நவின்றிடுவீரே.

அந்:—பசானி யோப்பியுவே! இதே பக்கி
மாவில வாழ்நாத் திட வாணையுமையும்.

பசா:—இதுவே பண்டிதர்க் கீந்தது, சத்தியம்.

போர்:—ஆச்சரி யம்நீ ரீனொரு மடந்திர்,
ஒருகடி தம்பிதோ உள்ளது, அப் காசமாய்ப்
படிமின்; இன்னது பல்லாரி யோடு
ஆலிருந் தப்ப வந்தது வாசிமே,
அதனிற் போர்ஷியா பண்டித னவடன்

இலேககன் நேரிசா வென்லாண்பீர், நீர்
சென்ற வுடனென் சென்றேன் இக்கணம்
திரும்பினேன், இதுவென் னில்விற் புகுந்தி
லேன்.
யன்புதற் கிங்குள லாரென்சோ கரி.
நல்வர வுடக்கந் தோனியோ நவில்கிறேன்;
எதிர்பார்த் ததனினு மேற்றமா மினிய
சங்கதி யுமக்குச் சாற்றிடுவேனுன்.
சீக்கிர மீக்கடி தத்திறந் திடுமின்;
உமது முக் கப்பலு முறுபொரு ளுடையவா
வல்லாயிற் றுறைமுகம் வந்தது காண்பீர்.
இந்தக் கடிதமென் வினோதச் செயலால்
என்கைப் பட்டதென் றறியவா ளீர்
முயலன் மின்.

அந்:— நான் மோனமா யிருப்பேன்.

பஸா:—நீ பண் டிதனே? நினையறிந் திலனே.

கிரா:—நீயே லேககனே? நினையறிந் திலனே.

அந்:—இனியமா தேயெற் குயிர்வாழ் வீந்தனிர்.
வெளிவி இதனு லென்றன் கப்பல்கள்
துறைமுகஞ் சுகமாய்த் துன்னிய துணர்ந்தேன்.

போர்:—என்லா ரென்சோ என்றனி லேககன்
உமக்கு நற்செல் வார்த்தை யுடையான்,

நேரி:—ஆம்அவ் வவர்க்குப் பணமிலா தீவேன்.
அதனைத் திருப்பூ தன்மற்
பிறக்கிடுங் காலவ னிடத்துள வெல்லாச்
செல்வமு நிரும் ஜெசிக்கா தாகுக

அடைந்திடு முரிமை யளித்திடு கின்ற
முக்கிய தான முறியீந் திடுவேன்.

லாரென்சோ.—வனப்புடை மாதரே! வறிய மானுடர்
தம் வழிப்பிர சாதம் வழங்குகின் றீரால்.

போர்ஷியா:—விடியற் கால மானது. விசேடம்
எல்லா மினு நீர் முழுவது மறியீர்
எனல்திச் சயமே. எல்லா நாமும்
உள்ளே செல்வோம். உண்மை யெதிர்மொழி
ஈவதா வாணை யிட்டுநம் வினுக்கட்
கெல்லா மெதிர்விடை மெய்யா விளம்புவோம்.

கிராஷியானோ:—நல்லது நானுயிர் வாழ்ந்திடு மளவும்
நேரிசா மோதிரந் தனைநீக் காமற்
பாதுகாத் தற்குப் படும்பயம் போல
வேறெதற் கும்பய மேவேன் வாழிய.

(எல்லாரும் போதல்)

முற்றிற்று.



அநுபந்தம்.

பக்கம்.	வரி.	குறிப்புரை.
1 :	1-10	அந்தோனியோவுக்குக் காரணமில்லாமலே உண்டான சஞ்சலம் பின்வருவதைக்காட்டும் முற்குறி.
4 :	70	இருமுக ஜானஸ்-ஜானஸ், லத்தீன் புராணகதைத் தெய்வங்களில் ஒன்று. இதற்கு இரண்டு முகங்களுண்டு. ஒன்று சிரித்தமுகம், மற்றொன்று துக்கமுகம். இருவகை மனிதர் இங்குக்கூறப்படுதலால் இவ்வகைத் தெய்வம் இங்குப் பொருத்தம்.
,, :	76	நேஸ்தார்-கிரேக்க வீரரில் ஒருவர். எவ்விதமான பரிகாசமும் இவருக்கு நகை விளைக்காது. எப்பொழுதும் கடுமுக முடையவராகவே இருப்பார்.
6 :	117-119	விசனத்தில் நாம் நெட்டுயிர்ப்பிடுங்கால் ஒவ்வொரு பெருமூச்சிற்கும் ஒவ்வொரு துளி இரத்தம் கெட்டுவிடுகிறது என்பது பூர்வீகர் அபிப்பிராயம். இது பிழை.
,, :	124	கடுகடுப்புடையவனுக்குக் காமாலை வரும் என்பது வைத்திய சாஸ்திர சித்தம்.
9 :	190-206	ஒரு அம்பை எய்து அது தொலைந்து போயின், அதைப்பெற மற்றொரு அம்பை அதேவிசையுடன் எய்யின், பின்னெய்தது முன்னெய்ததற்குச் சற்றேறக்குறையச் சமீபத்தில் விழு

பக்கம். வரி. குறிப்புரை.

மார்தலால், இரண்டு அம்புகளையும் பெறலாம்; அதுபோல முன் எனக்கு நீர் தந்தகடன் செலுத்தப்படாமலிருத்தலில் அது நீரிழந்ததே ஆகலின் இன்னும் ஒருமுறை நீர்கடன் உதவுவீரேல் நான் சாக்கிரதையாகவிருந்து உம்மிடத்தில் நான் பட்டுள்ள கடனை யெல்லாம் தீர்த்துவிடும் வகை தேடுவேன்.

10 : 217 பெல்மண்டு-ஒரு நகரத்தின் பெயர்.

222-223 கேற்றோ புத்திரி-கேட்டோவின்புத்திரி. இவள் புருடசின் மனைவி. இவள் பெயரும் போர்ஷியா, கற்பு, புத்திக்கூர்மை, நற்குணம் முதலியனவகளில் சிறந்தவள். இந்நாடகத்தில் கூறப்படும் போர்ஷியாவும் அவளுக்குச் சமமானவள்.

229 தமிழர் கருங்குழலைக் கருதுவதுபோல் ஐரோப்பியர் பொன்னிறக் கூந்தலைப் புகழுவர்.

232-234 பொன்மயிர் கால்சோ என்னும் தேசத்தில் இருந்ததாகவும் அதை மிகுந்த சிரமத்துடன் ஜேசன் என்பவன் சென்று பெற்றதாகவும் ஒரு புராணக்கதை.

அளவில்லாதவர் ஆகிய ஜேசன்கள்.

ஜேசன் கட்டப்பட்டுப் பொன்னுரோமம்பெறக் கால்க்கோவுக்குச் சென்றதுபோல, போர்ஷியாவை மணம்புரிய விருப்புற்ற அநேகர் பெல்மண்டு நகரத்திற்கு மிகுந்த கட்டத்துடன் வருகிறார்கள்.

பக்கம். வரி. குறிப்புரை.

17 : 140-148 இங்கிலீஷ்காரன் ஒருவன் ஸ்காட்லண்டு தேசத்தான் ஒருவனை ஒரு அடி அடித்தான். அவனுக்குத் துணையாக பிரெஞ்சுக்காரன் ஒருவன் வந்தான். அவனுக்கும் ஒரு அடி விழுந்தது. என்பது கருத்து.

சாசனம் எழுதுவதில் அதை யெழுதிக்கொடுப்போன் முதலிலும் அவனுக்குப்பிணையாயிருப்பவன் அதன் கீழும் எழுதுவது வழக்கம்.

இங்கிலீஷ்காரனுக்கு ஸ்காட்லண்டு தேசத்தானும் பிரெஞ்சுக்காரனும் ஒன்று சேர்ந்தாலும் ஈடல்ல என்பதைக் குறிப்பிக்கிறது.

19 : 188 சிபில்லா-பின்வருவதை முன் சொல்லுபவள். அவளை அப்பாலோ என்னும் தெய்வம் மோகித்து உனக்கு என்ன வரம்வேண்டுமென்று வினவ, தன்கையில் பிடித்த ஒரு பிடி புழுதியிலுள்ள புழுதிகளின் எண்ணைக்கொண்டவயது தனக்குத் தரவேண்டும் என்றுகேட்டாள்.

,, 190 டயானா-கற்பு, கலியாணம், இவைகளுக்கு அதிஷ்டான தெய்வம். இது எப்பொழுதும் கன்னியாகவே இருப்பது.

22 : 1 “டக்கற்று”:—ஒருவகை நாணயம்.

23 : 22-27 டிரிப்போலி, இண்டீசு, மெக்சிகோ, இங்கிலாந்து—பற்பல இடங்கள்.

,, 25 பரிவர்த்தன சாலை—வர்த்தகர்கூடி வர்த்தக விஷயம் பேசுமிடம்.

பக்கம்.	வரி.	குறிப்புரை.
24 :	51	நாசரத்து தீர்க்கதரிசி—இயேசுக்கிறிஸ்து.
,,	64	இச்சகத்தண்டற்காரன் — இச்சகம் பேசுகின்ற தண்டற்காரன்; அதாவது வரி பெறுவோன். ஷைலாக் தனக்கு அந்தோனியோவின் மேலுள்ள வெறுப்பைக் காட்டுகிறான்.
25 :	74	குலம்—யூதகுலம், இவர்கள் கிறிஸ்து பிறந்ததாக ஏற்றுக்கொள்ளார்.
26 :	96-104	பசானியோவைப்பார்த்துச் சொல்லுகிறது இது.
		முதலிய ஆபிராம், யாக்கோபு, லபன், இவர்கள் கிறிஸ்தவர்களில் முன்னோர்கள்.
28 :	152	நாணயச்சாலை— பரிவர்த்தன சாலை போன்றது—பணம் கொடுத்து வாங்குமிடம்.
	154	தோள் விதிர்ப்பு—தோளை அசைத்தல். இது ஆங்கிலேயர் முதலியோரின் வழக்கம்.
34 :	39	சுலைந்தான் சோலைமான்—துருக்க தேசச்சக்கரவர்த்தி. இவன் பேர்ஷியா தேசத்தின் மேல் படையெடுத்துச்சென்றவன்.
,,	41	சோபியா—பேர்ஷியா தேசத்தரசன்.
35 :	49	எர்க்குலீஸ்—வல்லமையே உருவாகிய ஒருதெய்வம்.
		லிக்காஸ்—எர்க்குலீஸின் வேலைக்காரன்.
,,	53	ஆல்சிடிஸ்—எர்க்குலீஸின் வேறொரு பெயர்.

பக்கம்.	வரி.	குறிப்புரை.
37 :	...	லான்சிலட் காபோ என்பவன் ஒருவித விகடக்கூத்தன். இவன் சொல்லுவதில் சில பரிகாசமாயும், சில அருத்தமற்றவையாயும், சில ஒன்றற்கு மற்றொன்றை மாறிச் சொல்லுவனவாகவும் இருக்கும்.
40 :	75-76	"வாலிப லான்சிலட் துரையைப்பற்றியா கேட்கிறீர்" என்று வெளிப்படையாகச் சொல்லுகிறான்.
41 :	93	மூன்று சகோதரிகள்—பூர்விக புராணக் கதையின்படி விதிப்பயன் கொடுப்போர் மூவர்.
42 :	133-134	லான்சிலட் பேசிக்கொண்டே முழங்கால்படியிடுகிறான். காபோ அவனை எழுந்திருக்கச் சொல்லுகிறான்.
,,	138-140	பரிகாச வார்த்தைகள்.
43 :	154	டாபின் குதிரையின் பெயர்.
47 :	242	'சிபாரிசு' 'மயில்' 'தொப்பி' 'தீர்மானம்' என்னும் பதங்களும் இன்னும் சில நூதன பதங்களும் இந்நூலின்கண் உபயோகப்படுத்தப் பட்டுள்ளன.
,,	246	கடவுளின் கிருபை பொருட்செல்வத்திற்கு மேலானது என்னும் கருத்துள்ள பழமொழி.
,,	253-254	லியோநார்டோவிடம் சொல்லும் வார்த்தைகள்.
,,	257	விவிலிய புஸ்தகம்—கிறிஸ்தவர்களின் வேத புஸ்தகம்.

பக்கம். வரி. குறிப்புரை.

,, 259 இத்தலி — ஒரு தேசம்.

,, 264 இக்கே—கை ரேகைகளைச் சுட்டிச் சொல்லுகிறான்.

49 : 293 பெல்மண்டு — போர்ஷியாவின் நகரம்.

50 : 316 மறைத்துக் காட்டுகிறான்.

,, 317 ஓம் என இசைத்தலும்.

53 : 3 ஐரோப்பியருக்குள் புருஷரும் ஸ்திரீகளும் மாறுவேடம் தரித்து நடிப்பது முன்வழக்கம். இராக்காலத்தில் விருந்துண்ட பின்னரே இது நிகழும்.

56 : 4 என்ன, ஜெசிக்கா. இவ்வார்த்தைகள் ஜெசிக்காவையழைக்க.

,, 6 என்ன, ஜெசிக்கா — முன்போல்.

,, 8 கேட்டிலே ஜெசிக்கா—முன்போல். லான்சிலட்டுடன் பேசும்பொழுதே ஜெசிக்காவைக் கூப்பிடுகிறான்.

57 : 21-26 கனவில் பணப்பையைக் காணின் தீமை விளையும் என்பது யூதருடைய கொள்கை.

,, 29 லான்சிலட் ஷைலக் கூத்தனுக்கே 'வரவை' என்று சொல்லுவதற்குப் பதில் 'வசவை' என்று சொல்லுகிறான்.

பக்கம். வரி. குறிப்புரை.

,, 31 ஷைலாக் தான் வசவை எதிர்பார்க்கிறதாகச் சொல்லுகிறான்.

,, 36-39 விபூதித்திருவிழா. இது புதன்கிழமையன்று வருவது. ரோமன்காதலிக் கிறிஸ்தவர்களின் பண்டிகைகளில் ஒன்று. 'ஈஸ்டர்' என்பது மற்றொரு பண்டிகை. திங்கட்கிழமை காலையும்புதன்கிழமை மாலையும் ஒன்றாக வந்ததாகவும் அப்பொழுது தன் நாசியிலிருந்து இரத்தம் வந்ததாகவும் கூறுகிறான்.

58 45 வேஷக்கூத்திற்கு முகத்திற்கு மெருகுதைலம் பூசிக்கொள்ளுகிற வழக்கம்.

,, 54-55 அடா—மொழிமோ—லான்சிலட்டிடத்தில் சொல்லுகிறான்.

,, 61 ஆகாரேச்சம்— ஆகார் என்பவளின் வமிசத்தான். யூதர்களால் இகழப்படும் ஒரு சாதியிற் சேர்ந்தவன். ஆபிராம் என்பவனுடைய மனைவி சாரா என்பவளின் பெண்ணடிமை ஆகார்.

60 : 10 சித்தசன் கபோதம்—மன்மதன் தேரிழுப்பவை புறாக்கள். ரோமர்களில் மன்மதனுக்குத் தாய் வீனஸ் என்பவள் என்பதும் அவளே இன்பத்திற்கு அதிஷ்டான தேவதை யென்பதும் கொள்கை.

62 : 60 ஒருவன் வெட்கமுடையின் அவன் முகம் சிவப்பாகும். இதை ஐரோப்பியருள் காணலாம்

பக்கம். வரி. குறிப்புரை.

76: 50-58 ஐரோப்பியரில் தாழ்ந்தோர் உயர்ந்தோர் முன் தலைப்பாகையில்லாதிருத்தல் வேண்டும்.

79: 110 துரையென்று வேடிக்கையாகச்சொல்லுகிறான்.

„ 112 வெனிஷிய — வெனிஸ் நகரத்திய.

„ 118-122 குளிர் தேசங்களில் முதுவேனிற் காலமே அதிகமாகக் கொண்டாடப்படும் காலம்.

88: 203 லீயா — ஷைலாக்கின் இறந்துபோன மனைவி.

92: 62-66 அன்னப்புள் பாடிக்கொண்டே இறக்கும் என்பது ஆங்கிலேய முன்னோர் துணிவு.

93: 73 கிறிஸ்தவர்களின் கலியாணம் தேவாலயங்களில் நடத்தப்படும். அதற்குக் குறியாக காலைமுதல் அப்போதைக்கப்போது மணியடித்தல் வழக்கம்.

„ 71-84 டுரோஜன் — டிராய் நகரத்தான்.

ஆல்சிடிஸ் என்பது எர்க்கியுலிஸுக்கு வேறொரு பெயர். கதைவருமாறு; டிராய் நகரம் கடற்கரையிலுள்ள பட்டினம். அதைக் கடல் வெள்ளம் கொண்டு போகாதபடி ஒரு மதில் வருணனுதவியாற் கட்டப்பட்டது. வருணனுக்குக் கூலிகொடாததால் அந்தக்கரையுடைய நாட்டையெல்லாம் வெள்ளத்தால் அழித்துவிடுவதாக அவன் பயமுறுத்த, அந்நாட்டு அரசனுடைய மகளைத் தனக்குப் பலியிட்டால்

பக்கம். வரி. குறிப்புரை.

தான் அழியாதிருப்பதாக அவன் சொன்னான். அப்படியே அவளை ஒருகடலரக்கனுக்குப் பலியாக ஒரு பாறையில் கட்டி வைத்தனர். அவ்வரசன் தன்மகளை சிறைநீப்பின் தனக்கு வியாழன் கொடுத்த இரண்டு குதிரைகளைப் பரிசளிப்பதாக எர்க்கியுலீசுக்குச் சொன்னான். மிக்க வல்லமையையுடைய எர்க்கியுலீஸ் அவளை விடுவித்தான்.

93: 88-95 ஒரு புருஷனும் ஒரு ஸ்திரீயும் ஒருவரையொருவர் பார்த்தவுடன் அன்புண்டாகிறது. அதாவது அன்பு முளைக்குமிடம் கண். அவ்வன்பு விருத்தியாவது ஒருவரை யொருவர் அடிக்கடி பார்ப்பதால். இவ்விதம் பார்ப்பதில் ஒருவர் குணம் ஒருவருக்கு ஒவ்வாவிடில் அவ்வன்பு இலதாகி விடும். அதாவது தொட்டிலாகிய கண்ணிலேயே இறந்துவிடும். அப்படிப்பட்ட பயனற்ற அன்பிற்குச் சாவுமணி அறையப்படட்டும்.

94: 109 மார்ஸ் — யுத்தத்திற்கு அதிஷ்டான தேவதை.

95: 120-123 அழகு செய்யப் பூண்முதலியவற்றையணிவது அணிபவரைக் கனமுடையவராக்காது பிறரால் இலேசாக அதாவது கேவலமாக நினைக்கும்படி செய்வதே.

„ 123-129 பெண்கள் வேறு உரோமத்தைத் தங்கள் தலையிற்றரித்து அழகு செய்வதை யிகழ்கிறார்.

பக்கம். வரி. குறிப்புரை.

„ 132 இந்தியன் எழில்-கறுப்புநிறம்.

„ 136 அழகு கபடமார் மொழி.

„ 137 மைடஸ்—பிரிஜியா தேசத்தரசன். அவன் தான் தொட்டதெல்லாம் பொன்னாக வேண்டுமென்று பிரார்த்தித்து அவ்வரம் பெற்றான்; பின்பு அவன் சாப்பிட உணவையும் குடிக்கத் தண்ணீர் முதலியவைகளையும் தொட்டபொழுதெல்லாம் அவைகள் பொன்னாய் மாற, அன்ன பானாதிகளில்லாமல் பசியால் வருந்தி அவ்வரத்தைப் பிறகு மாற்றிக் கொண்டான்.

114 : 58 படுஆ—ஒருநகரம்.

„ 64 பால்தசார் என்பவன் பதில் சொல்ல ஆரம்பிப்பதைத் தடுக்கிறாள்.

118 : 26-27 சில்லா, கேரிப்டீசு—இத்தலி, சிசிலி இவ்விரண்டு தேசங்களுக்கு மத்தியில் மெசினா ஜலசந்தியிலுள்ள இரண்டு பாறைகள். இவைகளின் மத்தியில் செல்லுங்கால் கப்பல்கள் இவைகளில் தாக்கிக் கெடுதி நேரிடுவது வழக்கம்.

„ 40 கரிமேல் வைக்க—கரியினால் நெருப்புண்டாக்கி அதில் பன்றிக்கறியைத் தின்னும் பக்குவமாக்க.

பக்கம். வரி. குறிப்புரை.

119 : 64-79 லான்சிலட் வார்த்தைகளின் அருத்தங்களை மாற்றி விகடம் பேசுகிறான். 'அவர்களை யுணவுக்கு ஆயத்தமாயிருக்கத் தெரியப்படுத்து' என்பது நாங்கள் உண்ண அவர்களைப் போசனம் ஆயத்தஞ் செய்யச் சொல்லு என்றருத்தம். அவன் அவர்கள் சாப்பிட ஆயத்தமாயிருக்கிறார்கள் என்கிறான். 'அவர்களை யுணவு சித்தமாக்கக் கட்டளையிடு' என்பது நாங்கள் சாப்பிடப் பரிமாறச் செய்யும் என்று அருத்தம். அவன் சமையல் ஆய்விட்டது என்கிறான்.

மேசைமேல் துணிபோட்டு அதன்மேல் வைத்துச் சாப்பிடுகிறது ஐரோப்பியர் வழக்கம். அதற்கு மேசையை 'மூடு' என்று சொல்லுகிறது. அவன் உயர்ந்தோர் முன் தாழ்ந்தோர் தலையை மூடாமலிருக்க வேண்டியதைக் குறித்துப் பேசுகிறான்.

126 : 65 தோலோத்து — தோலினால் செய்த ஊதுகருவி.

131 : 179 பிதகோராசு ஒருகிரேக்கதத்துவசாஸ்திரி. இவர் கொள்கை ஜன்மாந்தரம் உண்டு என்பது.

137 : 313 டானியல். கிறிஸ்தவக் கிரந்தத்தில் ஞானமும் புத்திக் கூர்மையுமுடைய ஒரு வாலிபர்.

„ 328 ஹிதயந்—ஹிதயங்

141 : 415 பாரபஸ். இவன் ஒரு திருடன், கொலைக்காரன்; கிறிஸ்துவிலும் இவனை யூதர் மேலாக மதித்தனார். கிறிஸ்தவன் ஒருவன் தன்மகளைக் கலியாணஞ் செய்வதிலும் இத்துன்மார்க்கன்

பக்கம். வரி. குறிப்புரை.

மரபில் ஒருவன் அவளைக் கலியாணஞ்செய்வது தனக்குப் பிரியம் என்கிறான்.

146 : 548-553 கிறிஸ்தவர்களுள் ஞானஸ்நானம் பெறுவது வழக்கம். இது கிறிஸ்தவனாகிறதற்காகச் செய்யப்படும் சடங்கு. இதில் ஞானஸ்நானம்பெறுபவனுக்கு இருவர் ஞானத்தந்தையராகக்குறிக்கப்படுவர். இவ்விடத்தில் கிராஷியானோ சொல்வதின் அருத்தமாவது நான் உன்னுடைய வழக்கைத் தீர்க்கும் நியாயாதிபதியாக இருப்பின் 10 பேர்களை ஜூரிகளாக வைத்துக்கொண்டு உனக்குத் தூக்குத்தண்டனை விதிப்பேன்.

153 : 8 கிரேசிட் என்பவள் ஒருபெண். அவள் கிரேக்கரின் கூடாரங்களுள் இருக்க டிராயிலஸ் என்பவன் மதில்மேலேறி அவள் வெளியில் வருவதைப் பார்த்துக் கொண்டிருந்தான் என்பது. இதுவும் பின்வருவனவும் காதலரை நோக்கி காதலிகளும் காதலிகளை நோக்கிக் காதலரும் சந்திரிகையில் செய்தவை.

12 திஸ்பி என்பவளும் பிரமஸ் என்பவனும் ஒருவர் மீது ஒருவர் ஆசைப்பட்டார்கள். அவர்கள் கலியாணஞ் செய்வதை அவர்களின் பெற்றோர் ஒப்புக்கொள்ளவில்லை. ஆகையால் இரகசியமாக ஓரிடத்தில் ஒருவரையொருவர் சந்திக்க ஏற்பாடு செய்துகொண்டார்கள். அவ்விடத்திற்கு திஸ்பி முதலில்வர அவ்விடத்திலிருந்த ஒரு சிங்கத்தின் நிழலை நிலவு வெளிச்சத்தில் கண்டு ஓட்டம்பிடித்தாள் ஓடும்பொழுது மேலாடை கீழேவிழுந்துவிட்டது. அப்பொழுதுதான் ஒரு எருதை அச்சிங்கம் கொன்றிருந்ததால் அவ்வுதிரம் இத்துணி

பக்கம். வரி. குறிப்புரை.

யில் பட்டது. பிரமஸ் அவ்விடம் வந்து இரத்தம் தோய்ந்த திஸ்பியின் மேலாடையைப்பார்த்து அவள் கொல்லப்பட்டாளாக நினைத்துத் தான் இறந்துவிடுகிறான். திஸ்பி திருப்பிவந்து பிரமஸ் இறந்து கிடப்பதைக்கண்டு தன்னைக் குத்திக் கொள்ளுகிறாள். இது ஒரு கதை.

153 : 15 டீடோ என்பவள் ஈனியஸ் என்பவனைக் காமுற்றாள். அவன் அவளை விட்டு விட்டான். இவ்விதம் திரஸ்கரிக்கப்பட்ட காதலுக்கு வில்லோக்களை ஓரடையாளம். வில்லோ ஒரு மரம்.

154 : 20 மேடியா என்பவள் தன் மாமனாராகிய ஈஸன் என்ற கிழவனை மந்திரஞ் செய்து வாலிபனாக்கினாள்.

37 'இரவோ' — இரவில் நடந்த செய்கைகளைச் சொல்லுவேன்.

155 : 48 சிலுவை—இயேசுக்கிறிஸ்துவைக் கொன்றதைக் குறிப்பது. அவ்வடையாளத்தைக் கிறிஸ்தவர் கொண்டாடுவார்கள்—இங்கே அச்சிலுவைகளிருக்குமிடங்கள்.

" 58 சோலா—ஓர்விதக் கூச்சல்.

156 : 94 டயானா—சந்திரன்.

157 : 111 ஆர்வியஸ்—கிரேக்க தேசத்துப் புராண வித்வானும் கவியும்.

பக்கம். வரி. குறிப்புரை.

158 : 123 எரிபஸ்—நீசம்; இருள் மயம்.

159 : 152 எண்டிமியன் என்பவன் ஒரு இடைப்பையன். அவனுடைய அழகிற்காகச் சந்திரன் (டயானா) அவனை லட்மஸ் மலையின் சிகரத்தின் தூங்கச்செய்து பின் அவனை ஒவ்வொரு இரவும் முத்தமிட்டதாகக் கதை.

,, 152-154 சந்திரன் அஸ்தமித்து விட்டது அல்லது அஸ்தமிக்கப்போகிறது என்பது பொருள்.

160 : 179-181 பூமியுருண்டையாய்ச் சூரியனைச் சுற்றிவருவதால் சூரியனுக்கு நேரேயிருக்கிற பூமியின் பக்கம் வெளிச்சமுடையதாக இருக்கையில் பூமியின் மற்றொரு பாகம் சூரியனுக்குச் சமீபத்தில் இல்லாததால் இருட்டாக விருக்கும். இவ்விடத்தில் பசானியோ தன் மனைவியைப் பார்த்து அவ்விதம் இருட்டாக இருக்கிற இடத்திற்கு நீபோனால் அங்கும் சூரியனுடைய வெளிச்சமிருப்பது போல் பிரகாசமாக விருக்குமென்று புகழ்ந்து கூறுகிறான்.

182 நகை—இன்பம்.

,, 183 நகை—சிரிப்பு.

,, 184 அத்தகை—நகைக்காளாகும்.

166 : 324 ஆர்கஸ்—நூறு கண்களையுடைய ஒரு பௌராணிக பிராணி.